# صحيح البخاري

# புஹாரீயின் பொன் மலர்கள்

கவிமணி மௌலவி
எம்.எச்.எம். புஹாரீ (பலாஹீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புஹாரீயின்
# பொன் மலர்கள்

ஸஹீஹுல் புஹாரீயில் உள்ள
500 ஹதீஸ்கள் கவிதை வடிவில்

கவிமணி, மௌலவி
**எம்.எச்.எம். புஹாரீ (பலாஹீ)**

**பைத்துல் பறகத் பதிப்பகம்**
காத்தான்குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஹாரீயின் பொன் மலர்கள்
- ஸஹீஹுல் புஹாரீயில் உள்ள 500 ஹதீஸ்கள் கவிதை வடிவில் -

நூலாசிரியர்: கவிமணி மௌலவி எம்.எச்.எம். புஹாரீ (பலாஹீ)

முதல் பதிப்பு : நவம்பர் 2020
பக்கங்கள்: 126 + XX
பதிப்புரிமை : ஆசிரியருக்கே

வெளியீடு:
பைத்துல் பறகத் பதிப்பகம்,
இல. 135/01, ஊர் வீதி,
காத்தான்குடி.
தொலைபேசி: 0772355980

அட்டைப்படம் மற்றும் தளக்கோளம்:
டிசைன் டெஸ்க், ராஜகிரிய, 0765689699

அச்சுப்பதிப்பு : எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிடட்

Buhareeyin Pon Malarkal

Author :
Kavimani, Moulavi M.H.M. Buhari (Falahi)
First Edition: November 2020
Pages : 126 + XX

Published by:
Baithul Barakath Publication,
No. 135/01, Old Road,
Kattankudy,
Tel: 0772355980

Cover Design & Layout :
Design Desk, Rajagiriya. 0765689699

Printed by :
Express Newspapers (Ceylon) (Pvt) Ltd.

ISBN: 978-955-8633-01-4

Price : Rs. 400.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

நபி மொழி நாற்பது, நபி மொழி நூறு போன்ற நூற்களை யாத்து நபி (ஸல்) அவர்களின் சுன்னாவுக்கு அணிகலன் சேர்த்த கவிமணி மௌலவி எம்.எச்.எம்.புஹாரி (பலாஹி) அவர்கள் புனிதமிக்க ஸஹீஹுல் புஹாரி எனும் கிரந்தத்தில் ஐநூறு ஹதீஸ்களைத் தேர்ந்து அவற்றின் பொருளைக் கவிதைகளாய் வடித்து புனித ஹதீஸ்கள் மீதுள்ள தனது பற்றுறுதியை வெளிப்படுத்தியுள்ளதுடன், தமிழ் மொழியில் ஹதீஸ் உலகிற்கு பெரும் பங்களிப்பொன்றையும் ஆற்றியுள்ளார்.

புனித ஹதீஸ் கிரந்தங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு நூலாக வெளியிடப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் கவிஞர் அவர்கள் ஹதீஸ்களைக் கவிதையில் தருவது வாசகர்க்குப் பெரும் விருந்தாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ் மொழியிலும், கவிதை எழுதுவதிலும் வல்லவர்களான பலர் இது போன்ற முயற்சியில் வெற்றி பெற்றுள்ளனர். புலவர்மணி ஆ.மு. ஷரீபுத்தீன் அவர்கள் நபி மொழி நாற்பது எனும் பெயரில் நாற்பது ஹதீஸ்களை வெண்பா உருவில் தந்தார். மஹரகம கபூரிய்யா அறபுக் கல்லூரியின் அதிபராகவிருந்த இந்தியாவைச் சேர்ந்த உமர் ஹஸரத் அவர்கள் “நாற் பயனன்னூல்” எனும் பெயரில் நாற்பது ஹதீஸ்களைக் குறள் வடிவில் தந்தார். அவர் ஒரு ஹதீஸைப் பின்வருமாறு குறள்வடிவில் கூறுகிறார்.

தனக்கெனத் தான் வேண்டும் ஒன்றைப் பிறர்க்கெனவும்
வேண்டாதான் முஃமின் அலன்

அதனை எமது கவிஞர் புஹாரி அவர்கள்,

தனக்குத்தான் விரும்புவதைத் தனதன்புத் தோழருக்கும்
இணக்கமுடன் விரும்புனரே ஏற்றமுறு முஃமினென்றார்

எனக் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கா.அப்துல் கபூர் அவர்கள் "நாயகமே" எனும் பெயரில் சில ஹதீஸ்களுக்கு கவி வடிவம் தந்தார். அவர்,

எவர் நாவால் கரங்களினால் எழிலுறுமோ மனித குலம்
அவர் சிறந்த முஸ்லிமென அருளும் நபி நாயகமே

என்று கூறிய ஹதீஸை எமது கவிஞர் அவர்கள்,

கரத்தாலும் நாவாலும் கடுந்தீங்கு செய்யாதார்
சிறந்தோங்கும் முஸ்லிமெனச் செழிப்பார்கள் செகத்தின்கண்

எனக் கூறுகிறார்.

இவ்வாறு அருமைத் தூதர் (ஸல்) அவர்களின் ஹதீஸ்களுக்குக் கவி வடிவம் தந்து நிலைத்து நிற்கின்றனர் கவிஞர் பெருமக்கள். அந்த வரிசையிலே எனது நண்பர் புஹாரி அவர்கள் ஸஹீஹுல் புஹாரி கிரந்தத்துக்கு கவிதை யாத்துள்ளமை அவரது தகைமையையும் திற மையையும் பளிச்சிடவைக்கிறது. எளிமையான அவரது நடை வாசிப் பதற்கு இன்பத்தை ஏற்படுத்துகிறது.

மௌலவி புஹாரி அவர்களுக்கு முன் ஹதீஸ்களை கவியாக்கும் கவிஞர்களின் முயற்சிகளை எடுத்து நோக்கும் போது அது நூற்றுக்குட்பட்ட ஹதீஸ்களை கவியாக்கும் பணியே நடந்துள்ளது. ஆனால் கவிஞர் சகோதரர் புஹாரி அவர்கள் ஐநூறு ஹதீ-ஸ்கள் என்ற உயரத்துக்குச் சென்றுள்ளமை எவராலும் இலகுவில் எட்ட முடியாத தூரமாகும். (அல்லாஹ் அவருக்கு நற்கூலி அளிப்பானாக).

ஹதீஸ்கள் தமிழ் மொழிக்கு மாற்றப்படுவது, அவை கவிதைகளாக ஆக்கப்படுவது போன்ற முயற்சிகள் தற்போது இடம்பெறுவது பெரிதும் பாராட்டத்தக்க விடயமாகும். ஏனெனில் ஹதீஸ் பெற வேண்டிய இடத்தை தமிழ் கூறும் நல்லுலகு மிக அண்மைக் காலமாகத்தான் வழங்க முன்வந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தின் மூலாதாரங்களில் முக்கியமானதும் அல்குர்ஆனின் விளக்கவுரையுமான ஹதீஸைப் பொறுத்தவரை எமது சமூகத்தில் ஏன் அறபுக் கல்லூரி பாடத்திட்டங்களில் கூட அது முக்கியத்துவம் பெறவில்லை. புலூகுல் மறாம், மிஷ்காத், புஹாரி போன்ற கிரந்தங்களில் ஒரு சிறு பகுதியையே எமது மாணவர்கள் பயின்று பட்டம் பெற்று வெளியேறினர். ஆனால் அதே நேரத்தில் வேறு கலைகளில் அவர்கள் நிறையப் பயின்றனர். பிரசங்க மேடையை அலங்கரிக்க கதைகள் கூறும் கலைகள் எமது பாடத்திட்டங்களிலும் மாணவர் உபயோகத்திலும் முக்கியத்துவம் பெற்றன. இதனால் இன்றும் கூட சரி, பிழை பார்க்காமல் இஸ்லாத்தின் அடிப்படைக்கு உடன்படுகிறதா? இல்லையா? என்று கூட நோக்காமல் எத்தனையோ கிஸ்ஸாக்கள் மிம்பர் மேடைகளில் கூறப்படுகின்றன. குர்ஆன் ஹதீஸ் களுக்கு முரணான குழப்பங்களை ஏற்படுத்தும் சிந்தனைகள் கூட எமது பாடத்திட்டத்தில் இடம் பிடித்தன. அதாவது ஹதீஸ் களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் எதையெல்லாமோ நாம் முற்படுத்தி முக்கியத்துவம் கொடுத்து எம்மை ஏமாற்றி விட்டோம்.

மௌலவி புஹாரி போன்றோரின் முயற்சிகள் எதிர் காலத்தில் ஹதீஸின் ஆட்சியை எமது சமூகத்தில் கொண்டு வரும் என்பதில் ஐய மில்லை. உண்மையாக நாங்கள் வெட்கப்படவேண்டிய விடயம் என்னவென்றால் கிழக்கத்திய வாதிகள் இத்துறையில் பெற்றிருக்கின்ற அறிவு, அவர்களின் ஆராய்ச்சி அளவுக்கு எமது கல்வி நிறுனங்கள் கூட வளரவில்லை. காலாகாலமாக இமாம்கள், எமது உலமாப் பெருமக்கள் ஹதீஸ்களுக்கு ஆற்றியுள்ள அளப்பரிய பங்களிப்புக்களை நாம் கண்டு கொள்ளவில்லை. ஹதீஸ்களை அதன் ஆராய்ச்சியாளர்கள் தொடர்பான நூல்களை நாம் ஏறிட்டுப்பார்க்கவில்லை.

முஸ்லிம் கல்வி நிறுவனங்களின் நிலையே இதுவென்றால் பொது மக்கள் பற்றி, எமது படித்த சமூகம் பற்றி நாம் அதிகம் கூறத்தேவையில்லை. எனவே ஹதீஸ்கள் தொடர்பான இந்த இடைவெளி நிரப்பப் பட வேண்டும். ஹதீஸ் கிரந்தங்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகள் மக்களிடம் அதிகரிக்க வேண்டும். அதனை வாசித்தல், மேற்கோளாக கொள்ளல் விரிவடைய வேண்டும். அந்த வகையில் மௌலவி புஹாரி அவர்களது இம் முயற்சி எமது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

மிகச் சிறந்த பெறுமதியான இம் முயற்சியில் ஈடுபட்ட எனது நண்பர் புஹாரியின் முயற்சியைப் பாராட்டுகிறேன். அவர் இது போன்ற பணிகளில் மேலும் தொடர வேண்டுமெனவும் பிரார்த் திக்கிறேன். எல்லாம் வல்ல அல்லாஹ் அவரது பணியை ஏற்று அருள் பாலிப்பானாக!

**மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா (மதனி) எம்.ஏ**
**சாய்ந்தமருது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

அல்ஹம்துலில்லாஹ். தமிழுக்குக் கிடைத்த வரம் வேறெந்த மொழிக் கும் கிடைத்திராது. எல்லாச் சமய பண்பாட்டினையும் தமிழ் மொழி உள்வாங்கியுள்ளது. குறிப்பாக இந்து, கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய இலங்கையில் நிலவும் அனைத்து மதங்களிலும் இலக்கியம் தமிழில் சிறப்பாக வெளிவந்துள்ளது. அவ்வாறே இஸ்லாமிய வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ள ஸஹீஹுல் புஹாரி என்ற கிரந்தத்தின் 500 ஹதீஸ்களைத் தமிழில் கவிதை வடிவாகப் பெயர்த்ததே "புஹாரீயின் பொன்மலர்கள்" எனும் இந்நூல்.

இலங்கை முஸ்லிம்கள் சுதந்திரத்திற்குப் பின் தம்மை ஒரு தனி இனக் குழுமமாக அடையாளங் கண்டு கொள்ள முனைந்த போது தமது வரலாறு, அரசியல், இலக்கியம் என்று தனி நிலைகளாகச் சிந்திக்கத் தொடங்கியதன் விளைவாகவே இலங்கையில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்ற தனியான பிரிவும் அதிக கவனத்திற்குள்ளாயிற்று. இப் பிரிவினுள் முஸ்லிம்களின் மதத் தேவைகளைப் பூர்த்தி செய் கின்ற இலக்கியங்களையே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த வகையில் குர்ஆன், ஹதீஸ் கருத்துக்களை விவரிப்பனவும், இறைவன் புகழ் கூறுவனவும், நபிகள் நாயகத்தின் வரலாறு, புகழ் பேசுவனவும், இறைநேசர் புகழ், தத்துவக் கருத்துக்களை கூறுவனவும் உள்ளடங்கும். இன்று முஸ்லிம் அரசியல் பண்பாட்டின் அடியாக எழும் இலக்கியங்களை "முஸ்லிம் தேச இலக்கியம்" எனக் கொள்ளுகின்ற ஒரு மரபு உள்ளது. இது தனியாகவும் விரிவாகவும் நோக்கத்தக்க விடயம்.

தமிழ் நாட்டில் 12ஆம் நூற்றாண்டில் எழுந்த "பல்சந்த மாலை" யில் இருந்து இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் தோன்றுகிறது என்பர். ஆனால் இலங்கையில் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பத்றுத்தீன் புலவரின் "முஹியித்தீன் புராண"த்துடன் இம்மரபு தொடங்குகிறது. இந்தத் துவக்கம் பின்னர் இலங்கையின் எல்லாப்பகுதியிலும் நிகழ்ந்தது. இது இலங்கை முஸ்லிம்களின் பரம்பலுக்கு ஒரு சிறப்பான ஆதாரம்.

யாழ்ப்பாணத்தில் பத்றுத்தீன் புலவர், மன்னாரில் சரஸ்வதிப்புலவர் என்றழைக்கப்பட்ட பக்கீர்ப் புலவர் (1862-1917), கண்டியில் அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர் (1866-1918), மு.கா. சித்திலெப்பை, மட்டக்களப்பில் சின்னாலிம் அப்பா (மருதமுனை), புத்தளத்தில் ஷெய்கு இஸ்மாயில் புலவர் என்று இலங்கை இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பிரதேசம் தழுவிய அளவில் வளர்ச்சியடைந்தது.

இந்த வகையில் கிழக்கிலங்கையில் சின்னாலிம் அப்பா, வரகவி செய்கு மதார்ப் புலவர், ஹாஸிம் ஆலிம் புலவர், அப்துல் மஜீத் புலவர், அப்துர் ரஹ்மான் ஆலிம் புலவர், புலவர் மணி ஆ.மு.ஷரீபுத்தீன் என்று பல புலவர்கள் தோன்றி இஸ்லாமியத் தமிழ் இலக்கியப்பணி புரிந்தனர்.

புலவர் பாரம்பரியத்தில் இருந்து இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் நவீன சிந்தனையைப் புகுத்தியவர்களுள் காத்தான்குடி கவிஞர் அப்துல் காதர் லெப்பை முக்கியமானவர். தற்காலத்தில் காத்தான்குடியிலிருந்து இஸ்லாமியத் தமிழ்க்கவி புனைபவர்களுள் முக்கியமானவர் இந் நூலின் ஆசிரியர் கவிஞர் மௌலவி எம்.எச்.எம்.புஹாரி அவர்கள்.

இவரது "நாயகப் புகழாரம்" முக்கியமான ஒரு கவிதை நூல். எம்.எச்.எம்.புஹாரியின் "நாயகப் புகழாரம்" அ -ஒ வரையுள்ள 10 தமிழ் உயிர் எழுத்துக்கள் ஒவ்வொன்றிலும் 30 கவிதைகள் பாடி மொத்த மாக நபிகள் நாயகம் பேரில் 300 கவிதைப் பூக்களைப் புகழாரமாகச் சூட்டியுள்ளது. (உலகத் தமிழ் இலக்கிய வரலாறு -2005:393 சென்னை) "புஹாரி" என்ற பெயருக்கு இஸ்லாமிய வரலாற்றில் ஒரு வரலாற்றுச் சிறப்பே உண்டு. புஹாரி(ரஹ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இஸ்லாமிய வரலாற்றில் குறிப் பிடத்தக்க ஓர் அறிஞர். இப் பெயர் தொடர்புபட்டதாகவே இந் நூல் எழுந்ததாகவும் நூலாசிரியரின் குறிப்பிலிருந்து அறியக்கிடைக்கிறது. மேலும் "வரலாற்றில் ஓர் ஏடு" எனும் இஸ்லாமிய வரலாற்று நிகழ்ச்சி ஒன்றும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் இடம் பெற்று வருகிறது. இந் நிகழ்சியில் சம்பந்தப்பட்ட முதல்வர் சம்மாந்துறையை சேர்ந்த மௌலவி ஏ.ஸீ.ஏ.எம்.புஹாரி. அதே போல அதனைத் தொடர்ந்து முன்னெடுத்தவர் நமது நூலாசிரியர் மௌலவி எம்.எச்.எம்.புஹாரி அவர்களே. இவரது இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பணி கூர்ந்து நோக்கத்தக்கதும், பயனுடையதும் ஆகும்.

இமாம் புஹாரீ (றஹ்) அவர்களது "ஸஹீஹுல் புஹாரி" எனும் சரியான ஹதீஸ்களைக் கொண்ட நூல் குர்ஆனுக்கு அடுத்ததாக உள்ள இஸ்லாமிய சமய நூல்களில் ஒன்றாகவும், உலகம், மனித வாழ்க்கை, இறைவன் பற்றிக் கூறுகின்ற முக்கிய நூல்களில் ஒன்றாகவும் அமைந்தது. இந் நூலில் உள்ள 500 ஹதீஸ் களைத் தேர்ந்தெடுத்து அதுவும் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபட்ட அம்சங்களை உள்ளடக்கி கவிஞர் இந்நூலை ஆக்கியிருப்பது கவனிக்கத்தக்கது. ஒட்டு மொத்தமாக இந்நூலை பார்க்கும் போது இஸ்லாம் வாழ்க்கையோடு மிக நெருக்கமாக தொடர்புபட்டுள்ளதனைக் கண்டுகொள்ள முடிகிறது. அத்தகைய ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து மொழி பெயர்த்துக் கவியாக்கிய கவிஞர் பாராட்டுக்குரியவரே.

பாரதி தமிழ்க் கவிதைக்கு அதிக ஜனநாயகத்தன்மையை வழங்கியவன். புதிய பொருளில் கவிதை பாடியதோடு மட்டுமன்றி புதிய வடிவங்களையும் கையாண்டவர். இவ்வகையிலே கவிஞர் புஹாரி அவர்கள் தமிழின் கவிதை யாப்பு இலக்கணத்திற்கு அப்பால் அழகும் இசையும் கூடிய எளிய நடையில் கவிதை புனைந்து இருப்பது நோக்கத்தக்கது.

சாதாரண வாசகனொருவன் மிக இலகுவாக புஹாரீ கிரந்தத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து வாசிப்பதற்கு இருக்கும் சாத்தியத்தை விட இந்நூலை வாசிக்கும் சாத்தியம் அதிகமுண்டு. எடுத்தவுடன் வாசித்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை இந்நூல் தருவது குறிப்பிடத்தக்கது. இந்நூலை வாசிக்க வாசிக்க, வாசிக்கும் தூண்டுதல் அதிகரித்துச் செல்கிறது. இது மிக அருமையான பணி. கவிஞர் புஹாரி அவர்கள் அறபியில் உள்ள இலக்கியங்களை தமிழிற் தர முயற்சிக்க வேண்டும். அதற்கு மிகப் பொருத்தமானவர் கவிஞர் புஹாரி அவர்கள். அவரது நீண்ட வாழ்வுக்கும் எழுத்துப்பணிக்காகவும் பிரார்த்திக்கிறேன்.

**பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ்**
**தென் கிழக்கு பல்கலைக் கழகம்.**
**ஒலுவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கவிஞர் திலகம் அப்துல் காதர் லெப்பை காத்தான்குடியைச் சேர்ந்தவர். என்றாலும் அவர்கள் தமது வாழ்வின் அதிகப் பகுதியை வெளியூர்களிற்தான் கழித்தார். ஆசிரியராகவும், அதிபராகவும் நீண்ட காலம் வெளியூர்களில் கடமையாற்றியி ருக்கிறார். தனது கல்விப் பணியின் அந்திமக்காலத்தில்தான் காத்தான்குடி தேசிய பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி அங்கிருந்துதான் ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்ற பின்னரும் தனது வளர்ப்பு மகனான ஆப்தீனின் வீட்டில் மாத்தளையில் வாழ்ந்தார்கள். கவிஞரின் சொந்த மகன் அமீர் அலி எனது நண்பர். அவரும் வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும் அதிக காலம் வாழ்ந்தவர். தற்போதும் வெளிநாட்டில்தான் வாழ்கிறார்.

கலாநிதி அமீர் அலி காத்தான்குடிக்கு வரும் போது என்னைச் சந்திப்பார். பல வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் என்னைச் சந்தித்துப் பேசிவிட்டுச் செல்லும் போது "வாப்பா தற்போது மட்டக்களப்பில் எனது வீட்டில் இருக்கின்றார்கள். அடிக்கடி அங்கு போய் அவர்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னார்கள். அப்போது அவர்களது கண்கள் பனித்ததைக் கண்டேன்.

கவிஞர் அவர்கள் அப்போது அமீர் அலியின் மட்டக்களப்பு இல்லத்தில் நீண்ட நாட்கள் தங்கியிருந்தார்கள். அமீர் அலியின் அன்பான வேண்டுகோளுக்கு இணங்க கவிஞரை மட்டக்களப்பில் அடிக்கடி சந்தித்து வந்தேன்.

ஒரு முறை கவிஞரைச் சந்தித்து பேசிக் கொண்டிருக்கும் போது "உங்களுக்கு உங்கள் தந்தை புஹாரி என்ற பெயர் வைத்ததன் காரணம் தெரியுமா?" என்று கேட்டார்கள். "தெரியாது ஸேர்" என்று சொன்னேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் தந்தை முஹம்மது ஹனீபா ஆலிம் முறையாக மத்றஸாவில் ஓதிய ஒரு மௌலவி அல்லர். அவர்கள் காத்தான்குடி 5ம் குறிச்சி மீரா பள்ளியில் (தற்போது ஜாமியுழ் ழாபிரீன்) நீண்ட காலம் இமாமாக கடமையாற்றியவர். அப்பள்ளிவாயலில் வருடாந்தம் நடைபெறும் புஹாரி ஷரீப் பாராயண மஜ்லிஸில் கலந்து கொள்வார்.

ஒரு வருடம் அப்பள்ளிவாயலில் புஹாரி மஜ்லிஸ் நடைபெறும் போது "முறையாக மார்க்க கல்வி பயின்று மௌலவி பட்டம் பெற்றவர்கள் மாத்திரம் தான் அம் மஜ்லிஸில் புஹாரி ஓத முடியும். மௌலவி ஆலிம் அல்லாதவர்கள் ஓத அனுமதிக்கப்படமாட்டார்கள்" என்று அறிவிக்கப்பட்டது. இதனால் அவ்வருடம் உங்கள் தந்தைக்கு புஹாரி ஓதும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இதனால் உங்கள் தந்தை மிகவும் கவலையடைந்து விட்டார்கள். அப்போது நீங்கள் பிறக்கவில்லை. அவர் வைராக்கியத்தோடு ஓர் உறுதியெடுத்துக் கொண்டார். எனக்கு ஓர் ஆண் பிள்ளை பிறந்தால் அதற்கு "புஹாரி" என்று பெயரிடுவேன். அவரை புஹாரி ஷரீப் போன்ற நூல்களை கற்றுத் தெளியும் ஒரு மௌலவியாக ஆக்குவேன்" என்று உறுதி பூண்டார்கள். அதற்கு பின்னர் நீங்கள் பிறந்தீர்கள். உங்களுக்கு "புஹாரி" என்று பெயரிட்டார்கள்.

"இப்போது நீங்கள் புஹாரி மட்டுமல்ல அதற்கு அப்பாலும் பல நூல்களை கற்றுணர்ந்து ஓர் ஆலிமாக மார்க்க அறிஞராக விளங்குகிறீர்கள்." என்று கூறினார்கள்.

கவிஞர் அவர்கள் சொல்லும் வரை எனக்கு இந்த விடயமே தெரியாது. எனது தந்தை எனக்குச் சொல்லவில்லை. இதைக் கவிஞர் சொல்லும் போது எனது தந்தை உயிருடனிருக்கவில்லை. நான் மத்ரசாவில் ஆரம்ப வகுப்பில் பயின்று கொண்டிருக்கும் போதே 1969ஆம் ஆண்டில் எனது தந்தை காலமாகி விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விடயம் நண்பர் மஹ்றூப் கரீமுக்கும் பின்னர் தெரிந்திருக்கிறது. அவரிடமும் கவிஞர்தான் இதைச் சொன்னாராம். எனது "முத்தாரம்" கவிதை நூல் வெளியீட்டு விழாவில் பேசும் போது மஹ்றூப் கரீம் இதைக் கூறினார். கவிஞரின் கூற்று என் உள்ளத்தில் ஆழப் பதிந்தது. எனது தந்தை எனக்கு "புஹாரி" என்று பெயரிட்டு ஒரு வைராக்கியத்துடன் வளர்த்து நான் இரு துறைக் கல்வியும் பெற வழிகாட்டி என்னை ஓர் ஆலிமாக்கிய மாண்பை எண்ணி எண்ணி வியந்தேன்.

புனித ஹதீஸ் கிரந்தமான ஸஹீஹுல் புஹாரியில் உள்ள ஹதீஸ்களைக் கவிதையாக வடிக்க வேண்டுமென்ற எண்ணம் அப்போதே என்னுள்ளத்தில் வேரூன்றியது. போதிய ஓய்வும், வாய்ப்பும் இல்லாததால் அந்த எண்ணத்தை மனதுக்குள்ளேயே மூடி வைத்திருந்தேன்.

றமழான் மாதத்தில் மாத்திரம்தான் ஓரளவு ஓய்வு கிடைக்கும். 2005 ஆம் ஆண்டு றமழான் விடுமுறையில் இந்தப் பணியைத் தொடங்கினேன். றமழான் முடிந்ததும் வழமையான வேலைகள் ஏற்பட்டதால் 2006 றமழானில் விட்ட இடத்தில் இருந்து தொடங்கினேன். அந்த றமழானும் கழிந்தது. பொறுப்புக்கள் அதிகரித்தன. போதிய ஓய்வு கிடைக்கவில்லை அதே ஆண்டு ஹஜ் விடுமுறையில் இப்பணியை நிறைவு செய்தேன். எனினும் இதை விடய வாரியாகப் பிரித்து மேலும் செப்பனிட்டு அணிந்துரை மதிப்புரைகளைப் பெற்று ஒழுங்குபடுத்துவதற்கு இடையில் ஒரு வருடம் உருண்டோடிவிட்டது. 2007 றமழான் விடுமுறையில்தான் இதைப் பூரணப்படுத்த முடிந்தது.

எனினும், இதை அச்சிட்டு வெளியிடுவதில் மேலும் தாமதம் ஏற்பட்டு விட்டது. இதற்குக் காரணிகள் பல. வெளியூர்களில் இரண்டு அறபுக் கல்லூரிகளில் அதிபராகப் பணிபுரிந்தமை, எனது உடன் பிறந்த சகோதரரியின் மரணம், எனது உஸ்தாத் பெருந்தகை சங்கைக்குரிய ஷைகுல் பலாஹ் அவர்களது மரணம் போன்றவை இம்முயற்சிக்கு தாமதத்தை ஏற்படுத்தின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் எனது மூன்றாவது புதல்வரும், 'விடிவெள்ளி' பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான எம்.பீ.எம். பைறூஸ் அவர்கள் இந்நூலின் கையெழுத்துப் பிரதியைப் பெற்று அதனைக் கணினியில் அமைத்து அதை அச்சிடும் பணியையும் மேற்கொண்டார். அவரது பெருமுயற்சியால் இது, தற்போது நூலுருவாகி வெளியிடப்படு கிறது. அவருக்கு எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஸஹீஹுல் புஹாரியில் 7275 ஹதீஸ்கள் உள்ளன. பல ஹதீஸ்கள் பல தடவைகளில் பல தலைப்புக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை நீக்கிப் பார்த்தால் ஸஹீஹுல் புஹாரீயிலுள்ள ஹதீஸ் களின் தொகை கிட்டத்தட்ட 4000 ஆகும். பல தடவைகளில் இடம் பெற்ற ஹதீஸ்களை அப்படியே நான் கவிதையாக்கவில்லை. நீண்ட வரலாறுகளைக் கூறுபவை, இஸ்லாமிய சட்ட விதிகளை சொல்பவை, யுத்தம் சம்பந்தப்பட்டவை, குர்ஆன் விளக்கவுரையாக அமைந்தவை, அதிகளவு நடைமுறையில் இல்லாத விடயங்களைக் கூறுபவை போன்ற ஹதீஸ்களைக் கவிதையாக்குவதைத் தவிர்த்துக் கொண்டேன். இவ்வாறு கூட்டிக் கழித்து ஆயிரம் ஹதீஸ்களை யாவது கவிதையாக்கலாம் என்று பார்த்தேன். பல முக்கிய பொறுப்புக்களைச் சுமக்க வேண்டி இருந்ததால் போதியளவு ஓய்வும் அவகாசமும் கிடைக்காமல் போய் விட்டன. றமழான் விடுமுறைகளை எதிர்பார்த்திருந்தால் காலம் கடந்து போய்விடும் என்பதால் 500 ஹதீஸ்களைக் கவிதையாக்குவதுடன் நிறுத்திக் கொண்டேன்.

இது புதுக் கவிதைக் காலம். மரபுக் கவிதைகளை எழுதுவோரும் வாசிப்போரும் அருகிப்போய் விட்டனர். மரபுக்கவிதைக்காரர்களும் புதுக் கவிதைக்குட் தலையைப் புகுத்திக் கொண்டனர். இந் நிலையில் மரபுக்கவிதையிலேயே ஊறிப் போய்விட்ட நான் இந்த நூலின் கவிதைகளை இயன்றவரை இலகு நடையிலேயே எழுத வேண்டு மென்று எண்ணினேன். கவிதை இலக்கணங்களுக்கு அப்பால் நின்று கடின சொற்களைத் தவிர்த்து இலகு தமிழில் ஹதீஸ்களை கவிதையாக் கியுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கவிதை நூல்களையே எழுதுகிறீர்கள், உரை நூல்களை எழுதினால் இன்னும் அதிக பிரயோசனம் கிடைக்குமே" என்று சிலர் எனக்கு ஆலோசனை கூறியும் உள்ளனர். அதையும் கவனத்திற் கொண்டு கவிதைக்கும் உரை நடைக்கும் ஒத்துப்போகத்தக்கதாக இந்நூலை ஆக்கியுள்ளேன்.

பெறுமதிமிக்க இந்த நூலுக்கு பெறுமதி மிக்க அறிஞர்களிடம் இருந்து அணிந்துரையும் மதிப்புரையும் பெற விளைந்தேன். அந்த வகையில் எனது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களான மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா, பேராசிரியர் றமீஸ் அப்துல்லா ஆகியோரிடம் இருந்து அவற்றைப் பெற்றேன். அவ்விருவரது கருத்துக்கள் எனக்கு மேலும் உற்சாகம் தந்தன. அவ்விருவருக்கும் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கிறேன். அத்துடன் வாழ்த்துக் கவிதையை வழங்கிய காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

இந் நூலை நேர்த்தியாக வடிவமைத்த அஷ்ஷெய்க் எஸ்.எம். றமீஸ் (நளீமி) அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எனது புதல்வர்களான அஷ்ஷெய்க் எம்.பீ.எம். பிர்தௌஸ் (நளீமி), அல்ஹாபிழ் எம்.பீ.எம். பாஹிம் (பலாஹி) மற்றும் புதல்வி எம்.பீ. பாத்திமா அஸ்ஹறா (ஆசிரியை) ஆகியோரும் எனது மார்க்க, சமூக, இலக்கிய பணிகளுக்கு என்றும் உறுதுணையாகவிருக்கும் எனது அன்பு மனைவி ஆயிஷா புஹாரி உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களும் இந்நூல் வெளிவருவதில் ஆர்வம் காட்டினர். அவர்களுக்கும் எனது நன்றிகள்.

இந்நூலை முஸ்லிம் சமூகம் நன்கு பயன்படுத்திக்கொள்ளும் என்ற எதிர்பார்ப்புடன் உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

**கவிமணி மௌலவி எம்.எச்.எம். புஹாரீ (பலாஹீ)**
**பைத்துல் பறகத்**
**காத்தான்குடி - 04**
**0772686159**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

எங்கள் அன்புத் தந்தை கவிமணி மௌலவி எம்.எச்.எம். புஹாரீ (பலாஹீ) அவர்கள் எழுதிய 'புஹாரீயின் பொன்மலர்கள்' எனும் கவிதை நூலினை எமது 'பைத்துல் பறக்கத்' பதிப்பகத்தின் முதல் வெளியீடாக வெளியிட்டு வைப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். அல்ஹம்துலில்லாஹ்.

உண்மையில் எமது தந்தை இந்நூலை 2007 ஆம் ஆண்டே எழுதி முடித்திருந்தார். இருந்த போதிலும் அதன் பின்னர் ஏற்பட்ட பல்வேறு தடங்கல்கள் காரணமாக இந் நூல் சுமார் 13 வருடங்களின் பின்னரே வெளியிடப்படுகின்றது.

எமது தந்தையின் ஆன்மீக, இலக்கியப் பணிகளில் மிகவும் முக்கிய மைல் கல்லாக இந்நூல் அமையும் என நம்புகிறோம். அரபு மொழியில் உள்ள ஹதீஸ்களை தமிழுக்கு மொழி பெயர்த்து, மூல மொழியின் அர்த்தம் பிசகாது, கூடுதல் குறைத்தல் இன்றி மரபுக் கவிதையாக வடிப்பதென்பது இலகுவான பணியல்ல.

இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களில் ஒன்றாக காணப்படுவது ஹதீஸ் ஆகும். இந்த ஹதீஸ்கள் பதியப்பட்டுள்ள கிரந்தங்களில் பிரதானமானதாக ஸஹீஹுல் புஹாரி விளங்குகிறது. இக் கிரந்தத்திலுள்ள 500 ஹதீஸ்களே இங்கு கவிதை வடிவில் தொகுக்கப்பட்டுள்ளன. இம்முயற்சியானது அறபு மொழியில் புலமையற்ற, தமிழ் மொழி வாசகர்களுக்கு இலகுவாக 500 ஹதீஸ்களை விளங்கிக் கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் பெரிதும் உதவியாக அமையும் என நம்புகிறோம்.

அதிலும் குறிப்பாக தமிழ் இலக்கிய மரபுக்குள் சமய மூலாதார நூல் ஒன்றின் பகுதியளவிலான கவிதையாக்க முயற்சி என்பது வரலாற்றுத் தொடராக அமையும் என கருதுகின்றோம். அது தமிழ் - முஸ்லிம் உறவாடலுக்கான ஓர் இணைப்புப் புள்ளியாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும். அந்தவகையில் இந்நூலாக்க முயற்சியானது மிகவும் பயன்மிக்கதும் முக்கியத்துவமானதுமாகும். இவ்வாறான ஒரு பெறுமதியான நூலை வெளியிடக் கிடைத்தமை ஒரு பாக்கியமாகும்.

எமது தந்தை இதுவரை 15 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றை வெளியிட பல வெளியீட்டாளர் களும் தனி நபர்களும் கைகொடுத்துள்ளனர். அவர்களை இந்த இடத்தில் நாம் நன்றியுடன் நினைவுகூருகிறோம். எனினும் இந்த நூலை அவரது பிள்ளைகளாகிய நாமே அச்சிட்டு வெளியிட தீர்மானித்தோம். அதற்கமையவே எமது இல்லத்தின் பெயரில் 'பைத்துல் பறகத்' எனும் புதிய பதிப்பகத்தை உருவாக்கியுள்ளோம். இதனூடாக தந்தையின் நூல்களையும் ஏனைய எழுத்தாளர்களின் நூல்களையும் தொடர்ந்து வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

இந்த நூலை வெளியிடுவதில் எம்முடன் இணைந்து அதிக சிரத்தை எடுத்துக் கொண்டதுடன் அழகுற வடிவமைத்து, அச்சிட்டுத் தந்த 'டிசைன் டெஸ்க்' நிறுவன உரிமையாளர் அஷ்ஷெய்க் எஸ்.எம். றமீஸ் (நளீமி) அவர்களையும் நன்றியுடன் நினைவுகூருகிறோம்.

எல்லாம் வல்ல அல்லாஹ் நமது தூய பணிகளைப் பொருந்திக் கொள்வானாக.

**பைத்துல் பறகத் பதிப்பகம்**
**ஊர் வீதி, காத்தான்குடி 04**
**2020.11.01**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப் பேழை

திருமறையும் நபிவழியும் மானி டர்க்குத்
தூயவழி காட்டுகின்ற உயர்போ தங்கள்
உருவில்லான் கட்டளைகள் குர்ஆன் ஆகும்
ஓரெழுத்தும் இன்றுவரை மாறாச் சொற்கள்
இறுதிநபி சொல்செயல்கள் அங்கீ காரம்
ஏற்றமிகு நபிவழியில் ஒன்று சேரும்
கருவாகும் இப்பனுவல் தனக்கா மஃதே
கவியுருவில் வடித்தெடுத்த ஞானப் பேழை

மார்க்கஞான வழிகாட்டும் மேதை கள்தாம்
மாநபியின் வாரிசுகள் புஹாரி ஆலிம்
தேர்ந்தறிந்த நல்லறிஞர் இரண்டும் வாழ்வைத்
தூதர்வழி தொடருகின்ற தொண்டர் இஸ்லாம்
கூறுவது யாதென்ற கொள்கை தேரார்
கற்றறிய வேண்டுமெனக் கருத்தி லோர்ந்து
சீராக இலகுதமிழ்ச் சொற்கள் கோத்துத்
தந்துள்ளார் கவிதையிலே பலன்கொள் ளற்கே

ஓசையுடன் கூடுவதே ஒன்றும் நெஞ்சில்
உயர்நபியின் போதங்கள் உள்ளந் தோய்ந்தால்
மாசற்ற வாழ்வுதனை மண்ணி யற்ற
மானிடராய்ப் பிறந்தோர்க்கு மார்க்கஞ் சொல்லும்
நேசமிகு தமிழ்க்கவிஞர் வரலாற் றேட்டில்
நன்னாமம் பதித்திட்ட திறமை மிக்கோன்
பேசுமொழி தனிலேயிப் பாக்கள் தம்மைப்
படைத்துள்ளார் படிப்போர்கள் புரிதற் கென்றே

வெண்பா

ஓதுவித்த கல்வியுடன் ஒப்பிலா நன்னூலும்
தீதிலாச்செல் வங்கள் தொடர் “ச தக்கா” - நீதிபுகல்
இப்பனுவல் என்றும் நிலைத்திருக்கும் அன்னார்க்குத்
தப்பாதே நன்மை தரும்

**காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

அறிவின் தந்தை யென
ஆத்மீகக் குரு வாக
சிறப்பாய் 'தீன்' கல்வி
செழிக்கத் தந்த மகான்
அறிஞர் "ஷைகுல் பலாஹ்"
அன்னாரின் நினைவாக
சிறக்கும் இந் நூலைச்
சமர்ப்பித்து மகிழ்கின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புஹாரீயின்
# பொன் மலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணப்படியே கருமம்

*01.*

எண்ணத்துக் கேற்பவே எல்லாச் செயலுமுள
மண்ணில் ஒவ்வொருவர் எண்ணியதே ஈடேறும்
எண்ணி யிவ்வுலகின் பயனோக்கிச் செல்பவர்க்கு
எண்ணப் படியிந்தப் பூவுலகப் பயன்கிட்டும்
பெண்ணைப் பெரிதுவந்து பிரியமுடன் செல்பவர்க்கு
பெண்ணே கிடைத்திடுவார் பேருலகில் மாந்தருக்கு
எண்ணப் படியேதான் எல்லாம் கிடைத்திடுமே

## வஹீ (இறை தூது)

*02.*

“வள்ளல் நபிமணியே வஹீயெவ்வா றுங்களுக்கு
வல்லோ னிடமிருந்து வருகிறது?” எனவொருவர்
வள்ளல் நபியிடத்தில் வாயால் கேட்கையிலே
“வெல்லும் வஹீயெனக்கு மணியின் ஒலிபோன்று
இல்லம் வந்தொலிக்கும் சில போது நின்றுவிடும்
விள்ளும் வஹீயதுவோ விளங்கும் சில போது
வல்லார் மலக்கொருவர் வந்தே மானிடர்போல்
சொல்லிச் சென்றிடுவார் உள்ளத் தேற்றிடுவேன்”
வள்ளல் நபியவர்கள் வளமாய் மொழிந்தார்கள்
வள்ளல் நபியின் வதுவை ஆயிஷாவோ
வெல்லும் வஹீவரவை வியந்தே பார்த்திருந்தார்
நல்லார் வஹீயதுவோ நபிக்கு வருகையிலே
விள்ளும் புகழ்நபியார் வியர்த்துக் களைத்திடுவார்.

*03.*

நிதமும் புகழ் நபிக்கு நிகரில் வஹீயதுவோ
முதலில் கனவுதனில் தோற்றம் தந்ததுவே
எதுவும் சந்தேகம் இல்லாப் பான்மையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதமாய் றஸூலுல்லாஹ் இதயம் ஏற்றார்கள்
புதுமை உணர்ந்துநபி புகுந்தே ஹிறாப்பொதும்பில்
சதமும் தியானித்துத் தனித்தே யிருந்தார்கள்.
ஒருநாள் மலக்கொருவர் குகையின் உள்வந்து
பெருமான் நபிநோக்கி பிரியத் தோடணைத்து
"திருவாய் மலர்ந்திடுக திறமாய் ஓதிடுக"
அறிக்கை விடுத்தார்கள் ஆணை தொடுத்தார்கள்

"உம்மைப் படைத்தயிறை யொருவன் திருப்பெயரால்
செம்மை வாய்திறந்து சிறப்பாய் ஓதிடுக
செம்மைக் குருதியுறைத் துண்டைக் கொண்டுலகில்
இம்மை வாழ்மனிதக் குலத்தைச் சிருட்டித்தான்
நம்மைப் படைத்தஅவன் நலமார் கண்ணியவான்"
செம்மை சேர்மலக்கு செப்பிச் சென்றிட்டார்.

அச்சம் அடைந்தநபி அந்தக் குகையிருந்து
மெச்சும் குணத்துணைவி கதீஜா மனையடைந்தார்.

வேர்த்துக் களைத்துப்போய் வியப்பால் மலைத்துப்போய்
"போர்த்தும் போர்த்துமெனை" யென்றே புகன்றார்கள்
பார்த்துப் பயந்துதுணை பண்பார் கதீஜாவோ
"யாதோ நிகழ்ந்ததன்பே? யாத்துச் சொல்லுங்கள்"
மாதர் கதீஜாவோ மலைத்துப் போய்க்கேட்க
நீதர் நபிநாதர் நிகழ்ந்த கதை சொன்னார்.

தையல் கதீஜாவோ தைரியம் தந்தார்கள்
"மெய்யாய் உங்களையே மேலோன் அல்லாஹு
கைவிட் டொதுக்கிவிடான் களங்கப் படுத்திவிடான்
உய்யும் பண்பெல்லாம் உங்கள் வசமுண்டு
வையத் துள்ளோர்க்கு வாஞ்சை வழங்குகிறீர்
நெஞ்சால் உறவினரை நேசித் தொளிர்கின்றீர்
விஞ்சும் துயரெல்லாம் நெஞ்சில் சகிக்கின்றீர்
கெஞ்சும் எளியோர்கள் கேட்டால் கொடுக்கின்றீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சம் அடைவோர்க்குத் தானம் அளிக்கின்றீர்
கொஞ்சும் மகிழ்வோடு கொடுத்தீர் உணவெல்லாம்
நெஞ்சம் உடைந்து நீள்துன்பப் படுவோர்க்கு
விஞ்சும் கருணையினால் விரும்பி யுதவுகின்றீர்.

கதீஜா நாயகியோ கருணை நபியுடனே
கதியாய் விரைந்து வறகாபின் நவ்பலெனும்
மதிசேர் அறிஞரது மனைக்குச் சென்றார்கள்
மதிக்கும் அவரிடமே மாநபிக்கு நேர்ந்தவற்றை
கதியாய்ச் சொன்னார்கள் காரணத்தைக் கேட்டார்கள்.

குகைக்குள் வந்தவரோ கோமான் இறையோனின்
மிகைத்த அன்பாளர்"நாமூஸ்" எனும்மலக்கு
திகைக்க வேண்டாமே திருத்தூதாய் உங்களிடம்
மிகைத்த அருள்தாங்கி மேலாக வந்துள்ளார்
தகைமை மிக்கஅருள் தாங்கும் நபியாக
வகையாய்ப் பின்னாளில் வருவீர் அந் நாளில்
பகைத்தே இவ்வூரார் வெளியே துரத்திடுவர்
பகைக்கும் அவ்வேளை பக்குவமாய் நான்வாழ்ந்தால்
மிகைக்கும் துணைநின்று மேலாய்க் காத்திடுவேன்
வகையாய் வறகாபின் நௌபல் தெரிவித்தார்.

பின்னர் சிலகாலம் வஹீயும் பிந்தியது
அந்நாள் நபிநாதர் தெருவில் நடக்கையிலே
முன்னால் வானத்தில் சத்தம் முழங்கியது
கண்ணை உயர்த்திக் கருணைநபி பார்க்கையிலே
முன்னர் குகைக்குள்ளே வந்த மலக்கங்கே
கண்ணிற் பட்டார்கள் கண்டே நபியவர்கள்
பின்னும் பயந்தார்கள் போர்த்தச் சொன்னார்கள்
பின்னர் வஹீயோ பிந்தா திறங்கியதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.

துலங்கும் வஹீயதுவோ தொடராய் வருகையிலே
விளங்கும் நபியவர்கள் விரைந்து பாடமிட்டார்
உளத்திற் பதிந்து விட உதட்டை உசுப்பிடுவார்
"கலக்க முறவேண்டாம் கஷ்டப் படவேண்டாம்
இலகு முறையாக இதயங் கொள்க"வென
நலமாய் அல்லாஹு நபிக்குத் தெரிவித்தான்.

05.

எங்கள் நபிமணியோ ஈயும் வள்ளலவர்
எல்லா மனிதரையும் வென்ற கொடைவள்ளல்
பொங்கும் அருள்பூத்த புனித றமழானில்
தங்கும் தூதுடனே ஜிப்ரீல் வரும்போது
அண்ணல் நபியவர்கள் அள்ளிக் கொடுப்பார்கள்
வண்ணஞ் சிறக்கநபி வாயால் குர்ஆனை
உன்னி யுணர்ந்து ஓதிக் களிப்பார்கள்
விண்ணார் புகழ்மிக்க விந்தை நபிமணியோ
மண்ணில் வீசியெழும் காற்றை மிகைக்கின்ற
தன்மை யுடன்மிக்க தருமம் செய்வார்கள்.

**ஈமான்**

06.

அறுபத்தும் சொச்சமதும் அமைந்ததுவே ஈமானும்
கூறுமொரு வெட்கமது கூறாகும் ஈமானில்

07.

தனக்குத்தான் விரும்புவதைத் தனதன்புத் தோழருக்கும்
இணக்கமுடன் விரும்புனரே ஏற்றமுறு முஃமினென்றார்

08.

முக்கருமம் யாரிடத்தில் முக்கியமாய் உள்ளனவோ
மிக்கவுயர் ஈமானின் இன்பத்தை அனுபவிப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கபுகழ் அல்லாஹ்வை மேன்மையுறு நபிமணியை
எக்காலும் எல்லாரை விடமேலாய் நேசித்தல்
தக்கமுறை மாந்தரினைத் தனிமுதலோன் அல்லாஹ்வின்
மிக்க அன்பைக் கருதியிங்கு மேலாக விரும்பிடுதல்
அக்கினியில் வீழ்வதனை அடியோடு வெறுப்பதுபோல்
எக்காலும் குப்ரதனை இதயத்தால் வெறுத்திடுதல்

*09.*

அன்ஸார்கள் தமைவிரும்பல் அருளீமான் அடையாளம்
அன்ஸாரைக் கோபித்தல் முனாபிக்கின் அடையாளம்

*10.*

சாந்திநபி ஒருதினத்தில் ஸஹாபாக்கள் புடைசூழ
சேர்ந்திருந்த வேளையிலே சீர்தோழர் தமையழைத்து
"ஏற்றமுறு இறைவனுக்கு எப்போதும் இணைவையோம்
சீற்றமுறுங் களவுகொலை பொய்யதனைக் கைக்கொள்ளோம்
சாற்றுமுயர் நற்கருமம் சதாகாலம் செய்திடுவோம்
என்றெனக்கு வாக்குறுதி தாருங்கள்" எனக்கோர
அன்றிருந்த தோழர்கள் அவ்வாறு வாக்களித்தார்.
"இன்றளித்த வாக்குறுதி எந்நாளும் காப்பீரேல்
குன்றாத கூலியினைக் கோமானும் தந்திடுவான்
அன்றியிந்தப் பாவத்தில் ஏதேனும் செய்தவரோ
தண்டனையை இவ்வுலகிற் தான்பெற்றுக் கொள்வாரேல்
தண்டனையோ அவ்வுலகிற் கிடைக்காது தப்பிடுவார்
கண்டவர்கள் யாருமின்றிப் பாவியர் தப்புவரேல்
தண்டிப்ப தல்லாஹ்வின் விருப்பமதாம் நாடியவன்
தண்டிப்பான் இல்லையெனில் தண்டிக்கா திருந்திடுவான்

*11.*

நல்லவர்கள் சுவனத்தில் நலமாகப் புகுவார்கள்
அல்லார்கள் நரகத்தில் அவலத்தோ டுறைவார்கள்
உள்ளத்தில் ஈமானோ கடுகளவு இருந்தாலும்
பொல்லாத நரகிருந்து வெளியேற்றப் படுவார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிகின்ற நரகத்தில் இருந்ததனால் ஏற்பட்ட
கருமையது கழுவப்பட் டொளிர்வார்கள் முஃமின்கள்

12.
உறக்கத்தின் போதொருநாள் ஒருகனவு நான்கண்டேன்
இருக்கின்றார் சிலமனிதர் இணைந்துள்ள மேலாடை
ஒருசிலரின் மார்புவரை உயர்ந்திருக்கக் கண்ணுற்றேன்
மறு சிலரின் மேலாடை தாழ்ந்திருக்க நான்கண்டேன்
இருக்கின்றோர் மார்புவரை ஈமானிற் கூடியவர்
இருக்கின்றோர் குறைவாக ஈமானிற் குறைந்தவராம்.

13.
மதீனத்து மகனொருவர் மற்றவொரு நண்பருக்கு
இதமாக உபதேசம் இயற்றுகிறார் அப்போது
"உதறிவிடு வெட்கத்தை ஒவ்வாது வெட்கித்தல்
இதுவிதமாய் அன்ஸாரீ எடுத்தோதும் போதினிலே
அதிசிறந்த பண்பாளர் அண்ணல்நபி அன்புடனே
"அதுவிதமாய் அவருக்கு அறிவுறுத்த வேண்டாமே
இதமான ஈமானின் இனியகுணம் வெட்கமது"
நிதமோங்கும் நேசநபி நிகழ்த்தினரே யிவ்வாறு

14.
அறியாமைக் காலத்தோர் தம்தலைவர் மரணித்தால்
உருவத்தைச் செய்துவைத்து உருக்கமுடன் வணங்கிடுவார்
உருவத்தை வணங்குபவர் உறுமறுமை நாள்தன்னில்
திருஇறையின் சமூகத்தில் தரங்கெட்ட மாந்தரென்றார்.

15.
யஹூதிகளை நஸாராவை இறைவனவன் சபித்திட்டான்
மிகக்கொடிதாய்த் தம்நபியின் புதைகுழியை வணங்குமொரு
இடமாகச் சமைத்திட்ட மடமாந்தர் அன்னார்தாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.
மழைபெய்த நாளொன்றில் மாநபிகள் ஹுதைபியாவில்
நலமாக "சுப்ஹு" தொழுது நண்பர் தமைநோக்கி
"அளவற்ற அல்லாஹ்வின் அருளாலே மழையிங்கு
பொழிந்ததெனச் சொல்லுபவர் பூரணநல் விசுவாசி
இலங்குகிற உடுக்களது காரணத்தாற் பெய்ததென
விளம்புபவர் விசுவாசி யல்லரெனச் சொன்னார்கள்

17.
பெருமானார் நாயகத்தின் பிரியமகன் இபுறாஹீம்
மரணித்த நாளன்று கிரகணம் தோன்றியது
பெருமானார் நாயகத்தின் பிரியமகன் பிரிவால்தான்
கிரகணம் தோன்றியதாய் கதைத்தார்கள் ஊர்மக்கள்
"பிறப்புக்காய் ஒருவரது இறப்புக்காய் இவ்வுலகில்
கிரகணம் தோன்றுவது கிடையாது அல்லாஹ்வின்
நிறைவான அற்புதத்தால் நிகழ்வதென்றார் நபிநாதர்

18.
"இணைவைக்கா நிலையினிலே இறப்பெய்தும் ஒருமுஸ்லிம்
மனமகிழ்வாய் சுவனத்து மாளிகையில் நுழைந்திடுவார்
இணங்காத விபச்சாரம் இழிவான களவும்தான்
முனைந்து செய்தாலும்" மொழிந்தார்கள் நபிநாதர்

19.
அரவமது தான்வாழும் புற்றுக்குட் புகுவதுபோல்
சிறப்பான ஈமானும் சென்றடையும் மதீனாவில்

20.
விபச்சாரி யவன்தீய விபச்சாரம் செய்கையிலே
தவமிக்க முஃமினா யவனிருக்க மாட்டானே
பவச்செயலாம் மதுபானம் பருகுகையில் ஒருமனிதன்
நவமான முஃமினாய் நயந்திருக்க மாட்டானே
அவமாகத் திருடுபவன் அக்குற்றம் செய்கையிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவப்பான முஃமீனாய் ஒருபோதும் இருக்கானே
கவர்ந்திடுவோன் பிறர்பொருளை கொள்ளையிடும் போதினிலே
தவப்பேற்று முஃமீனாய்த் தானிருக்க மாட்டேனே.

21.
திங்கள் நபிமணியின் திருவார் சமூகத்தில்
பெண்கள் இருபேர்கள் பணிவாய் வந்தமர்ந்தார்
"எங்கள் நாயகமே "ஹபஷா" நாட்டினிலே
தங்கும் கோயிலதைக் கண்டோம் அவ்விடத்தில்
உருவச் சிலைபலவும் உண்டாம் அதைமக்கள்
கருதித் துதிக்கின்றார் கனமாய் வணங்குகிறார்"
பெருமான் நபியிடத்தில் பெண்கள் சொல்லியதும்
"மருவும் மதிப்புடைய மனிதர் மரணித்தால்
கருதும் அவருடைய கப்றின் மேற்பள்ளி
கருதிக் கட்டிடுவார் கணித்தே அவருருவம்
பெரிதாய்ச் செய்தங்கு பேணி மதித்திடுவார்
அருமை நபிநாதர் அறிவிப்புச் செய்தார்கள்.

22.
மறைவாம் விடயங்கள் ஐந்தை யாரறிவார்?
இறைவன் மட்டும்தான் என்றும் அறிந்திடுவான்!
இறுதித் தினமுலகில் எப்போ துண்டாகும்?
சொரியும் மழையெப்போ திங்கு பொழிந்துவிடும்?
கருவில் இருக்கின்ற சிசுவின் நிலையென்ன?
மரணம் ஒருவருக்கு எங்கே வந்தெய்தும்?
வெருட்டும் மறுநாளில் விளையும் நிலையென்ன?
குறிப்பா யிவ்வைந்தும் கோடா முறையினிலே
அறிவான் அல்லாஹ் தான்; அறியார் மாந்தர்கள்

23.
மாநபியின் மனைவியராம் மணியான ஆயிஷாவும்
மாநபிகள் சாய்ந்திருக்கத் தலையணையை வாங்கிவந்து
மாநபியின் படுக்கையிலே மதிப்போடு வைத்தார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநபிகள் வெளியிருந்து மனைக்கங்கு வந்தார்கள்
மாநபியின் வீட்டினிலே தலையணையைக் கண்டார்கள்
தேநபிகள் வீட்டுக்குள் நுழையாமல் நின்றார்கள்
தோன்றியது வெறுப்பான தோற்றமது வதனத்தில்
"ஏன்நபியே நிற்கின்றீர் இல்லத்தில் நுழையாமல்"?
தேன்மொழியார் ஆயிஷாவும் திகைப்போடு கேட்டார்கள்
"நான்இருக்கும் இடத்தினிலே உருவங்கள் பொதித்துள்ள
ஆனவொரு தலையணையை கண்டேனே அதனாலே
நான்வீட்டில் நுழையாமல் நிற்கிறேன் உருவங்கள்
தானிருக்கும் வீட்டிற்குள் மலக்குகளோ நுழையார்கள்
தோன்றுமொரு உருவங்கள் செய்வோர்கள் மறுமையிலே
தோன்றுமந்த உருவிற்கு உயிரூட்டி விடுமாறு
தூண்டப் படுவார்கள் தொடரான வேதனையும்
ஈண்டித் தவிப்பார்கள்" என்றார்கள் நபிநாதர்

24.
இறைவனுக்கு மனிதனவன் இயற்றுகிற கடமையது
இறைவனையே வணங்குவதும் இணைவைக்கா திருப்பதுவும்
இறையவனோ அடியார்க்கு இயற்றுகிற கடமையது
சிறப்பான அடியாரைத் தண்டிக்கா திருப்பதுவாம்

25.
தன்பெற்றோர் பிள்ளைகளை விடமேலா யென்னைத்தான்
அன்புடனே நேசிக்கார் அல்லமுஃமின் என்றார்கள்

## இஸ்லாம்

26.
ஐங்கருமத்தா லிஸ்லாம் அமைந்ததுவாம்; அல்லாஹு
சங்கையுற வணங்குவதற்குத் தகுதியுள்ள ஒருவனவன்
திங்களொளி முஹம்மதவர் திருத்தூதர் அல்லாஹ்வின்
ஐங்கால தொழுகையதும் அளிக்குமொரு ஸக்காதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களமாம் ஹஜ்ஜதுவும் மாண்புமிகு நோன்பதுவும்
ஐங்கருமம் ஆகுமென அண்ணல்நபி அருளினரே

27.
இறையொருவன் முஹம்மதவர் இறையவனின் திருத்தூதர்
நிறைவாக இதைமனத்தால் நிச்சயித்துச் சாட்சிசொல்லி
குறைவறவே தொழுகையினைக் குன்றாது நிறைவேற்றி
சரியாகக் கணக்கிட்டு ஸகாத்தை கொடுப்பார்க்கு
அரிதான பேறுண்டு அவர்தப்பிக் கொள்வார்கள்
புரியாத மாந்தரினைக் கொன்றுவிடு மாறெனக்கு
அறிவித்தான் அல்லாஹு அக்கடமை நிறைவாகப்
புரிவோர்தம் உடல்பொருளைப் பக்குவமாய்க் காத்திட்டார்
பிறிதான செயல்குறித்துப் பேரிறைவன் விசாரிப்பான்

28.
ஒரு முஸ்லிம் மறுமுஸ்லிம் மனிதருக்குச் செய்கின்ற
அருங்கடமை ஐந்துண்டு; அன்பினிய ஸலாமுரைத்தல்,
வருத்தமுறும் பிணியாளை வாஞ்சையுடன் நோய்வினவல்,
இறந்தோரின் மையம் இணைந்தே ஏகிடுதல்
விருந்துக்கு அழைப்பவரின் விருந்திற் பங்கெடுத்தல்
பிரார்த்தித்துத் தும்மியவர்க் கன்பு கனிந்திடுதல்.

29.
“சுவனம் எனைச் சேர்க்கும் சுகந்தக் கருமத்தை
நவமாய் எனக்கிங்கு நவில்வீர்” என வொருவர்
புவனப் பொன்னாளர் புனித நபியிடத்து
கவனத் துடன்கேட்க கருணை யிறைவனுக்கு
எவரைத் தானும் நீர் இணையாக்க வேண்டாமே!
தவமாம் தொழுகையினைத் தரமாய்த் தொழுதிடுக!
உவப்பாய் ஸக்காத்தை உணர்ந்து கொடுத்திடுக!
சுவனந் திறக்கின்ற சுகந்த றமழானில்
நவமாய் நோன்புதனை நன்றே நோற்றிடுக!
உவந்தே நபிநாதர் உரைக்கக் கேட்டுஅவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவற்றைச் செய்திடுவேன்; இதற்குமேல் செய்யேன்"
என்றே மொழிந்தாரே. இதனைக் கேட்டுநபி
"மின்னும் சுவனத்து மேன்மகனைப் பார்க்கின்ற
எண்ண மிருப்போர்கள் இவரைப் பாருங்கள்"
என்றே மகிழ்ந்து இனிதாய் மொழிந்தாரே!

*30.*
*பிணியுற்றோர் தனைப்பார்த்துப் பிணிநீங்கப் பிரார்த்திப்பீர்!*
*மனிதரிலே மரணித்தோர் மய்யித்தைத் தொடர்ந்திடுவீர்!*
*தும்மியவர் இறையவனைத் துதித்தவுடன் இறைஞ்சிடுவீர்!*
*நிம்மதிசார் ஸலாமுரைத்த நேசருக்கும் பதிலுரைப்பீர்!*
*இம்மண்ணில் அநீதிசெய்யப்பட்டவர்க்குத்துணை நிற்பீர்!*
*வருந்தியுமை யழைக்குமவர் விருந்துக்குச் சென்றிடுவீர்!*
*கருதியொரு ஆணையிட்டார் கனிவுடையத் துணைசெய்வீர்!*
*(ஆணை : சத்தியம்)*

*31.*
செயற்களிலே மிகச்சிறந்த செயற்களவை யெனவொருவர்
நயமாக நபியிடத்தில் நாட்டமுடன் கேட்டபோது
"பயபக்தி யாயுரிய நேரத்தில் தொழுதிடுதல்
தயவுடனே தாய்தந்தை தாங்கியன்பு பெய்திடுதல்
உயர்தீனை உயிர்ப்பிக்க ஓம்பிஜிஹாத் செய்திடுதல்"
நயமாக நபிமணிகள் நல்லுரையே செய்தார்கள்

*32.*
காரியங்கள் ஐந்துண்டு கண்ணியமார் இஸ்லாத்தின்
சீரான செயல்களவை சிறப்பான கத்னாவும்
சார்பாக முடிகளைதல் கமுக்கட்டு முடிநீக்கல்
சீராக மீசையதை சிரைத்தல் நகம்நீக்கி
வேறாக்கல் எனநபிகள் விரிவாகச் சொன்னார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33.
இலங்குமொரு தீனிஸ்லாம் இலகுவான மார்க்கமதாம்
பலமில்லா ஈமான்தான் பழுவான தாய்க்காட்டும்
அளவோடு வணக்கம்செய் அதைப்பழுவாய்க் கொள்ளாதே!
அளவிற் சிறிதாயிடினும் அதைத்தொடராய்ச் செய்திடுக!

34.
மனமுவந்து இஸ்லாத்தில் மகத்துவமாய் நுழைந்தவர்க்கு
முனைந்தவரும் நுழையுமுனம் மூண்டகுறை இறைபொறுப்பான்
புனிதமுடன் அவர்செய்யும் செயல்களுக்குப் பன்மடங்கு
நனிசிறந்த நற்பேற்றை நாயனவன் நல்கிடுவான்

35.
"மரங்களிலே ஒன்றுண்டு மருவும்இலை வீழ்ந்திடாது
மரமதுவோ மகத்தான முஸ்லிமுக்கு ஒப்பாகும்
மரமெதுவோ?" எனநபிகள் மக்களிடம் கேட்டபோது
இருக்கின்ற மரங்களிலே பலவற்றைச் சொன்னார்கள்
பெருமானார் அப்பதிலில் திருப்தியுறா திருந்தார்கள்
"மரமதுவே யாமறியோம் மாநபியே சொல்லுங்கள்"
இருந்தோர்கள் எல்லோரும் இவ்வாறு கேட்கையிலே
"மரமதுவோ பேரீத்த மரமாகும்" என்றார்கள்.

36.
பிறக்கின்ற மகவெல்லாம் பேறோங்கும் இஸ்லாத்திற்
பிறக்கின்றார் பெற்றார்தான் பிள்ளைகளை யூதரென
கிறிஸ்தவராய் மஜூஸிகளாய் மாநிலத்தில் மாற்றுகின்றார்

37.
தீனிஸ்லாம் திருப்பணிக்காய்த் தினமதிலே காலையிலோ
தினமங்கு மாலையிலோ தீரமுடன் செல்லுவது
மாநிலத்தை -மாநிலத்துப்பொருட்களினை விடமிக்க
மாண்புடைய தென்றுநபி மணிமொழியே சொன்னார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*38.*
*இரவெல்லாம் விழித்திருந்து இறையோனை வணங்குவதும்*
*சிரமமுடன் பகலெல்லாம் நோன்புதனை நோற்பதுவும்*
*வழமையதாய்க் கொண்டிருந்த மனிதரினை நபிநோக்கி*
*அளவுக்கு மேலாக வணக்கங்கள் செய்யாதீர்!*
*சிலநாட்கள் நோன்பிருப்பீர் சிலநாட்கள் விட்டிடுவீர்!*
*சிலவேளை இராப்போதில் வணங்கியபின் துஞ்சிடுவீர்!*
*நலமான உடலுக்கும் நாம் பார்க்கும் கண்ணுக்கும்*
*உளமார்ந்த மனைவிக்கும் உயர்வாகச் செய்கின்ற*
*பலமான கடமையுள; பக்குவமாய்ச் செய்திடுவீர்!*

## சுத்தம்

*39.*
*வுழூச்செய்யும் போதுறுப்பைப் பூரணமாய்க்கழுவுபவர்*
*ஒளி வழங்கும் முகத்தோடும் கரத்தோடும் ஒளிர்வாரே*

*40.*
*"ஆறொன்று முற்றத்தில் பாய்கிறது: அவ்வாற்றில்*
*நீரைந்து நேரங்கள் நீராடு வீராகில்*
*சேர்ந்திடுமா உம்முடலில் அழுக்"கென்று நபிமணியும்*
*சார்ந்திருந்த ஸஹாபாக்கள் தம்மிடத்தில் கேட்டிடவும்*
*"சேராது அழுக்கெதுவும்" என அன்னார் செப்பினரே.*
*கூறுமிந்த வாறேதான் ஐவேளை தொழுபவரில்*
*சேராது பாவமென சீர்நபிகள் செப்பினரே*

*41.*
*வுழூச் செய்யும் போதினிலே நாசிக்கு நீர்செலுத்தி*
*கழுவுங்கள்; கல்லெடுத்துத் தூய்மை செய்யும் போதினிலே*
*அழுக்கில்லாக் கல்மூன்றைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்*
*எழுந்தவுடன் தூங்கிவிட்டுக் கையதனை நீருக்குள்*
*அழுத்தாமல் வெளியினிலே அதைக்கழுவிக் கொள்ளுங்கள்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுமுன்னே துயிலிருந்து எங்கிருந்ததுமதுகரம்
தெளிவாகத் தெரியீரே! திருநபிகள் மொழிந்தார்கள்

42.
நாய் உங்கள் பாத்திரத்தில் வாய்விட்டுப் பருகிடுமேல்
தேய்த்தந்தப் பாத்திரத்தை ஏழுமுறை கழுவுங்கள்;
தோயுமொரு தடவைமண் சேர்த்துக் கழுவிடுவீர்

43.
எந்தன் சமூகத்தார்க்கு இடைஞ்சல்உறா திருக்குமெனில்
எந்தத் தொழுகைக்கு முன்னாலும் மிஸ்வாக்கை
உந்திச் செய்யுமாறு உத்தரவு செய்திருப்பேன்.

## தொழுகை

44.
பெருமானார் நபிமணியும் பிரியமுறு தோழர்களும்
பிரயாணம் போனார்கள் பிரயாண நேரத்தில்
ஒருதொழுகை நிறைவேற்ற உறுநேரம் வந்ததங்கு
பிரயாணப் பரபரப்பில் அவசரமாய்த் தோழர்கள்
முறையாகக் கால்களையே முழுதாகக் கழுவாமல்
விரைவாக வுழுச்செய்தார் வேந்தர்நபி கோபித்து
குறைவாகக் கழுவுண்ட குதிகால்கள் நரகுக்கு
இரையாகும் எனக்கூறி எச்சரிக்கை செய்தார்கள்.

45.
“தொழுவிக்கும் ஒருமனிதர் தொழுகையினை நீட்டுகிறார்
பழுவாக இருப்பதனால் படுகின்றேன் பலசிரமம்”
அழாக்குறையாய் ஒருதோழர் அண்ணலிடம் அறைந்தபோது
களங்கமிலாக் கருணைநபி கடுங்கோபப் பட்டார்கள்.
“இலகுமுறை தனிலேயே தொழுகையினை நடத்துங்கள்
பலவீனர், பிணியாளர், பலவேலைப் பழுவுள்ளோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுகைக்கு வருவார்கள் தொழுகையினை நீட்டாதீர்
அளவாகத் தொழுவிப்பீர்" எனநபிகள் சொன்னார்கள்.

*46.*
இறையில்லத் தமர்ந்திருந்து ஏற்றமுடன் தொழுதுவிட்டு
மறுநேரத் தொழுகைக்காய்க் காத்திருக்கும் மனிதனவன்
சிறுதொடக்கும் பெருந்தொடக்கும் சேராமல் இருப்பானேல்
பெரும்பயனைப் பெறுவானென் றுரைத்தார்கள் பெருமானார்

*47.*
கோடுகளைக் கொண்டவொரு விரிப்பினிலே தொழுதநபி
"கோடுகளின் அலங்காரம் கோனிறையைத் தொழும்போது
நாட்டத்தை திசைதிருப்பி நாசப் படுத்தியது
கோடுகளும் அலங்கரிப்பும் இல்லாத விரிப்பெடுத்துப்
போடுங்கள்! அதிலேதான் தொழமுடியும்" என்றார்கள்.

*48.*
பழுதறவே தொழுகையினைப் பக்குவமாய்த் தொழுபவரும்
முழுதாக கிப்லாவை முன்னோக்கித் தொழுபவரும்
ஒழுங்காக அறுத்தவற்றை உண்பவரும் நல்முஸ்லிம்
நழுவாது நாயனிறை நற்பாது காப்பவர்க்கு
இழுக்கேதும் அன்னவருக்கு இழைக்காதீர் மாந்தர்களே!

*49.*
தனியாகத் தொழுவதிலும் தகைகூட்டாய்த் தொழும்போது
இணைகின்ற நன்மையது இருபத்து ஐந்தாகும்
அணிமுறையில் வுழூச்செய்து அருளில்லம் பள்ளிக்கு
முனைந்தொருவர் செல்வாரேல் முயன்றுவைக்கும் எட்டுக்கு
இணையற்ற அல்லாஹு இனிதளிப்பான் நற்பதவி
கனிந்தன்னார் பாவத்தைக் கருணையுடன் மன்னிப்பான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50.
முன்னாலே திரையிட்டு முதலோனைத் தொழுகையிலே
முன்னாலே செல்பவரை முனைந்துதடை செய்யுங்கள்
பின்னாலும் அவர்மீறி முன்னாலே செல்வாரேல்
பன்மடங்கு பலமாகத் தடுத்திடுங்கள்! அன்னவரோ
புன்மையுறு ஷைத்தானாம் புனிதநபி சொன்னார்கள்.

51.
தொழுதபின்பு தொழுமிடத்தில் தூய்மையுடன் தொடர்ந்திருக்கும்
பழுதில்லாப் பக்தருக்கு மலக்குகளின் ஆசியுண்டு
மலக்குகளோ அன்னாரின் பிழைபொறுக்கப் பிராத்திப்பர்.

52.
தொழுபவர்க்கு முன்னாலே தொடர்ந்தேகும் ஒரு மனிதர்
இழுக்காகச் சேர்கின்ற தண்டனையை அறிவாரேல்
தொழுகுமவர் முடிப்பதற்கு நாற்பதுதான் சென்றாலும்
தொழுபவர்க்கு முன்னாலே ஒருபோதும் போகாரே
இலங்குநபி நாற்பதென்று எண்ணியங்கு சொல்லியது
துலங்குகின்ற நாளதுவா? வருடமதா? மாதமதா?
விளங்கியான் அறியேனென் றொருதோழர் உரைத்தாரே.

53.
அனஸ் என்னும் நபித்தோழர் "திமிஷ்க்"நகரில் அழுதிருந்தார்
"அனஸேஏன் அழுகிறீர்?"எனவொருவர் வினவுகையில்
"எனக்குற்ற துன்பமதா? வணங்குமொரு தொழுகையினை
சுணங்கியான் தொழுதுவிட்டேன் சோகத்தால் அழுகிறேன்"
எனஅன்பர் அனஸ்கூறி ஏங்கியேங்கி அழுதாரே.

54.
இரவுக்குப் பொறுப்பான மலக்குகளும், பகலுக்குப்
பொறுப்பான மலக்குகளும் அணியணியாய் உலகுக்கு
வருவார்கள் வருபவர்கள் அதிகாலைத் தொழுகையிலும்
"அஸ்ர்"நேரத் தொழுகையிலும் சந்தித்துக் கொள்வார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வரும் போது எனதடியார் எந்நிலையி லிருந்தார்கள்?”
அருளிறைவன் மலக்குகளைக் கேட்டிடுவான் மலக்குகளோ
“வரும்போதும் செலும்போதும் வல்லவுந்தன் அடியார்கள்
பெருமையுறத் தொழுதிருந்தார்” என்றவர்கள் இயம்பிடுவார்.

55.
தொழுகையினைக் கூட்டாகத் தொழுவிக்கச் சொல்லியபின்
தொழுகைக்குச் செல்லாத தோசிகளைக் கண்டறிந்து
எழுந்தன்னார் வீடுகளை எரித்துவிடச் சொல்லுதற்கு
அழுத்தமாய்க் கருதியதாய் அணிநபிகள் சொன்னார்கள்.

56.
தனியாகத் தொழுவதினும் தனிச்சிறப்பாம் ஜமாஅத்து
இனியபலன் இருபத்து ஏழுஎன நபிசொன்னார்.

57.
தூரஇடத் திருந்துவந்து தொழுகையிலே பங்கேற்போர்
பேறான கூலியினைக் கூடுதலாய்ப் பெறுவார்கள்.

58.
தொழுகைக்கு அழைக்கின்ற தூயஅதான் சொல்வதிலும்
தொழுகைக்கு முன்வரிசை தனில்நின்று கொள்வதிலும்
விழுமுகின்ற சிறப்பதனை விளங்குவரேல் மனிதர்கள்
எழுந்தோடிப் போட்டியிட்டு இரண்டுக்கும் விரைவார்கள்.

59.
அதிகாலை பஜ்ர்தொழுகை, அருளார்ந்த இஷாத்தொழுகை
கதிசேர்க்கும் இவ்விரண்டும் கஷ்டமெனக் கருதிடுவார்
மதியில்லா முனாபிக்கவர் இவ்விரண்டின் மகத்துவத்தை
மதித்தறிந்தோர் தவழ்ந்தேனும் மருவிடுவார் தொழுகைக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60.
பாவங்கள் செய்யாத பண்புநபி தம்முடைய
பாதங்கள் வீங்கிவிடும் அளவுக்கு இராவேளை
ஆவலுடன் நின்றழுது தொழுவார்கள் "நாயகமே
பாவங்கள் செய்யாத பக்குவத்தார் நீங்களேனோ
பாதங்கள் வீக்கமுற வணங்குகிறீர்?" எனத்தோழர்
தூதரிடம் வினவுகையில் "தூயவிறை தனைத்துதித்து
மாதவமாய் எனைச்சமைத்த மாண்பினுக்கு நன்றிசெய்யும்
மாதவத்தா ராகவிடக் கூடாதா?" எனக்கேட்டார்

61.
சுன்னத்துத் தொழுகைகளில் இறைவிரும்பும் தொழுகையது
கண்ணியத்து நபிதாவூத் கடைப்பிடித்த தொழுகையதாம்
சுன்னத்து நோன்புகளில் சோதியிறை விரும்புவது
புண்ணியராம் நபிதாவூத் பூண்டவுயர் நோன்பதுவாம்
முன்னிரவில் அவர்தூங்கிப் பின்னிரவில் தொழுவார்கள்
எண்ணியொரு வருடத்தில் ஒருநாளில் நோன்பிருப்பார்
அன்னவரோ மறுநாளில் நோன்புதனை விட்டிடுவார்.

62.
இராவேளை ஒருமனிதன் இதமாகத் தூங்குகையில்
மறக்குணத்து ஷைத்தானோ முடிச்சுக்கள் மூன்றிட்டு
"உரமாகத் தூங்கிவிடு உனதின்னும் நெடுநேரம்"
உரத்துக் கூறிடுவான் உதாசீனம் செய்துஇதை
விரைந்தே எழுவானேல் விரைந்தவிழும் ஒருமுடிச்சு
சிறப்பாய் வுழூச்செய்தால் சேர்ந்தவிழும் மறுமுடிச்சு
முறையாகத் தொழுவாரேல் மூன்றாவதும் அவிழும்
குறைவில்லாத் தெம்புடனே குதூகலமாய்த் திகழ்ந்திடுவான்
கறையுடனே தூங்குவனேல் கவலையிலே மூழ்கிடுவான்.
63. பவமகற்றும் சுப்ஹுதனைத் தொழுகாது தூங்குபவர்
செவிக்குள்ளே ஷைத்தானும் சிறுநீரைக் கழித்திடுவான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64.
உங்கள் வீடுகளில் உபரித் தொழுகையினை
இங்கித மாய்த்தொழுது ஏற்றங் காணுங்கள்!
உங்கள் வீடுகளைப் புதைகுழியாய் மாற்றாதீர்!

65.
எந்தன் பள்ளியிலே இனிதாய்த் தொழுதிடுதல்
இந்தப் புவியிலுள்ள எல்லாப் பள்ளியிலும்
தொழுதல் தனைவிடவும் தொடர்நன்மை ஆயிரமே
வளமார் மக்காவின் பள்ளியது வெகுசிறப்பாம்.

66.
அதான்கூறித் தொழுகைக்கு அடியாரை அழைப்பதிலும்
முதல்வரிசை தனில்நின்று முனைப்போடு தொழுவதிலும்
மிதமாக இருக்கின்ற மேன்மைகளை மனிதர்கள்
இதமாக அறிவாறேல் ஏட்டிக்குப் போட்டியிட்டு
முதலாக வருவதற்குச் சீட்டுப்போட் டெடுப்பார்கள்
அதிகாலைத் தொழுகையிலும் அமையும் இஷாத் தொழுகையிலும்
மிதமாக இருக்கின்ற மேன்மைகளை மனிதர்கள்
இதமாக அறிவாரேல் இயலாமற் தவழ்ந்தேனும்
முதலாகத் தொழுகைக்கு முயன்றோடி வருவார்கள்.

67.
மதீனத்துப் பள்ளிக்குள் மாண்புநபி நுழைகையிலே
அதிலிரண்டு தூண்களிடை கயிறிழுத்துக் கட்டுண்டு
இருப்பதனை நபிகண்டு "என்னயிது? எதற்கென்று
கருத்தோடு கேட்கையிலே" கண்ணியமார் ஸைனபவர்
விரும்பியதைக் கட்டியுள்ளார் வெகுவாகத் தொழுதிடுவார்
சுறுசுறுப்பு இல்லாமல் சோர்வடைந்து போவாரேல்
இறுக்கிக் கயிறிதனைப் பிடித்துத் தொழுதிடுவார்
நபியின் தோழர்கள் நபிக்குச் சொல்லியதும்
"அவிழ்த்து விடுங்களிதை அதிகம் களைப்புற்று
அலுப்புத் தருமளவு தொழுதல் வேண்டாமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைப்புத் தோன்றிடுமேல் இருந்து கொள்ளுங்கள்!
நபியும் நண்பருக்கு நலமாய்ச் சொன்னார்கள்.

68.
நலமே கொழிக்கின்ற நண்பர் நபியுல்லாஹ்
வளமாக வேயெனக்கு வஸிய்யத்து மூன்றுரைத்தார்;
இறக்கும் நாள்வரைக்கும் இம்மூன்றை விடாதிருக்க
சிறக்கும நபியவர்கள் எனக்குப் பணித்தார்கள்;
எல்லா மாதத்தும் மூன்றுநாள் நோன்பிருத்தல்
உள்ளம் விரும்பும் உயர்வான ளுஹாத்தொழுகை
தூங்கச் செலும்முன்னர் தொழுதல் வித்ர்தொழுகை
ஓங்கும் புகழ்த்தூதர் அபூஹுறைறா அறிவித்தார்.

69.
பயணத்தை முடித்தொருவர் பதிக்குறுகால் படைத்தவனை
நயந்திரண்டு றக்கஅத்து தொழுமாறு நவின்றார்கள்

70.
தொடர்ந்தொருவர் தொழுகையிலே தோய்ந்திருக்கும் போதெல்லாம்
இடரில்லா மலக்குகளோ இனிதாகப் பிரார்த்திப்பர்

71.
இறைதன்னைத் துதிக்காமல் எழுந்தங்கு வணங்காமல்
இராமுழுதும் நித்திரையில் இருக்குமொரு மனிதனவன்
கருமத்தை நபிமணியின் கவனத்தில் வைத்தவுடன்
“உறங்குகிற மனிதனது செவியினிலே ஷைத்தானும்
சிறுநீரைக் கழிக்கின்றான்” என்றுநபி மொழிந்தார்கள்.

72.
கால்நடைகள் மேய்கின்ற காடுகளில் இருந்தாலும்
மேலான தொழுகையதன் நேரமது வந்துற்றால்
சீலமுறும் “அதானை” சத்தமாய்ச் சொல்லுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான அதான்ஓசை மேவிக் கேட்கின்ற
சாலும் மனிதர்கள், ஜின்கள், மற்றையவை
ஆளும் இறைவனிடம் அளித்திடுமாம் சாட்சியமே.

73.
தொழுகையிலே இமாமவர்கள் பாத்திஹாவை ஓதியபின்
அழுத்தமொடு ஆமீனென் றுரைக்கையிலே மலக்குகள்
ஒழுங்குறவே அவருடனே ஒன்றித்து ஆமீனை
மொழிவார்கள்; ஆகையினால் இமாமுடனே சேர்ந்ததனை
மொழியுங்கள்; மலக்குடனே சேர்ந்தோதும் ஆமீனோ
நலமாக 'கபூலாகும்' நற்பேறுங் கிட்டிடுமே.

74.
தொழுகையிலே நபியவர்கள் தொடராக தஜ்ஜாலின்
கலகத்தைக் காத்திடுமா(று) இறைவனிடம் கேட்பார்கள்.

75.
ஆயிஷாவின் மனைக்கொருநாள் அண்ணலவர் வந்தார்கள்
நேயமிகு பெண்ணொருவர் அமர்ந்திருந்தார் அம்மனையில்
தூயநபி "அப்பெண்ணோ யாரென்று கேட்டார்கள்
"வாய்மையுறு வனிதையவர் வரையறையே யில்லாமல்
தோய்கின்றார் தொழுகையிலே" என்றார்கள் ஆயிஷாவும்
கடுந்தவத்திற் திளைத்துவிட்டுக் களைப்படைதல் ஆகாது
நடுத்தரமாய் வணக்கத்தை நிரந்தரமாய்ச் செய்வதுதான்
படைத்தவனின் விருப்பென்று பண்புநபி பகர்ந்தார்கள்.

76.
பள்ளிதனில் நுழையுமவர் பக்குவமாய் இருறக்அத்
உள்ளஞ்சித் தொழுகாது உட்கார வேண்டாமே.

77.
வாய்நாற்ற மெடுக்கின்ற உணவுகளை உண்டவர்கள்
தூய்மையுறு பள்ளிக்குத் தொழுகைக்கு வரவேண்டாம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78.
எசமானின் பணிப்புரைக்கு இசைவாகப் பணிசெய்து
இணையில்லா அல்லாஹ்வை ஏற்றமுடன் தொழுபவர்க்கு
இசைவாக இருமடங்கு கூலியது கிடைக்குமென்றார்

## ஜும்ஆ

79.
வெள்ளித் தினத்தன்று ஜும்ஆவுக் கேகுபவர்
உள்ளம் உவந்து ஒழுங்காய்த் தான்குளித்து
முந்திச் செல்வாரேல் முதலில் ஒட்டகையை
உந்திக் குர்பான் கொடுத்த பலனடைவார்
இரண்டாம் வேளை ஏகுபவர் மாடொன்றை
தரமாய்க் கொடுத்த தகைமை பெற்றிடுவார்
மூன்றாம் வேளை செல்லுபவர் ஆடொன்றைத்
தானே கொடுத்த "தவாபை"ப் பெற்றிடுவார்
நான்காம் வேளை செல்லுபவர் கோழியினைப்
பாங்காய்க் கொடுத்த பயனைப் பெற்றிடுவார்
ஐந்தாம் வேளை செல்லுபவர் முட்டையினை
ஈந்து கொடுத்த ஏற்றத்தைப் பெற்றிடுவார்
தகையாய் இமாமும் குத்பாவைத் தொடங்கியதும்
வகையாய் மலக்குகளும் வரவைப் பதியாமல்
தகைசேர் குத்பாவைக் கேட்கத் தொடங்கிடுவர்.

80.
உள்ளம் உவந்து உயர்ஜும்ஆ நிறைவேற்ற
பள்ளிக்கு ஏகுபவர் பக்குவமாய்க் குளித்து
நல்ல மணம்பூசி நயந்தெண்ணெய் தலைதடவி
பள்ளியின் உள்ளிருக்கும் பக்தரினைக் கடக்காது
உள்ளே அமர்ந்து ஓதும் குத்பாவை
தெள்ளத் தெளிவாய்ச் செவியேற்றுக் கொள்வாரேல்
அல்லாஹ் அவருக்கு அடுத்தஜும்ஆ வரையுள்ள
பொல்லாப் பாவம் பொறுத்தே யருள்புரிவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*81.*
*சிறக்கும் குத்பாவை செவிசாய்த்துக் கேளுங்கள்!*
*பெருமைக் குரியஇமாம் பிரசங்கம் நிகழ்த்துகையில்*
*ஒருவர் மற்றவர்க்கு " ஒழுங்காய் செவியேற்க!"*
*கருதிப் பணிப்பாரேல் பயனற்றுப் போயிடுவார்.*

*82.*
*நலமான ஜும்ஆவின் நாளன்று ஒரு வேளை*
*உளதந்த வேளையிலே உருகிக் கேட்கின்ற*
*நலமான துஆக்கள் நயந்தேற்கப் படுமாமே.*

*83.*
*நாட்களிலே நலமான வெள்ளித் தினத்தன்று*
*ஏற்றமுறு ஜும்ஆவுக் கேகும் மனிதர்கள்*
*நாற்றமறக் குளித்துமணம் பூசிச் சென்றிடுக!*
*ஏற்றமுடன் நபிநாதர் இவ்வாறு இயம்பினரே.*

*84.*
*குளித்துவிட்டு ஜும்ஆவுக் கேகுமென்று கோன்நபிகள்*
*மொழிந்தார்கள் நல்வாக்கு; மொழியேற்றுக் கொள்வோமே!*

## ஸகாத் - தருமம்

*85.*
*வறியோர் சிலர்வள்ளல் நபியிடத்தில் வந்தபோது*
*தருமப் பொருளதிகம் தந்தார்கள் நபியவர்கள்*
*ஒருவர் அங்கிருந்தார்; உள்ளோரில் வறியரவர்*
*அருளார் நபிபெருமான் அவர்க் கொன்றும் அளிக்கவில்லை*
*ஒருவர் இதுகுறித்துக் கேட்கையிலே உயர்நபிகள்*
*"வறுமை வாட்டத்தால் வந்தவர்கள் இஸ்லாத்தில்*
*உறுதிப்படாதவர்கள்; உள்ளம்மாறியன்னார்*
*திரும்பிச்சென்றிடலாம்; தீநரகில் வீழ்ந்திடலாம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறியர் இவர்நல்ல உறுதிப் பக்குவத்தார்
கருதிக் கொடுக்காமல் விட்டேன்" என்றார்கள்

86.
இறைவனுக்கென் றெண்ணத்தில் ஈந்தளிக்கும் தருமமது
நிறைவான பாக்கியத்தை நிச்சயமாய்த் தந்திடுமே
நிறையன்புத் துணைவியவர் நாவுக்கு நீகொடுக்கும்
இரையதுவும் தருமம்தான் இறையன்புக் கருமம்தான்

87.
"யமனு"க்கு முஆதவரை இறைதூதர் அனுப்புகையில்
"யமன்"வாழும் மக்களினைக் கலிமா மொழிவதற்கு
அன்பாய் அழைத்திடுக! அதனை யவர்மொழிந்தால்
என்றும் ஐவேளை இறையைத் தொழுகவென
பண்பாய்ப் பணிப்பீரே! பணிந்தே தொழுவாரேல்
பொன்னிற் பொருட்களிலே பொருந்தும் ஸக்காத்தை
நன்றாய் வழங்குதற்கு நலமாய்ப் பணியுங்கள்!
பொருளைப் பெற்றோரின் பொருளைப் பெற்றங்கு
பொருளே யில்லார்க்குக் கொடுக்கச் செய்வீரே!

88.
பொருளைப் பெற்றவரோ போற்றும் ஸக்காத்தை
அருளா திருப்பாரேல் அவரைத் தீண்டுதற்கு
அரவம் மறுநாளில் சாட்டப் படுமன்றோ!
சரமாய் அவர்கழுத்தில் சுற்றி வதைக்குமது
உரமாய்ப் பற்களினாற் கடித்துக் குதறுமது
"திரளாய் நீர்சேர்த்த தேட்டம் நானாவேன்"
அரவம் அறிவித்து அவரைத் தீண்டிடுமே.

89.
ஈத்தம் பழச்சுளையின் அளவை ஒருமனிதர்
போற்றும் புனிதமுற ஈட்டும் பொருளிருந்து
ஈந்தால் இறையவனும் ஏற்பான் பெருங்கொடையாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*90.*

*தருமஞ் செய்யுங்கள்! தரையில் காலம்வரும்*
*தருமப் பொருளெடுத்துத் தருமஞ் செய்குபவர்*
*தருமம் பெறுபவரைத் தேடித் திரிந்திடுவார்*
*தருமம் பெறுவதற்கு யாரும் இருக்காரே*
*"தருமம் இதைநேற்றுத் தந்தே யிருந்தீரேல்*
*தருமம் பெற்றிருப்பேன்" என்பார் மனிதர்கள்.*

*91.*

*ஈத்தம் பழச்சுளையின் பாதி யளவேனும்*
*ஈந்து எரிநகரில் இணையா திருப்பீரே!*

*92.*

*மேற்கை கீழ்க்கையை விட மேன்மை பெற்றதுவே*
*மேற்கை கொடுப்பதுவாம் கீழ்க்கையோ வாங்குவதாம்*

*93.*

*அஸ்றுத் தொழுகையினைத் தொழுது முடித்தநபி*
*அசுர வேகத்தில் இல்லம் விரைந்தார்கள்*
*விரைவாய் நபியவர்கள் வீட்டுக் கேகியதன்*
*முறையைக் காரணத்தைக் கேட்க ஸஹாபாக்கள்*
*"குறைந்த தொகையான வெள்ளிக் காசொன்று*
*உறையும் என்வீட்டில் விட்டு வந்திட்டேன்*
*குறைவா யிருந்தாலும் கொடுக்காப் பொருளதுவோ*
*இறையின் கோபத்தை எனக்குச் சேர்த்துவிடும்*
*விரைந்தே சென்றதனைத் தருமம் செய்திட்டேன்"*
*உரைத்தார் நபியவர்கள் உணர்வீர் மாந்தர்களே!*

*94.*

*கணவன் தேட்டமதாம் கனிவாம் பொருளதனைத்*
*துணைவி தூய்மையுடன் தருமம் செய்வாரேல்*
*கணவன், மனைவிக்கும் காத்துக் கொடுத்தவர்க்கும்*
*இணையும் நன்மையென இறஸூல் மொழிந்தார்கள்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95.

எல்லா முஸ்லிமுக்கும் ஈதல் கடமையென்று
வள்ளல் நபிநாதர் வகுத்தே கூறியதும்
இல்லார் பொருட்பேறு எங்ஙன் ஈவரென்று
நல்லார் தோழர்கள் நயந்தே வினவினரே
"இல்லார் தொழிற்செய்து ஈதல் வேண்டுமென்பேன்
"இல்லார் தொழிலேதும் எவ்வா றிந்திடுவார்?"
"உள்ளோர் தேவையெதும் உவப்பா யவர்க்குதவல்
வெல்லும் தருமமென்றார்; விரும்பும் வழியில்லார்
நல்ல செயல்செய்து தீதைத் தவிர்த்திடுவீர்!
இல்லார் தமக்கிவையோ ஈயும் தருமமென்றார்.

96.

கருணை நபிமணியின் காலத் தீந்தவற்றில்
ஒருவர் ஒட்டகத்தின் கழுத்துக் கயிற்றளவு
தருமம் செய்வதற்கு தவறிப் போவாரேல்
பொருந்தா தவருடனே போரைத் தொடுப்பேனென
அருமை அபூபக்கர் அங்கே அறிவித்தார்.

97.

உரித்தாய் ஒட்டகத்தை ஆட்டை மாடுகளை
பெற்றோர் பெரிதுவந்து ஸக்காத் கடமையினை
இறுக்கா திருப்பாரேல் மறுமை நாளன்று
உறுத்தும் அவையென்று உண்மை நபியுரைத்தார்.

98.

"நீங்கள் பெரிதாக நேசிக் கும்உடைமை
பாங்காய் நற்பணிக்குக் கொடுத்தல், பாக்கியங்கள்
தேக்கும்" எனும்குர்ஆன் தேனாம் கருத்ததனை
ஓங்கும் புகழ்நபிகள் உரைக்கக் கேட்டிருந்த
தாங்கும் நபித்தோழர் அபூதல் ஹாஎழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிறைவாய் நேசிக்கும் எந்தன் தோட்டமதாம்
அருளார் பைறுஹாவை அளித்தேன் தருமமென
திருவாய் மலர்ந்து திடமாய்க் கூறியதும்
"பெருமை மிக்கபெரும் பேறும் பாக்கியமும்
குறையா லாபமதும் பெற்றீர்" எனநபிகள்
நிறைவாய் நிகழ்ந்தியங்கு நெஞ்சால் வாழ்த்தினரே.

99.
பெருநாட் தொழுகைக்குச் செல்லும் முன்னர்தான்
அருளாம் பித்றாவை அளித்தல் சுன்னத்தாம்.

100.
பாதை வழிநபிகள் பணிவாய் நடக்கையிலே
பாதை தனில்ஈத்தம் பழங்கள் கண்டார்கள்
"ஈதோ ஸக்காத்துப் பழமாயிருப்பதற்குத்
தோதா யிருப்பதனால் தீண்டேன் இப்பழத்தை"
தூதர் நபியவர்கள் தொகுத்துச் சொன்னார்கள்.

101.
"மரணித்த என்தாய்க்காய் மனமொப்பி நானுலகில்
தருமங்கள் செய்திடவா?" என்றொருவர் வினவுகையில்
"புரியுங்கள் தருமங்கள் போற்றுமுங்கள் தாய்க்காக"
பெருமானார் பதில்கூறிப் பேருக்கங் கொடுத்தார்கள்.

102.
"முன்னோர்கள் முத்தான பாக்கியங்கள் பெற்றார்கள்
முன்னோனைத் தொழுதார்கள்; முழுமூச்சாய்ப் போரிட்டார்
நன்னயமாய் நாம் தொழுதோம்; போர்களிலும் பங்கேற்றோம்
என்றாலும் எம்மைவிட ஏற்றமுடன் பொருளையெல்லாம்
உண்மையுள்ள 'தீனு'க்காய் உளமோம்பிச் செலவிட்டார்
இன்னபொருள் எம்மிடத்தில் இல்லை நாம் என்செய்வோம்?
நன்னயமாய் நபித்தோழர் நபிமணியைக் கேட்டார்கள்.
"கண்ணியமார் தொழுகையின்பின் பத்துபத்துத் தடவைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புண்ணியமார் தஸ்பீஹும் தஹ்மீதும் தக்பீரும்*
*நன்னயமாய்ச் செய்க"வென நபிநாதர் நவின்றார்கள்.*

*தஸ்பீஹ்: ஸுப்ஹானல்லாஹ்*
*தஹ்மீத்: அல்ஹம்துலில்லாஹ்*
*தக்பீர்: அல்லாஹு அக்பர்*

***103.***
*பேரீத்தம் பழக்கீற்றின் பகுதியினை ஈந்தேனும்*
*பேரிழிவு தருநரகின் பிடியிருந்து தப்புங்கள்*
*பேரீத்தம் பழமின்றேல் பேசுகின்ற கனிமொழியால்*
*சீறுகின்ற நரகத்தின் தீங்கிருந்து தப்புங்கள்*

***104.***
*ஸக்காத்துப் பொருள்சேர்க்க சாந்திநபி யொரு நபரை*
*மக்களிடம் அனுப்பினார்கள்; மனிதரவர் பொருள்சேர்த்து*
*மிக்கபுகழ் நபியிடத்தில் ஒப்படைக்கும் போதினிலே*
*"இப்பொருட்கள் உங்கள்வசம் ஸக்காத்தாய் உள்ளவையே*
*இப்பொருட்கள் எனக்குரித்து" எனப்பிரித்துக் கொடுத்தாரே*
*அப்பொழுது நபிமணியும் அவர்மீது சினமுற்று*
*"இப்பொருட்கள் நீர்வீட்டில் இருந்திருப்பின் கிடைத்திடுமா?*
*இப்பொருட்கள் எல்லாமே ஏழைகளின் ஸக்காத்தே*
*ஒப்பரிய ஸக்காத்தைச் சேகரிக்கும் ஒருமனிதர்*
*அப்பொருளிற் தனக்கென்று ஒருபகுதி எடுப்பாரேல்*
*அப்பொருளை மறுமையில் அவர்தோளிற் சுமந்தெழுவார்"*
*இப்பெரிய எச்சரிக்கை செய்தார்கள் செம்மல்நபி.*

***105.***
*இனியநபி நாதரிடம் எவரேனும் எதைக்கேட்டும்*
*கனியநபி "இல்லை"யென்று கடிந்தென்றும் சொன்னதில்லை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

106.
சிறப்பான முறையினிலே சீராகத் தொழிற்செய்து
தருமங்கள் சிறியதொரு ஈத்தங்கனி யளவேனும்
இறுப்பவரின் தருமத்தை இறைமகிழ்ந்து ஏற்றிடுவான்
பெரிதாக மதித்திடுவான்; மணங்கமழும் இறையிடத்தில்;
பெரிதான மலைபோன்று பெருங்கூலி யளிப்பானே

107.
நிகரில்லா மதீனாவில் நீர்ப்பஞ்சம் நேர்ந்தக்கால்
தகைமிக்க நபிநாதர் தம்தோழர் தமைவிழித்து
"இணக்கமுடன் "றூமா"வென் கிணறதனைப் பொதுமக்கள்
தினத்தன்று பயன்படுத்தப் பணமளித்து வாங்குனரார்?"
எனநபிகள் வினவியதும் இன்தோழர் உதுமானோ
பணமீந்து கிணறதனைப் பொதுவாக்கிப் புகழேற்றார்.

108.
"எனக்கயலார் இருவருளர் எவர்க்கெனது அன்பளிப்பை
இணக்கமுடன் அளித்திடவோ?" எனவொருவர் வினவியதும்
"உனக்கண்மித் திருப்பவர்க்கு உவந்தளிப்பீர்" எனநபிகள்
இணக்கமுடன் சொன்னார்கள் ஏற்றளித்தார் நபித்தோழர்.

109.
எந்நாளும் மலக்கிருவர் இறைவனிடம் இறைஞ்சிடுவார்
பொன்பொருளைப் புண்ணியமார் பணிக்காகச் செலவளிக்கும்
கண்ணியமார் மனிதருக்குக் கொடுத்திடுக பொன் பொருளை;
அன்னவிதம் செய்யாத கஞ்சருக்குக் கொடுக்காதே

110.
உறவினர்க்குத் தருமங்கள் உவப்புடனே புரியுங்கள்
இருகூலி தருமிந்த ஏற்றமிகு தருமமிது
உறவினருக் களித்தபலன் ஒன்றாகும் மற்றதுவோ
தருமத்தின் பலனாகும் தகைநபிகள் சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோன்பு

*111.*

*பக்திதரும் நோன்பதுவோ பாதுகாக்கும் கேடயமாம்*
*அக்கடமை செய்வோர்கள் அருவருக்கும் தீச்செயலும்*
*அக்கிரமச் செயலதுவும் அணுவளவும் செயவேண்டாம்!*
*உக்கிரமாய் எவரேனும் உறுத்துதற்கு வந்துற்றால்*
*"பக்தியுறும் நோன்புடையேன்" எனப்பகர்க இரண்டுமுறை!*
*வரிசையுறு நோன்பாளி வாய்வாடை இறையிடத்தில்*
*நறுமணமாம் கஸ்தூரி வாசம்போல் கமழ்ந்திடுமே*
*உறுதியுடன் உபவாசி உணவுகளைப் பானத்தை*
*வெறுக்கின்றான் எனக்காக; விசுவாச உபவாசம்*
*எனக்குத்தான் உரித்துடைத்து ஏற்றபலன் நானளிப்பேன்*
*இணக்கமுறு செயல்களுக்குப் பன்மடங்கு பரிசுண்டு*
*எனஇறைவன் கூறுவதாய் இறுதிநபி சொன்னார்கள்*

*112.*

*சுவனத்தின் வாசலொன்று சோதியுறு றய்யானாம்*
*பவுத்திரமாய் நோன்பிருந்தோர் பக்குவமாய்ப் புகுவார்கள்*
*அவரின்றி வேறெவரும் அவ்வழியால் நுழையார்கள்*
*"எவனுள்ளார் நோன்பிருந்தோர்?" என்றங்கு வினவுகையில்*
*நவமாக அவரெழுந்து நலமாக நுழைவார்கள்*
*அவரெல்லாம் அடைந்தவுடன் அவ்வாசல் அடைந்துவிடும்!*

*113.*

*செல்வத்தைச் சீர்வழியில் செலவிட்ட செம்மல்கள்*
*பல்வளமாய்ச் சுவனத்திற் பக்குவமாய்ப் புகுவார்கள்*
*நல்விதமாய்த் தொழுதவர்கள் நுழைவார்கள் 'ஸலாத்' வாசல்*
*துள்ளியொரு ஜிஹாத்செய்தோர் புகுவார்கள் 'ஜிஹாத்' வாசல்*
*வல்லவுயர் நோன்பிருந்தோர் செல்வார்கள் 'றய்யா'னால்*
*அள்ளியள்ளி ஈந்தவர்கள் அடைவார்கள் 'ஸதகா'வால்*
*எல்லாமும் செய்தவர்கள் எல்லாநல் வழியாலும்*
*உள்ளங் களித்தவராய் உயர்சுவனம் புகுவார்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*114.*

*வளமான றமழானின் வருகையினால் சுவனத்தின்*
*வாசல்கள் திறந்துவிடும்; வதைக்கின்ற நரகத்தின்*
*வாசல்கள் மூடிவிடும்; ஷைத்தான்கள் அடைபடுவர்*

*115.*

*குணக்குன்று நபிநாதர் கொடைத்திறனோ மிக்கவர்கள்*
*அணிமிக்க றமழானில் அளவில்லாக் கொடையளிப்பார்*
*இணக்கமுடன் ஜிபுறீலும் இறசூலை றமழானின்*
*மணமான இரவுகளில் மகத்துவமாய்ச் சந்திப்பார்*
*கனிவான கருணைநபி காற்றினிலும் விரைவாக*
*கணக்கின்றிக் கொடையளிப்பார் கண்ணியமார் றமழானில்*

*116.*

*பொய்யுரைத்தல்,புன்மைசெய்தல் போன்றவற்றை நோன்பாளி*
*கைவிடாமல் இருப்பாரேல், உண்ணாமல் பருகாமல்*
*மெய்யில்லா நோன்பதனை மேவுபவர் செய்கையினை*
*உய்வளிக்கும் இறையவனோ ஒருபோதும் கணக்கிலெடான்*

*117.*

*ஸஹர்செய்து நோன்பிருங்கள்! ஸஹர்செய்தல் தனிலுண்டு*
*மகத்தான பாக்கியமும் மணமான பறக்கத்தும்*

*118.*

*ஆதமுடை மகனியற்றும் 'அமல்'கூலி அவனுக்கே*
*ஏதமிலா நோன்பெனக்கே இனிதளிப்பேன் நற்கூலி*
*நாதனிறை நவிலுகிறான்; நோன்பதுவோ கேடயமாம்*
*சீதமொளிர் நோன்பிருப்போர் சினந்திரைச்சல், சீர்கெட்ட*
*பாதகங்கள், பாலியல்சேர் பழிச்செயல்கள் செயவேண்டாம்!*
*தீதுடையோர் தூற்றுவரேல், தீங்கிழைக்க வருவாரேல்*
*'ஏதமிலா நோன்புடையேன்' என்றினிதா யியம்பிடுக!*
*மாதவத்தார் முஹம்மதரின் மணியாத்மா உடையவனின்*
*மீதாணை! மேன்மையுறு நோன்பாளி வாய்வாடை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சீதமொளிர் மணங்கமழும் கஸ்தூரி வாடையினும்;*
*மாதவமாய் நோன்பிருக்கும் மனிதருக்கு மகிழ்விரண்டு*
*தூய்தான நோன்புதனைத் துறக்கின்ற வேளையிலும்*
*ஆதியிறை அல்லாஹ்வைச் சந்திக்கும் மறுமையிலும்*

*119.*
*நோன்பிருக்கும் போதொருவர் மறந்துண்டு பருகுவதால்*
*நோன்புக்குத் தீங்கில்லை; நோற்றதனைப் பூர்த்திசெய்க!*
*ஆண்டவனே உணவளித்துப் பருகிடவும் செய்துள்ளான்*

*120.*
*நோன்புதனைக் கூடுதலாய் நோற்கின்ற ஒருமனிதர்*
*“நான் செய்யும் பயணத்தில் நோன்பிருக்க வா?” என்று*
*மாண்புநபி தம்மிடத்தில் வினவுகையில் மகிமைநபி*
*“நோன்பிருக்க விருப்பமெனில் நோற்றிடுக! இல்லையெனில்*
*நோற்கா திருந்திடுக!” எனவிளக்கிச் சொன்னார்கள்.*

*121.*
*காலமெல்லாம் பகல்வேளை தொடராக நோன்பிருந்து*
*காலமெல்லாம் இராப்போது தொடராகத் தொழுகின்ற*
*தோழரினை நபிநோக்கி, “தொடராக நோன்பிருத்தல்,*
*காலமெல்லாம் நின்றுதொழல் கூடாது! கூடாது!*
*ஒருநாளில் நோன்பிருந்து மறுநாளில் புசித்திடுக!*
*இராப்போதில் சிலநேரம் வணங்கிப்பின் தூங்கிடுக!*
*உன்னுடலைப் பேணுவது உனக்குரிய கடமையதாம்*
*உன்விழிகள் பேணுவதும் உன்னுடைய கடமையதாம்*
*நன்முறையில் மனைவியினை நடத்துவதும் கடனாகும்*
*கண்ணியமாய் விருந்தினரைக் கவனித்தல் கடனாகும்*
*மூன்றுதினம் மாதமெலாம் நோன்பிருத்தல் சுன்னத்து”*
*என்றுரைத்துத் தோழருக்கு இன்னுரையே செய்தார்கள்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122.
தினங்களிலே வெள்ளிமட்டும் நோன்பிருக்க வேண்டாமே
தினமதற்கு முதல்நாளைத் தினமதற்கு மறுநாளைத்
தினமந்த வெள்ளியுடன் சேர்த்தினிதாய் நோற்றிடுக!

123.
ஏற்றமுறு றமழானில் இணைந்துள்ள பிற்பத்தில்
ஊக்கமுடன் நபிமணியும் இரவெல்லாம் வணங்கிடுவர்
ஆர்வமுடன் குடும்பத்தை அருளான அப்பத்தில்
சீர்மிக்க வணக்கத்தில் திளைத்திருக்கப் பணித்தார்கள்.

124.
இறுதிநபி றமழானின் பிற்பகுதித் தினங்களிலே
உறுதியுடன் பள்ளியிலே 'இஃதிகாப்' இருந்தார்கள்

125.
"நானழிந்தேன்! நானழிந்தேன்!" எனநவின்று ஒருமனிதர்
மாநபிகள்நாயகத்தின் மத்தியிலே வந்துற்றார்
"ஏனழிந்தாய்? ஏனழிந்தாய்?" எனநபிகள் வினவியதும்
"நானெனது மனைவியுடன் றமழானில் புணர்ந்துற்றேன்"
மாநபிகள் தம்மிடத்தில் மனிதரவர் மொழிந்திட்டார்.
"ஓரடிமை உன்னிடத்தில் உளராயின் அவ்அடிமை
நீருரிமை இடவேண்டும்"; நிகழ்த்தினரே நபிகோமான்.
"ஓரடிமை என்னிடத்தில் இலையென்றார் அம்மனிதர்
"ஓரடிமை உன்னிடத்தில் இல்லையெனில் தொடராக
ஈர்திங்கள் நோன்பிருக்க வேண்டு"மென நபிசொன்னார்.
"வலிமையில்லை நோன்பிருக்க வாய்ப்பில்லை" எனச்செப்ப
"எளியோர்கள் அறுபதுபேர்க் குணவீய வேண்டு" மென்று
மொழிந்தார்கள் நபிநாதர்; "முடியவில்லை" என்றுரைத்தார்.
பேரீத்தம் பழச்சுளைகள் பிரியமுடன் ஒருமனிதர்
நேர்த்தியுற நபிமணிக்குக் கொணர்ந்தங்கு கொடுத்திட்டார்.
பேரீத்தம் கனிகளினைப் பிழைசெய்த மனிதருக்கு
சீரோங்கு நபிமணிகள் கையளித்துப் பழமவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரெடுத்து வறியோர்க்கு நெஞ்சாரக் கொடுமென்றார்
“பாரோங்கு புகழ்நபியே, பாவியெனை விட இந்தச்
சாலையிலே வறியவரோ சார்ந்திருக்க வில்லை”யென
ஏழையவர் இயம்பியதும் “இப்பழத்தை நீயெடுத்துக்
கொள்”ளென்று நபிமணியார் கூறியதும் அம்மனிதர்
அல்லாஹ்வைப் புகழ்ந்தோதி அங்கிருந்து அகன்றாரே.

*126.*
மதியொத்த நபிமணியார் மதீனாவுக் கேகுகையில்
மதீனாவின் மக்களெலாம் நோன்பிருக்கக் கண்டார்கள்
“எதனாலே இன்றிங்கு இருக்கின்றீர் நோன்புடனே?'
மதீனாவின் மக்களிடம் மாநபிகள் கேட்டார்கள்
“இதுநாளோ ஆஷூறா எனும்புனித நாளாகும்
முதலோனின் நபியான மூஸாவைப் பேரிறையோன்
நதியினிலே மூழ்காமல் நலமாகக் காப்பாற்றி
உதவாத பிர்அவ்னை நதியினிலே மூழ்கடித்த
இதமான நாளாகும் இதனாலே மூஸாவும்
உதவியபே ரிறைவனுக்கு உயர்நன்றி செலுத்துதற்காய்
இதமாக நோன்பிருந்தார் இதனாலே நோன்பிருந்தோம்
இதுகேட்ட இறைதூதர் “ஏற்றமிகு இத்தினத்தில்
முதலோனை நன்றியுடன் முன்னோக்கக் கடன்பட்டேன்
இதுநாளில் நோன்பிருப்பேன்” எனச்சொல்லி நோன்பிருந்து
அதுபோல மற்றோரும் நோன்பிருக்கச் சொன்னார்கள்.

*127.*
ஏகனுக்குப் பிடிப்பான ஏற்றமிகு நோன்பதுவோ
வாகைபெறு தாவூது நபிநோற்ற நோன்பாகும்
வருடத்தில் ஒருநாளில் வரிசை நோன்பிருப்பார்
மறுநாள் நோன்பின்றி மகிழ்ந்து புசித்திடுவார்
தொழுகை தனிற்தூய இறையுவக்கும் தொழுகையதோ
விழுமும் நபிதாவூத் தொழுத தொழுகையதாம்
இரவின் பாதியிலே எழுந்து தொழுதிடுவார்
பிறிதாம் பாதியிலே தூக்கம் துய்த்திடுவார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*128.*
*இருவேளை மகிழ்வுண்டு ஏற்றமிகு நோன்பினர்க்கு*
*மறுமையிலே மன்னவனை மனங்கனிந்து நோக்குகையில்*
*அருளான நோன்புதனைத் துறக்கின்ற நேரமதில்*
*வரிசையுறு நோன்பினரின் வாய்வாடை இறையிடத்தில்*
*பெருமணமாம் கஸ்தூரி வாடையினும் மேலதுவாம்*

*129.*
*ஆதமின் மகன்செய்கை அவனுக்கே நலமாகும்*
*ஏதமிலா நோன்பதுவோ எனக்கான செயலாகும்*
*சீதமொளிர் நோன்பிருப்போர் சேர்வார்கள் நற்பலனே*
*நீதமிகு இறையவனும் இவ்வாறு நிகழ்த்தினனே*
*மாதவத்து நோன்பாளி வாய்வாசம் இறையிடத்தில்*
*சீதளமார் கஸ்தூரி மணத்தினையே வெல்லுவதாம்.*

## லைலத்துல் கத்ர்

*130.*
*கண்ணியமார் லைலத்துல் கத்ரெனும் இரவினிலே*
*நன்மையினை நாடியுடன் நல்ஈமான் பக்தியுடன்*
*புண்ணியமாய் வணங்குபவர் புரிபாவம் தீய்ந்துவிடும்*
*திண்ணியராய் றமழானில் தேனான நோன்பிருப்போர்*
*பண்ணியதுர்ப் பாவங்கள் பாதகங்கள் நீங்கிவிடும்*

*131.*
*இலங்கும் இரவான லைலத்துல் கத்ரினிலே*
*துலங்கும் நம்பிக்கைத் தூய உணர்வுடனும்*
*விளங்கும் இறையருளை விரும்பி எதிர்பார்த்தும்*
*கலங்காது நின்றொருவர் கடிவணக்கம் புரிகுவரேல்*
*களங்கம் மிகுபாவம் பொறுக்கப் படுவாரே!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

132.

கண்ணியமாம் லைலத்துல் கத்ரென்னும் ஓரிரவு
மண்ணகத்தில் எவ்விரவில் மலர்ந்துவிடும் என்பதனை
திண்ணமுடன் சொல்லுதற்குத் தயாராகி வரும்போது
சண்டையிட்டார் இருமனிதர்; சார்ந்ததனைப் பார்த்தபோது
கண்ணியமாம் இரவெதென்ற கருத்ததனை மறந்துவிட்டேன்
புண்ணியமாம் றமழானில் பொதிந்த ஒற்றை இரவுகளில்
கண்ணியமாம் அவ்விரவைக் கண்டெடுத்துக் கொள்ளுங்கள்

## ஹஜ்ஜு

133.

அய்யாமுத் தஷ்ரீக்காம் அருளார்ந்த நாட்களிலே
துய்யமுறை செய்கருமம் தொடர்நன்மை தந்திடுமே
உய்வளிக்கும் ஜிஹாதையுமே மிஞ்சிவிடும் அக்கருமம்

134.

ஒருமனிதர் அறபாவில் ஒட்டகையில் தரித்திருந்தார்
தரித்திருக்கும் போதினிலே தவறுதலாய் வீழ்ந்து விட்டார்.
ஒட்டகையோ மிதித்ததனால் உயிர்பிரிந்த தப்போது
சட்டென்று நபிவந்து ஸஹாபாக்கள் தமைநோக்கி
"இட்டமுடன் இலந்தையிலை நீராலே குளிப்பாட்டி
இருபுடவைத் துண்டுகளால் இதமாகப் போர்த்துங்கள்
நறுமணங்கள் இடவேண்டாம்! சிரசைமறைக்காதீர்!
மறுமையிலே இம்மனிதர் தல்பியாச் சொன்னவராய்
சிறப்பாக எழுந்திடுவார்! "எனநபிகள் சொன்னார்கள்

135.

சிறக்கும் செயலெதுவோ? என்று தோழர்கள்
அருளார் நபியிடத்தில் அன்பாய் வினவுகையில்
இறையைத் தூதரினை ஈமான் கொளல் என்றார்;
பின்னர் எதுவென்று பேணிக்கேட்கையிலே
உன்னும் ஜிஹாதென்று உரைத்தார் உம்மிநபி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் யாதென்று பிறகும் கேட்டதற்கு
மன்னன் இறையவனோ மதித்து 'கபூல்' செய்யும்
நன்மை ஹஜ்ஜென்று நபிகள் நவின்றார்கள்.

*136.*
கறுப்புக் கல்லான ஹஜருல் அஸ்வதினைக்
கருணை நபியவர்கள் முத்தா திருப்பாரேல்
"கறுத்தக் கல்லே, நான் முத்தா திருப்ப"வென
உரைத்தார் உமறிப்னு கத்தாப் உரைத்தாரே.

*137.*
உம்றாக் கிரியைதனை உவந்து செய்தவர்கள்
உம்றாத் திரும்பவுமே செய்தற் கிடையுள்ள
வெம்மைப் பாவங்கள் நீங்கிப் போகும்மே;
நம்பும் இறையுவந்து ஏற்கும் ஹஜ்ஜுக்கு
செம்மைச் சுவனம்தான் சிறந்த கூலியதாம்

*138.*
முயன்றே ஹஜ்ஜுக்கு முன்னர் செயும்உம்றா
பயனைத் தந்திடுமே; பாதிப் பில்லையதால்

*139.*
மாதம் றமழானில் மாண்பாய்ச் செயும்உம்றா
ஓதும் திறன்ஹஜ்ஜை ஒத்த காரியமாம்

*140.*
இச்சை தனைத்தூண்டும் இழிசெயலும் தீச்செயலும்
இச்சையுடன் செய்யாமல் ஏற்றமுறு மக்காவில்
ஹஜ்ஜென்னுங் கடமையினைக் கண்ணியமாய்ச் செய்குவரேல்
மெச்சுகின்ற மேலவராய் மேதினியில் மேன்மையராய்
அச்சமயம் பிறந்துற்ற சிசுப்போன்று செழிப்பாரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*141.*

*"என்தாயார் ஹஜ்செய்ய இதயத்தால் நினைத்திருந்தார்*
*என்தாயார் ஹஜ்ஜதனை இயற்றுமுனம் இறந்துவிட்டார்*
*என்தாய்க்காய் நானதனை இயற்றிடவா" என்றொருபெண்*
*கண்ணியமார் நபியிடத்தில் கனிவுடனே கேட்கையிலே*
*"உன்தாயின் கடனதனை உத்தமமாய் நிறைவேற்றல்*
*உன்கடமை யாவதுபோல் ஊக்கமுடன் ஹஜ்ஜதனை*
*உன்தாய்க்காய்ச் செய்திடுதல் கடமை"யென நபிசொன்னார்*

*142.*

*அல்லாஹ்வின் திருத்தூதே அடியேன்யான் உங்களுடன்*
*வெல்லுமுயர் ஜிஹாத்செய்ய விரும்புகிறேன் எனவுரைத்து*
*நல்லருளார் நபிமனைவி வெல்லுமொழி ஆயிஷாவும்*
*உள்ளத்தால் நபியிடத்தில் உத்தரவு கேட்கையிலே*
*நல்லருமை ஜிஹாதுமக்கு நலமான ஹஜ்ஜாகும்*
*அல்லாஹ்வின் திருத்தூதர் அணிசிறக்கச் சொன்னார்கள்*

*143.*

*மணமுடிக்கத் தகாதோராம் உறவுமுறை ஆணுடனே*
*மாத்திரமே மாதர்கள் பயணங்கள் செயவேண்டும்*
*எனநபிகள் இயம்பியதும் எழுந்தொருவர் நபியிடத்தில்*
*துணிவுடனே உங்களது படையணியிற் பங்கேற்று*
*இணக்கமுடன் ஜிஹாத்செய்ய இதயத்தால் விரும்புகிறேன்*
*எனதன்புத் துணைவியவர் ஏற்றமுறு ஹஜ்பயணம்*
*தனைச்செய்ய விரும்புகிறார் தனித்தவரும் போகலாமா?*
*எனவங்கு வினவியதும் "இயலாது! இயலாது!*
*உனதன்புத் துணைவியுடன் ஹஜ்ஜுக்கு சென்றிடுக!*
*எனதுபடை யணியில்நீர் இணைந்திடுதல் வேண்டாமே"*
*எனநபிகள் தோழருக்குக் கண்டிப்பாய்ச் சொன்னார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதீனாவின் மாண்பு

*144.*

பொன்னொளிரும் மதீனாவின் புனிதமிகு ஹறம்தன்னை
கண்ணியமாய்ப் பேணுங்கள்! களையாதீர் மரங்களையே!
அந்நகரில் அடாதசெயல் அநீதிகளைச் செய்யாதீர்!
வன்முறைகள் செய்வதனை வல்லவனும் வானவரும்
மண்வாழும் மனிதர்களும் மறுக்கின்றார் சபிக்கின்றார்

*145.*

பொன்னகராம் மதீனாவில் புகமாட்டான் தஜ்ஜாலும்
அந்நாளில் அந்நகரில் வாயில்கள் ஏழிருக்கும்
கண்ணியமார் மலக்கிருவர் கணித்தொவ்வோர் வாயிலிலும்
திண்ணமுடன் நின்றங்கு திடமாகக் காத்திடுவார்.

*146.*

“இனிதான இஸ்லாத்தைக் காப்பதிலே போராடி
புனிதமுடன் ஷஹீதாகும் புண்ணியத்தைத் தந்திடுக!
மணியான மதீனாவில் மரணிக்கும் மாண்பினையும்
கனிவாகத் தா!இறையே” என்றுஉமர் இறைஞ்சிநின்றார்.

*147.*

மதிப்போங்கும் மதீனாவில் புகமாட்டான் தஜ்ஜாலும்
அதிகொடிய நோயுமங்கு அணுகாது அமரர்கள்
இதமாக அந்நகரை இறையருளாற் காப்பார்கள்.

*148.*

இலங்கும் எனதில்லம் இருக்கும் இடத்திற்கும்
துலங்கும் என்மிம்பர்விளங்கும் இடத்திற்கும்
இடையில் இருக்குமிடம் சுவனப் பூங்காவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தஜ்ஜால்

*149.*

*எச்சரித்தேன் தஜ்ஜாலை எல்லா நபிமாரும்*
*எச்சரித்தார் தஜ்ஜாலை எல்லாரை விடமேலாய்*
*எச்சரித்தேன், அவன்குருடன்; அல்லாஹ்வோ குருடனல்லன்*

## அல்குர்ஆன்

*150.*

*ஏற்றமுறு மொழியதுவோ எழில்குர்ஆன் மொழியாகும்.*
*போற்றுமுயர் வழியதுவோ புனிதநபி வழியாகும்.*
*சீற்றமுறு செயலதுவோ சீர்நபிகள் செய்யாத*
*தோற்றுமொரு புதுச்செயலாம் தூயநபி சொன்னார்கள்*

*151.*

*ஒருபோது ஒருமனிதர் உயர்மறையை ஓதுகிறார்*
*அருகிருந்த ஒட்டகமோ அங்குமிங்கும் பாய்கிறது*
*மருளுவது ஏனதுவோ? மனிதர் வந்து பார்க்கின்றார்*
*ஒருவரையுங் காணவில்லை ஓதுவதைத் தொடருகிறார்*
*மருளுமந்த ஒட்டகமும்; மறையோதல் நிறுத்தியதும்*
*மருளாது நிற்கிறது; மறுநாளோ விடியும்வரை*
*இரவெல்லாம் இவ்வாறே இருக்கிறது; அம்மனிதர்*
*திருநபியைத் தேடிவந்து நிகழ்விதனைச் சொல்லுகிறார்*
*"அருள்மறையை ஓதுகையில் அருளாளன் சாந்தியது*
*வருகிறது அதுகண்டே விரண்டதும தொட்டகையும்"*
*மறைநாதர் இவ்வாறு மனிதருக்குச் சொன்னார்கள்.*

*152.*

*உயர்வான குர்ஆனை ஓதிக் காட்டுமென*
*நயமோங்கும் நன்னபிகள் நண்பர் ஒருவரிடம்*
*உவப்போடு கேட்டார்கள்; "உங்களுக்கே குர்ஆனும்*
*உயர்வாக வந்ததன்றோ? நான் ஓதத் தேவையாமோ?"*
*வியப்போடு நபித்தோழர் நபியிடத்தில் கேட்டபோது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உயர்வான குர்ஆனைப் பிறர்ஓதக் கேட்பதற்கு
விருப்பாக இருக்கிறது; விருப்போடு ஓதுங்கள்!"
நயமான நபிமணிகள் நண்பருக்குப் பணித்தார்கள்
"அயர்வதுவும் அவலமதும் அதிகமுள்ள மறுமையிலே
நயமாக வந்துற்ற நபிமார்கள் சமூகத்தின்
உயர்வான சாட்சிகளாய் வருவார்கள் அப்போது
உயர்வான நீங்களும்தான் உங்களது சமூகத்தின்
தயவான சாட்சியாய் வருவீர்கள்" எனும்வசனம்
உயர்தோழர் ஓதிநின்றார் ஓதுவதைக் கேட்ட நபி
பயந்தார்கள்; பயத்தாலே பக்தியுடன் அழுதார்கள்;
மயக்குமொரு மறுமையதன் மாபெரிய காட்சியதைப்
பயந்தார்கள். மாமறையை ஓதுவதை நிறுத்துமென்றார்

153.
கற்றாய்ந்து குர்ஆனைக் கனிவுடனே பிறருக்கும்
கற்றுக் கொடுப்பவரே காசினியில் மேலவராம்.

## அண்ணல் நபியின் அரிய வாழ்க்கை

154.
பணிப்புரைகள் செய்வார்கள் பண்புநபி நாயகத்தார்
பணிக்குமந்நக் காரியங்கள் பழுவாக இருக்காது
"கணித்தெண்ண முடியாத கடுந்தவமே செய்துயர்ந்தீர்
அணுவேனும் பாவங்கள் அணுகாத புண்ணியர்நீர்
அணுகவொண்ணா உங்களைநாம் அமையோமே உங்களைப்போல்"
எனவுரைத்த தோழர்களை ஏறிட்டுப் பார்த்த நபி
சினந்தார்கள் சினக்குறியே சிந்தியது வதனத்தில்
"வணங்குதற்கத் தகுதியுள வல்லவனாம் அல்லாஹ்வின்
கனதியினை யாவரிலும் காத்திரமாய் நான்அறிவேன்
அனைவரிலும் நானவனை அஞ்சுகிறேன் கடிதாக"
எனவுரைத்துத் தன்வணக்க ஏற்றத்தைக் காண்பித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

155.
பயபக்தி யுடன்நீங்கள் பக்குவமாய்த் தொழுவதுவும்
நயமாக நானறிவேன் பின்புறத்து நடப்பதுவும்
நானறிவேன் என்றார்கள் நன்னபிகள் நாயகமும்

156.
சிறப்பைந்து பெற்றுள்ளேன்; மற்றநபி மார்க்கில்லை
ஒருமாதத் தூரத்தில் உள்ளவரும் எனைக்கண்டு
பெருந்திடுக்கங் கொண்டிடுவார்; பெரும்புவியில் தூயதலம்
திருவணக்கம் செயப்பொருந்தும்; செருக்களத்தில் சேர்ந்தபொருள்
உரித்தாகக் கொளலாகும்; உலகத்தார் எல்லார்க்கும்
திருத்தூதாய் வந்துள்ளேன்; மறுமையிலே சிபாரிசது
தருகின்ற வாய்ப்புற்றேன்; தகுமைந்தும் இவையாகும்

157.
கருணை நபிமணியின் காலத்தில்ஒரு பொழுது
வருத்தும் பஞ்சம் வாட்டத் தொடங்கியது
ஒருநாள் வெள்ளித் தினத்தன்று நபிநாதர்
பொருளார் குத்பாப் பிரசங்கம் நிகழ்த்துகையில்
கிராமப் புறமிருந்து வந்தார் ஒருமனிதர்
"பெருமான் நபியே பெரும்பஞ்சம் நிகழ்கிறது
பொருட்கள் அழிந்து பொதுமக்கள் பட்டினியால்
வருந்திக் கிடக்கின்றார்; வளமார் மழையோ
வருஷிக்க நீங்கள் வல்லதுஆக் கேளுங்கள்"!
உருக்கும் உள்ளத்தால் அம்மனிதர் வேண்டியதும்
அருளார் நபிகள் அருமழைக்காய் துஆக்கேட்க
கறுத்தே வானம் கடும்மழையே கொட்டியது
பெருமான் நபிகள் குத்பாவை முடிக்குமுன்பே
பெருத்தமழை பெய்து பெருந்துன்பம் நீங்கியது
குறித்த மழையதுவோ தொடராகப் பெய்துபெய்து
ஒருவாரம் முழுவதுமே உக்கிரமாய்ப் பொழிந்திற்று
மறுவாரம் ஜும்ஆவில் மாநபிகள் மிம்பரிலே
பிரசங்கம் நிகழ்த்துகையில் பேசுமந்த மனிதரவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெருமான்நபியே, பெருவெள்ளம் ஏற்பட்டு
பொருட்கள் அழிந்து புக்கிடங்கள் சேதமுற்று
பெருந் துன்பமாயிற்று பிரார்த்தியுங்கள் மழைநீங்க"!
உக்கிரமாய்க் கேட்க உத்தமரோ கரமுயர்த்தி
பெருகும் மழையை நிற்பாட்டப் பிரார்த்தித்தார்
பிரார்த்தனை முடிவதற்குள் பெருமழையும் ஓய்ந்ததுவே

*158.*
*அற்புதமாய்க் கிரகணம் அகிலத்தில் ஏற்பட்டால்*
*அற்புதமாம் அல்லாஹ்வைத் தொழுது பிரார்த்திப்பீர்!*
*"பெற்றியுறும் அவனேதான் பெரியன்" எனச்சொல்வீர்*
*உற்றபொருள் ஏழைக்கு உவந்து கொடுத்திடுவீர்!*
*மற்றைநாள் துன்பத்தை மரணத்தின் கொடும்பிடியை*
*இற்றரையில் என்னைப்போல் நீங்கள் அறிவீரேல்*
*சிற்றளவே சிரிப்பீர்கள் பெருமளவு அழுவீர்கள்*

*159.*
*இருமாதம் தொடராக இறுதிநபி இல்லத்தில்*
*எரியவில்லை அடுப்பதுவும்; இருமாத உணவாக*
*சிறிதளவு பேரீச்சம் பழமதுவும் பாலும்தான்;*
*அருகிருக்கும் இல்லத்தார் அன்பளிப்பாய்க் கொடுத்தபாலைப்*
*பருகினரே நபிமணியும் பண்பான குடும்பமதும்*

*160.*
*'ஹிறக்ல்'எனும் ஒருமன்னர் கேட்டாரபூ சுப்யானிடம்*
*"இறுதிநபி யெனநீங்கள் இயம்புகிற முஹம்மதவர்*
*உறுதியுடன் உங்களுக்கு உபதேசம் செய்வதெவை?"*
*மறுமொழியா யபூசுப்யான் மனந்திறந்து சொல்கின்றார்:*
*"தவறாமல் ஐவேளை தக்கவனைத் தொழுதிடுதல்*
*தவமேவும் உண்மையையே தவறாமல் உரைத்திடுதல்*
*பவமேதும் செய்யாமல் பக்தியுடன் வாழ்ந்திடுதல்*
*தவறாமல் வாக்குறுதி தன்னையுடன் நிறைவேற்றல்*
*கவனமுடன் அமானத்தைக் காத்துக் கொடுத்திடுதல்"*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைபற்றி அபூசுப்யான் எடுத்துக் கூறியதும்
“இவையெல்லாம் நபியென்னும் ஏற்றமிகு மனிதரிடம்
தவறாமல் இருக்கின்ற தகையான பண்பு”என
கவனித்துப் பேசிநின்றார் ஹிறக்ல்எனும் மன்னவரும்.

*161.*

*இனியநபி நாயகமோ இவ்வுலகைப் பிரிகையிலே
கணித்துரைக்கும் காசுபணம் தீனாரை, திர்ஹத்தை,
மனிதர்களில் அடிமைகளை, மாபெரிய பொருளெதையும்
“துனியா”வில் விட்டவர்கள் துஞ்சவில்லை; தூயநபி
பயணிக்கப் பயன்படுத்தும் கழுதையதை, கருவியதை
நயமில்லாச் சிறிதான நிலத்துண்டை விட்டகன்றார்;
பயனில்லாப் பொருளவற்றைத் தன்வீட்டில் வைக்காது
நயமோம்பும் தருமமதாய் நாடியளித் தேகினரே*

*162.*

*மர்யத்தின் மகனாரை நஸாராக்கள் மிகப்பெரிதாய்
வருணித்துப் புகழ்ந்ததுபோல் வழுத்தாதீர் அடியேனை;
அருளிறையின் அடியானாய் ஆவேன்யான்; ஆனதினால்
“அருளாளன் அடியானாய் அவனன்புத் தூதுவனாய்
இருக்கின்றார்” என்றேதான் எனைப்பற்றிப் பேசுங்கள்*

*163.*

*இறைவனிடம் நாள்தோறும் ஏழுபத்து விடுத்தங்கள்
இறைஞ்சியே பிரார்த்திப்பேன் என்பாவம் பொறுத்தருள
இறையை வேண்டிடுவேன்” என்றார்கள் இறைதூதர்.*

*164.*

*உயர்குலத்துப் பெண்ணொருத்தி ஒருபோது திருடிவிட்டார்
உயர்குலத்தாள் திருடியது உயர்நபிக்குத் தெரிந்ததுவே
களவெடுத்த பெண்ணினது கைதறிக்கப் படுமாயின்
வளமான குலத்துக்குப் பேரிழிவு நேர்ந்துவிடும்
களவுக்குக் கைதறிக்கும் தண்டனைக்குப் பதிலாக*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுமுறைத் தண்டனையைத் தீர்த்திடுங்கள் எனநபியை
உளமஞ்சிக் கோருதற்கு உஸாமா எனும் தோழர்
நலமான நபியிடத்தில் நயமாக வந்துநின்றார்;
கனிவான நபிமணிக்குக் கடுங்கோபம் மூண்டதுவே
கனதிமிகு அல்லாஹ்வின் கனமான சட்டத்தைத்
துணிவாகத் திருத்துமெனத் தூண்டுதற்குத் துணிந்தாயா?
வலியோர்கள் களவெடுத்தால் வழங்காது தண்டனையை
எளியோர்கள் திருடிவிட்டால் வழங்கியதால் முன்னிருந்தோர்
நலிந்தார்கள் நசிந்தார்கள் நாசத்தில் வீழ்ந்தார்கள்
இறைவகுத்த சட்டத்தில் இம்மியும் மாற்றம்செயேன்
நிறைவான என்மகளார் நேசமிகு பாத்திமாவோ
கறைபாவம் களவுசெயின் கைதறிப்பேன் விடமாட்டேன்
இறைதூதர் இவ்வாறு உறுதியுரை செய்தார்கள்.

*165.*

இவ்வுலக நபிகளுக்கும் எந்தனுக்கும் உவமையது
செவ்வையுறக் கட்டியுள வீடதனைப் போன்றதுகாண்
அவ்வீடைப் பார்த்தவர்கள் ஆச்சரியப் பட்டார்கள்
அவ்வீட்டின் ஒருசுவரில் அமைந்ததுவே ஓட்டையொன்று
"அவ்விடத்தில் ஒருகல்லு அமைந்திருந்தால் இல்லமது
எவ்வளவு சிறப்பாகும்" என்றுபலர் சொன்னார்கள்
அவ்விடத்து ஓட்டையினை அடைக்குமொரு கற்போன்றே
இவ்வுலகில் நானுதித்தேன் இறுதிநபி நானாவேன்"
இவ்வாறு நபிநாதர் ஏற்றமுறச் சொன்னார்கள்

*166.*

தொழுகையிலே நபியவர்கள் தோய்ந்திருக்கும் வேளையிலே
பழுதான பண்புடைய உக்பாபின் முஃத்என்பான்
வலுவான துணியொன்றைப் பலமாக நபிமணியின்
கழுத்தினிலே போட்டதனைக் கனமாக முறுக்கிவிட்டான்
கழுத்தினிலே துணியிறுக்கிக் கனிநபிகள் கலங்குகையில்
எழுந்தங்கே வந்தார்கள் இணைதோழர் அபூபக்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இழுத்தவனைத் தள்ளிவிட்டு எழில்நபியைக் காப்பாற்றி*
*"பழுதில்லாப் பேரிறையோன் பாரினிலே அல்லாஹ்தான்"*
*அழுத்தமுறச் சொல்லியிதை அருள்வழியைக் காட்டிவைத்த*
*முழுமதியார் முஹம்மதுக்கு மோசம்ஏன் செய்கின்றீர்?*
*நலமான நபித்தோழர் அபூபக்கர் கேட்டாரே.*

*167.*
*"கஃபாவில் முஹம்மதவர் தொழுவதனைக் கண்டேனேல்*
*கழுத்தேறி மிதித்திடுவேன்" கர்ச்சித்தான் அபூஜஹ்லும்*
*நபியவர்கள் இதுகேட்டு, "நாடியவன் வருவானேல்*
*நலமான மலக்குகளோ நாதியற்ற தீயவனை*
*பலமாகப் பிடித்தடிப்பார்" பதிலங்கு சொன்னார்கள்.*

*168.*
*இறுதித் திருத்தூதர் இறுதித் தருணத்தில்*
*இருந்தார்; இன்னல்செய் பிணியும் பெருகியது*
*அருமைத் திருப்புதல்வி அழகார் பாத்திமாவை*
*அருகில் நபியழைத்து அவரின் காதுக்குள்*
*இறுதித் திருத்தூதர் ஏதோ சொன்னார்கள்*
*அருமைத் திருப்புதல்வி அழுதார் பின்னபிகள்*
*அருகில் புதல்வியரை மீண்டும் அழைத்துவைத்து*
*கருணை நபியவர்கள் புதல்வி காதுக்குள்*
*ஏதோ சொன்னார்கள் ஏற்று அவர்சிரித்தார்;*
*மாதர் பாத்திமாவின் மணியார் காதுக்குள்*
*நாதர் நபிமணியார் ஏதோ பேசியதும்*
*மாதர் முன்னழுது பின்னர் சிரித்ததுவும்*
*ஏதோ ஏதென்று இருந்தோர் கேட்டார்கள்*
*"இறுதித் தருணத்தில் உள்ளேன் இந்நோயின்*
*நெருக்கம் காரணமாய் நீங்கும் என்னுயிரும்"*
*அருமைத் தந்தையவர் அறிக்கை செய்தமையால்*
*உறுத்தும் துயரத்தால் அழுதேன் அதன்பின்னே*
*பெருமான் நபிமணிகள், " பிரியத் திருமகளே*
*வருவாய் எனக்குப்பின் முதலில் நீவருவாய்"*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைத்தார் உரைகேட்டு ஒளிர்ந்து சிரித்தேனே
உரைத்தார் பாத்திமாவும் உணர்ந்தார் எல்லோரும்

*169.*
மரணப் படுக்கையிலே மணமார் நபிமணியார்
இருக்கும் வேளையிலே எழுந்தே வந்துற்றார்
அருளார் அபூபக்கர் அருமை மகனான
திருவார் அப்துர்ரஹ் மானும்; அவரிடத்தில்
இருக்கும் மிஸ்வாக்கை இறுதித் திருத்தூதர்
குறிப்பாய்ப் பார்த்தார்கள்; கொடுத்தார் அவரதனை
அருமை ஆயிஷாவும் அதனை வாய்வைத்து
மிருது வாயாக்கி மேலாம் நபியிடத்தில்
கருதிக் கொடுத்தார்கள்; கருணை நபிமணியார்
திருவார் பல்வைத்துத் தேய்த்தார் அதனாலே
அருமை நபியவர்கள் அதன்பின் அயர்ந்தார்கள்;
“பெருமை மிகுதோழன் பேறார் இறைவனிடம்
மருவிச் செல்கின்றேன்” என்றார் சென்றாரே!

*170.*
மரணப் படுக்கையிலே மாண்புநபி இருக்கையிலே
சிறிதோர் பாத்திரத்தில் குளிரான நீரெடுத்துத்
தருமாறு கேட்டார்கள் தடவினார் முகத்தினிலே
“மரணத்தின் வேளையிலே மயக்கும் வருத்தமுண்டு”
உரைத்தார் நபிநாதர் “உயரிறையின் சமுகத்தை
நெருங்கிச் செல்கின்றேன்” என்றே மொழிந்தார்கள்.

*171.*
உறவினர்க்கு நம்தூதை உரைத்துணர்வு ஊட்டுமென
மறைவாக்கு வந்தவுடன் மாநபிகள் நாயகமும்
உரமான ஸபாமலையின் உச்சியிலே ஏறிநின்று
உரமாகச் சத்தமிட்டு ஊரவரை அழைத்தார்கள்
அழைத்தவுடன் வந்தோரை அண்ணல்நபி தான்நோக்கி
“மலைக்குப்பின் புறமிருந்து மாபெரிய படையொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைபோலத் தாக்குதற்கு ஆர்ப்பரித்து வருகுதென்று
மலைக்கின்ற செய்திசொன்னால் மனத்தாலே ஏற்பீரா?"
அழைத்தநபி யிவ்வாறு அவர்களிடம் வினவியதும்
"இலையெமக்குச் சந்தேகம் எல்லோரும் ஏற்றிடுவோம்!
பிழையான பொய்பேசீர்!" என்றார்கள் வந்தவர்கள்
"நிலையான இறையவனோ நிகரற்ற அல்லாஹ்தான்
நிலைத்தவனின் தூதுவராய் நலன்வந்தேன் நிலத்துக்கு
நிலையிதனை நிகழ்த்துதற்கே நானழைத்தேன் உங்களையே"
மலைக்காது மாநபிகள் மக்களுக்குச் சொன்னவுடன்
பிழையான நெறிசார்ந்த அபூலஹபு கர்ச்சித்தான்
"அழைத்தீரோ இதற்குத்தான்? அழிந்திடுக நீரென்று
பிழைசெய்யும் அபூலஹபு பேதமையாய்ப் பேசிநின்றான்
நிலைமையிது வேளையிலே "தப்பத்யதா" இறங்கியது.

172.
மூன்றுபேர் நபிமணியின் முழுமதியார் மனைவியரைக்
காணுதற்கு வந்தங்கு கருணைநபி வணக்கத்தின்
மாண்புதனைக் கேட்டார்கள்; மனைவியரோ விளக்கியதும்
"தீண்டாது பாவங்கள் திகழ்கின்ற நபிமணியார்
மாண்புடனே அதிகளவு வணக்கங்கள் செய்வாரேல்
பேணுதலே யில்லாத பிழையாளர் நாமெங்கே?
இரவெல்லாம் வணக்கத்தில் இருந்திடுவேன் ஒருபோதும்
இரவுதனில் கண்துஞ்சேன்" என்றொருவர் கூறினரே
"எப்போதும் உண்ணாமல் தப்பாது நோன்பிருப்பேன்"
இப்படியே மற்றொருவர் உறுதியுடன் சொன்னாரே
"இப்பாரில் மணமுடிக்கா திருப்பேனே நானென்று"
செப்பினரே ஒருமனிதர் சேதியிதைக் கேட்டுநபி
"முப்பேருங் கூறியவை முறையான செயலல்ல
இப்பாரில் என்வாழ்வை எப்போதும் பாருங்கள்!
எப்போதும் அல்லாஹ்வை நினைத்தஞ்சி வாழ்பவன்யான்
சிலநாட்கள் நோன்பிருப்பேன் சிலநாட்கள் புசித்திருப்பேன்
சிலவேளை இராப்போதில் வணக்கஞ் செய்திடுவேன்
சிலவேளை தூங்கிடுவேன் சிறப்பான இல்லறத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமாக நடத்திடுவேன் நான்காட்டும் இவ்வழியைப்
பலமாகப் பற்றுங்கள்" பண்புநபி சொன்னார்கள்.

*173.*
தூயநபி படுக்கையது தோலால் அமைந்ததுவே
தோயுமதற் குள்ளேதான் பேரீத்த மரவோலை;
சாந்திநபி ஸலாமுரைத்தால் மூன்றுமுறை சொல்வார்கள்
சாந்தமுடன் பேசுகையில் மூன்றுமுறை பேசிடுவார்.

*174.*
பங்கிட்டார் நபியொருநாள் பங்கீட்டுப் பொருட்களினை
பங்கிட்ட முறையதுவோ படைத்தவனாம் அல்லாஹ்வின்
சங்கையுள பொருத்தத்தைச் சார்ந்ததல்ல எனவொருவர்
பங்கமுறப் பேசியதும் பண்பான நபிநாதர்
வெங்கோபங் கொண்டார்கள் "வேதநபி மூஸாவை
சங்கையுறும் இறைபொருந்தி சார்ந்தஅருள் பெய்யட்டும்!
சங்கைமிகு மூஸாவோ சகித்தார்கள் துன்பமெலாம்"
மங்களமார் நபிமுஹம்மத் மனமுருகிச் சொன்னார்கள்.

*175.*
"என்சமூகத் தாரெல்லாம் எழில்சுவனம் ஏகிடுவர்
புன்மையுடன் நீங்கியவர் புகமாட்டார் சுவனத்தில்"
"புன்மையுடன் நீங்குமந்தப் பொல்லாதார் யார்நபியே?"
"என்வாழ்வைப் பின்தொடர்ந்தோர் எழில்சுவனம் புகுவார்கள்
என்வாழ்வை மறுத்தவர்கள் எனைவிட்டு நீங்கியவர்."

*176.*
எதனைநான் விட்டேனோ அதைநீங்கள் விட்டிடுங்கள்
முதல்வாழ்ந்த சமூகத்தார் முன்னழிந்து போனதுவோ
குதர்க்கங்கள் பேசியதும் நபிமாரின் நல்லுரைக்கு
எதிர்ப்புக்கள் காட்டியதும் காரணமாம்; என்தோழீர்
எதனைநான் தடுத்தேனோ அதைமுற்றாய் விட்டிடுங்கள்
எதனைநான் பணித்தேனோ முடிந்தளவு செய்திடுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

177.
வன்முறைகள் நபிமணியின் வாழ்க்கையிலே வாய்த்ததில்லை
வன்சொல்லும் அன்னாரின் வாய்மொழியில் வந்ததில்லை
இன்சொல்லும் செயலுமொன்றாய் இணைந்தவொரு இறைதூதர்
"இன்குணத்தைப் பெற்றவரே ஏற்றமுளார்" என்றுரைத்தார்.

178.
பற்களெலாம் வெளித்தெரிய சிரித்தறியார் நபியவர்கள்
கற்கண்டுக் கனிமொழியார் புன்முறுவல் பூப்பார்கள்.

179.
உறங்குகையில் நபிநாதர் வலதுபுறம் உறங்கிடுவர்
உறங்குமுனம் உருக்கமுடன் துஆஓதிப் பிரார்த்திப்பர்.

180.
படுக்கைக்கு நபிசென்றால் பக்தியுடன் துஆவுடனே
அடுத்திருக்கும் முஅவ்விதாத்தும் ஓதிக்கை தனில்ஊதி
உடல்முழுதும் தடவியபின் உறங்கச் செய்வார்கள்.
(முஅவ்விதாத் : சூறதுல் இக்லாஸ், சூறதுல் பலக்,
சூறதுன்னாஸ்)

181.
இறுதிவரை இறைதூதர் இனிதமர்ந்து மேசையிலே
அருந்தவில்லை உணவுதனை இறுதிவரை அன்னாரோ
மிருதுவான ரொட்டியினை மிகச் சுவைத்துச் சுகிக்கவில்லை.

182.
ஒருநாளும் நபிமணியார் உணவெதையும் பழிக்கவில்லை
திருப்தியெனில் தின்பார்கள் இல்லையெனில் விடுவார்கள்.

183.
உணவெதுவும் நபிமணிக்கு வருமானால் நபியவர்கள்
வினவிடுவர் "இவ்வுணவு வந்தவிதம் எவ்வாறு?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணக்கமுறு நன்கொடையா? இல்லையது ஸக்காத்தா?"
உணவதுவோ ஸக்காத்தென் றுரைசெய்யப் படுமாகில்
மணமான நபிநாதர் தோழர்தமக் களித்திடுவார்
இணங்குநன் கொடையானால் ஏற்றுநபி யுண்பார்கள்.

## நற்பண்புகள்

*184.*
கரத்தாலும் நாவாலும் கடுந்தீங்கு செய்யாதார்
சிறந்தோங்கும் முஸ்லிமெனச் செழிப்பார்கள் செகத்தின்கண்
வெறுப்பவரோ இறையவனும் வெறுக்கின்ற விடயத்தை
மறுவில்லாப் புனிதரென மாநபிகள் சொன்னார்கள்.

*185.*
"செழிக்கின்ற இஸ்லாத்திற் சிறந்ததெது?" எனவொருவர்
வளமோங்கும் நபியிடத்தில் வாஞ்சையுடன் வினவுகையில்
"அளித்திடுதல் நல்லுணவு அறிந்தார்க்கும் அறியார்க்கும்
மொழிந்திடுதல் ஸலாம்வாழ்த்து" முத்துநபி சொன்னார்கள்.

*186.*
செயற்களிலே செம்மையுறுஞ் செயலெதென செம்மலிடம்
"உயர்வான அல்லாஹ்வை ஒளிர்நபியை நம்பிடுதல்"
இயம்பியதும் நபியிடத்தில் பின்னரெது வெனக்கேட்க
உயர்த்துதற்கு "தீன்" நெறியை உறுதியுடன் போரிடுதல்
நயமாக நபியுரைக்க பின்னரெது வெனக்கேட்க
நயந்தேற்கப் பட்டவுயர் ஹஜ்ஜென்றார் நபிநாதர்.

*187.*
அன்பர் அபூதர்ரும் அவரடிமை யானவரும்
ஒன்றாய் ஓரிடத்தில் ஒருவகையாம் உடையணிந்து
நின்றார் இதுபற்றி நேசர்கள் வினவுகையில்
"குன்றாக் கோபத்தால் ஒருவருக்கு ஏசிவிட்டேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை பெயரிழுத்து அவமதித்துப் பேசிவிட்டேன்”
அண்ணல் நபியிதனை அறிந்துடனே யெனையழைத்து
“என்ன செயல்செய்தீர்? அறியாமைக் காலத்துப்
புன்மைச் செயலின்னும் புரிகின்றீர்! பொருந்திடுமா?
உங்கள் அடிமையரோ உங்களது தோழர்கள்
உங்கள் உணவைத்தான் உவந்தளிப்பீர் அவர்தமக்கும்
உங்கள் உடையைத்தான் உடுத்திடுவீர் அன்னார்க்கும்
பழுவாம் வேலைதனைப் பணிக்காதீ ரவர்களுக்கு
பழுவா யிருப்பவற்றிற் பங்கெடுத்துச் செய்யுங்கள்”
வழுவாப் புகழ்நபிகள் அழுத்திச் சொன்னார்கள்.

188.
இருமடங்கு கூலியுண்டு ஏற்றமுள மூவருக்கு:
உறுவேதக் காரரவர் உற்றஅவர் நபியினையும்
திருநபிகள் முஹம்மதையும் தேர்ந்துவிசு வாசித்தார்;
ஒருவரிடம் அடிமையராய் உள்ளவரோ இறைவனதும்
உறும்எஜமான் தம்மினதும் கடமைகளைச் செய்பவராம்;
ஒருபெண்ணைத் தன்னிடத்தில் உற்றவொரு அடிமையெனப்
பெறுமொருவர் பேணியந்தப் பெண்ணுக்கு அறிவூட்டி
பெறுமதியாம் ஒழுக்கமதும் ஊட்டியநல் எஜமானர்;
அருமையுறப் பெண்ணவரின் அடிமைத் தளையறுத்து
பெருமையுடன் அப்பெண்ணைத் திருமணமும் செய்தவராம்.

189.
பானங்கள் பருகுகையில் பாத்திரத்தில் ஊதவேண்டாம்
பேணிமல சலங்கழிக்கும் போதுங்கள் ஆணுறுப்பைத்
தீண்டாதீர் வலக்கையால் எனநபிகள் இயம்பினரே.

190.
காலணிகள் பூணுதலில் தலைமுடியைச் சீவுவதில்
கால்கையைக் கழுவுவதில் காரியங்கள் முழுவதிலும்
சீலநபி வலப்பக்கம் முற்படுத்திச் சிறந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

191.
சிறப்போங்கும் மதீனத்துன் னபவீயெனும் பள்ளிக்குக்
கிராமத்தில் இருந்துவந்த ஒருமனிதர் ஒருநாளில்
சிறுநீரைப் பள்ளியிலே கழித்திட்டார் கண்டவர்கள்
பெருஞ்சினமே கொண்டார்கள் பெருமானார் இதைக்கண்டு
"வெருட்டாதீர்! வெஞ்சினமுங் கொள்ளாதீர்! அமைதியுடன்
ஒருவாளி நீரெடுத்து ஒழுங்காகக் கழுவிடுவீர்!
அறியாமல் அவர்செய்தார் அதற்காகக் கோபித்தல்
பொருந்தாது பொறுமையுடன் இன்செயலுக் காய்வந்தீர்
வருத்துகிற வன்செயலுக் காய்நீங்கள் வரவில்லை"
கருணையுடன் இவ்வாறு கனிவாகப் பேசினரே.

192.
உடல்தன்னில் ஒருதுண்டு உள்ளதது சீர்பெற்றால்
உடலெல்லாம் சீர்பெறுமே அதுகெட்டால் உடல்கெடுமே;
உடலிலுள உள்ளமதாம் உணர்த்தினரே உம்மிநபி.

193.
முன்பக்கம் வலப்பக்கம் முனைந்தெச்சில் துப்பாதீர்
தன்னிடது பக்கத்தில் தாளின்கீழ் துப்புங்கள்.
(தாள் : பாதம்)

194.
வினைகளிலே அல்லாஹ்வும் மிகவிரும்பும் வினையெதென்று
இணையில்லா நபியிடத்தில் எழுந்தொருவர் கேட்டபோது
நினைந்துரிய நேரத்தில் தொழுகையினை நிறைவேற்றல்;
பின்னரெது பேரிறைக்குப் பிரியமெனக் கேட்கையிலே
அன்னைதந்தை யிருவருக்கும் அன்புதனைப் பெய்திடுதல்;
இன்னுமெது இறைவனுக்கு ஏற்றதென்று கேட்டபோது
புண்ணியநல் லிறைவழியில் போரிடுதல் என்றார்கள்
இன்னுமின்னும் சொல்கவென எடுத்தெடுத்துக் கேட்டிருந்தால்
இன்னுமின்னும் நபியவர்கள் இயம்பித்தா னிருப்பார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

195.
நிழலில்லா மறுமையிலே நிழலுண்டு எழுவர்க்கு
நலமோம்பும் நேர்மையுடன் நீதிசெயும் நற்றலைவர்
வளமான வணக்கத்தில் வளர்கின்ற வாலிபராம்
உளத்தாலே பள்ளியினை உவந்திருக்கும் உத்தமராம்
நிலத்தினிலே இறைக்காக நேசிக்கும் இருநேசர்
அழகான பெண்ணொருத்தி ஆசைக்கு அழைக்கையிலே
அளவில்லா அருளிறையை அஞ்சுகிறேன் எனக்கூறி
விலகியநற் பண்பாளர் விருப்புடனே தருமங்கள்
வழங்குபவர்; ரகசியமாய் வணக்கத்திற் தனித்திருந்து
அழுதழுது புலம்புபவர் அவ்வேழு சாராராம்.

196.
அவனியிலே அநியாயம் இழைத்தவர்கள் தாமெவர்க்கு
அவமாக அநியாயம் செய்தனரோ அவரிடத்தில்
கவனமுடன் பிழைபொறுக்கக் கேட்டிடுக! இல்லையெனில்
பவமதனை இறையவனோ பொறுத்தருள மாட்டானே!

197.
“சந்திகளில் பொந்துகளில் சனங்கூடும் தெருக்களிலே
குந்தி யிருக்காதீர்! கூடிக் கதைக்காதீர்!”
இந்தக் கட்டளையை இறுதிநபி இட்டவுடன்
“தெருக்களிலே இருக்கின்ற தேவையெமக் கேற்பட்டால்
இருப்பதற்குத் தடையுண்டா?” எனத்தோழர் வினவினரே
“தெருக்களிலே கட்டாயம் இருக்கவேண்டி யேற்பட்டால்
இருப்பதற்கே யுரித்தான நல்லொழுக்கம் பேணிடுவீர்!
வெறுத்தொதுக்கும் காட்சிகளைப் பார்க்கா திருந்திடுவீர்!
ஒறுக்கும் தீங்கெதுவும் ஒருவர்க்கும் செய்யாதீர்!
உரைக்கும் ஸலாத்திற்கு உரியபதில் ஸலாம்சொல்வீர்!
விரும்பும் நற்கருமம் செய்யப் பணித்திடுவீர்!
வெறுக்கும் தீச்செயலை விரட்டித் தடுத்திடுவீர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

198.

கொடுப்பனவு எதையேனும் புத்திரர்க்குக் கொடுப்பீரேல்
கொடுப்பதனைச் சமனாகப் புத்திரர்க்குக் கொடுத்திடுங்கள்.

199.

அன்பளிப்புக் கொடுத்துவிட்டு அதைப்பின்னர் பெறவேண்டாம்
பின்மீளப் பெறுவதுவோ தான்வாந்தி யெடுத்ததனைப்
பின்வாய்க்குட் செலுத்துவதைப் போலென்றார் நபிநாதர்.

200.

பணியாட்கள் யாருமின்றிப் பண்புநபி நாயகமோ
அணிமதினா வந்தார்கள் அப்போது அபூதல்ஹா
அனஸ்என்னும் இளந்தோழர் தனையழைத்து வந்தங்கு
"அனஸென்னும் இவரையுங்கள் அன்பான பணியாளாய்
இணக்கமுடன் ஏற்றருள்க" என்றுநபி மணியிடத்தில்
மனமொப்பிக் கொடுத்தார்கள்; மதீனத்தில் அனஸவர்கள்
அணிநபியின் பணியாளாய் அன்பாகப் பணிசெய்தார்
பணியாளை நபிமணியோ பகைத்தொருநாள் தனிற்கூட
ஏனிதனை நீர்செய்தீர்? ஏன்செய்ய வில்லையென்று
மாநபிகள் சினக்கவில்லை மகிழ்ந்தன்பு பெய்தார்கள்.

201.

"பனுன்னஜ்ஜார்" கிளையார்க்குப் பள்ளிகட்டப் பணித்தநபி
பணியதனைச் செய்வதற்குப் பணமெடுக்கச் சொன்னபோது
பணமெதுவும் பெறாதிந்தப் பணிசெய்வோம் அல்லாஹ்வின்
இணக்கத்தைப் பெறுவதொன்றே எங்களது இலக்கென்றார்.

202.

திருநபியின் திருப்பேரர் ஹஸனவர்கள் தினமொன்றில்
திருநபிக்கு வந்திருந்த ஸகாத்ஈத்தங் கனியொன்றை
கருதித்தம் வாய்க்குள்ளே இடுதற்கு முனைகையிலே
பெருமானார் தடைசெய்து ஸகாத்பொருட்கள் நமக்கிங்கு
ஒருபோதும் ஆகாதென் றுரைத்தார்கள் நபிநாதர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

203.
அடக்கமுடன் அமைதியுடன் அகிலத்தில் வாழுபவர்
திடமான சுவனத்தின் தேடரிய சுகங்காண்பார்
அடக்கமிலாப் பெருமையுடன் ஆடம்பர வாழ்வமைப்போர்
கிடந்துழல்வர் நரகத்தில் கீர்த்திநபி சொன்னார்கள்.

204.
"முன்னிருந்தோர் செய்கையினை முழத்துக்கு முழமாக
இன்னுமவர் செய்கையினை சாணுக்குச் சாணாக
பின்பற்றிப் போவீர்கள் பேதமையால் உடும்புறையும்
புற்றுக்குள் அன்னாரோ புகுந்துறையப் போவாரேல்
புற்றுக்குள் நீங்களும்தான் புகுந்துவிடப் பார்ப்பீர்கள்"
இற்றைச்சொல் இறுதிநபி இயம்பியதும் தோழர்கள்
"இற்றரையில் யூதர்களைக் கிறிஸ்தவரைச் சொன்னீரோ?"
அண்ணலிடம் வினவியதும் அருள்சுமக்கும் நபிநாதர்
"அன்னவரை யல்லாமல் யாரைநான் சொல்லுவனோ?"
என்றார்கள்; நபித்தோழர் இனிதேற்றுக் கொண்டார்கள்.

205.
நிலத்துண்டை ஒருமனிதர் விலைகொடுத்து வாங்கினாரே
நிலத்துண்டைப் பெற்றவரோ நிலமொருநாள் தோண்டுகையில்
நிலத்துக்குள் ஒருபெட்டி இருப்பதனைக் கண்டெடுத்தார்
பெட்டியதைத் திறந்தவரும் பிரித்தங்கு பார்க்கையிலே
பெட்டிக்குள் தங்கமது நிறைந்திருக்கக் கண்டாரே
தங்கத்தைப் பெற்றநபர் தனக்கந்த நிலத்துண்டை
சங்கையுடன் விற்றவரைச் சந்திக்கப் பறந்தோடி
"உங்களிடம் பெற்றஅந்தப் பூமியிலே பெற்றேனே
தங்கமதை; தங்களிடம் பூமியைத்தான் வாங்கினனே
தங்கமது வேண்டாங்காண்! தங்கமதைப் பெற்றுக்கொள்!"
வாங்கியவர் பூமியினைத் தங்கமதைப் பெறமறுத்தார்
விற்றவரும் தங்கமது தமக்குரித்து அல்லவென்றார்
"விற்றபூமி யுடன்சேர்த்து விற்றுவிட்டேன் எல்லாமும்
விற்றபூமி தனிலுள்ள தங்கமதும் உமக்குத்தான்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்றவரும் உறுதிபட வேண்டாமெனச் சொல்லிவிட்டார்
விற்றவரும் பெற்றவரும் நீதிதேடிப் போனார்கள்.
விற்றவரும் மறுக்கின்றார் பெற்றவரும் மறுக்கின்றார்
உற்றஅந்தத் தங்கத்தை யாதுசெய்வ திப்போது?
"உங்களுக்குப் பிள்ளையேதும் உண்டாமோ?" எனஅந்தத்
தங்கத்தின் வழக்கதனின் நீதிவான் கேட்கின்றார்
எனக்குள்ளார் ஆண்மகனும் என்றொருவர் இயம்பிட்டார்
எனக்குள்ளார் பெண்மகளும் என்றொருவர் சொன்னாரே
"ஆண்மகனைப் பெண்மகளுக்(கு) இனிதாக மணமுடித்து
மாண்புடனே இருபேரும் மங்களமாய் வாழுதற்கு
இருவருக்கும் தங்கத்தைப் பிரித்துக் கொடுத்திடுக!
இருவருக்கும் தங்கத்தைத் தருமம் செய்திடுக!"
நீதிபதி தீர்ப்பதனை நிகழ்த்தியதும் இருவருமே
நீதியதை ஏற்றங்கு நெடுமகிழ்வு கொண்டார்கள்.

206.

விதவையரை ஏழையரை விருப்பமுடன் காப்பதற்கு
உதவுகிற நற்பணியில் ஊக்கமுடன் உழைப்பவரோ
இதமான இஸ்லாத்தின் போராளி போன்றவராம்
இரவெல்லாம் விழித்திருந்து வணங்குபவர் போன்றவராம்
நிறைவாகப் பகலெல்லாம் நோன்பிருக்கும் தன்மையராம்.

207.

திருநபியின் திருத்தோழர் தாபித்பின் கைஸென்பார்
பெருமானார் சமுகத்திற் பலநாட்கள் வரவில்லை
வருகையது தடைப்பட்ட வகையென்ன வெனத்தெரிந்து
வருமாறு தோழர்களை வள்ளல்நபி அனுப்பினரே
"திருத்தோழர் தாபித்கைஸ் தின்னாமல் உண்ணாமல்
இருக்கின்றார் வீட்டுக்குள் ஏக்கத்தில் உழல்கின்றார்"
பெருமானார் தோழர்கள் நபியவர்க்குச் சொன்னார்கள்.
"ஏனிந்த நிலைதானோ? என்னதான் காரணமோ?"
மாநபியின் தோழர்கள் தாபித்தைக் கேட்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாநபியின் சமுகத்தில் மடத்தனமாய்ச் சத்தமிட்டு
பேணாமல் ஒழுங்குமுறை பேசிவிட்டேன் பிழைசெய்தேன்
வான்புகழார் நபிமணியின் வளமான முகத்தினிலே
நான்விழிக்கத் தயங்குகிறேன் நரகுக்குப் பாத்திரமாய்
நானாவேன் எனப்பயந்தேன் நான்வீட்டில் ஒழிந்துள்ளேன்
மாண்புடனே நான்செய்த மகத்தான அமலெல்லாம்
தானழிந்து போகுமெனத் தயங்கியான் அஞ்சுகிறேன்"
தீன்குணத்து தாபித்தவர் தெளிவாகச் சொல்லியதை
மாநபிகள் தம்மிடத்தில் ஒருமனிதர் தெரிவித்தார்
"மேன்மையுறு தாபித்தோ மனமஞ்சத் தேவையில்லை
தீனுள்ளம் பெற்றஅவர் தீநரகில் விழமாட்டார்
மாண்பான சுவனத்தில் மகத்தான சுகந்துய்ப்பார்
நானவர்க்குச் சொன்னஇந்த நல்வாழ்த்தைச் சொல்லுங்கள்"
மாநபிகள் இவ்வாறு மனங்கனிந்து சொன்னார்கள்.'

208.
பசித்துள்ள ஒருமனிதர் பண்புநபி தம்மிடத்தில்
புசிப்பதற்கு உணவேதும் தருமாறு கேட்டுநின்றார்
பசியாளிக் குணவுதர ஏதுமில்லை நபியிடத்தில்
"பசியுடனே வந்திருக்கும் பாமரருக் குணவளிக்க
இசையுமவர் யாரும்மில்?" எனநபிகள் வினவியதும்
"இசைந்துள்ளேன் யானெ"ன்று எழுந்துவந்தார் அன்ஸாரீ
பசித்திருக்கும் தோழரினைப் பண்புடனே வீட்டுக்கு
பசிக்குணவு கொடுப்பதற்கு அழைத்துச் சென்றாரே
"குழந்தைக்கு வைத்துள்ள உணவேதான் இங்குண்டு
அளவுக்கு மேலாக ஏதுமில்லை" என்றங்கு
எழிலார் மனைவி கணவரிடம் எடுத்துரைத்தார்
"இருக்கும் சிற்றுணவை இங்குவந்த ஏழைக்கு
அருந்தக் கொடுத்திடுவோம்! அன்புக் குழந்தையினை
உறங்கச் செய்யுங்கள் உணவைக் கொணர்ந்தங்கு
பரவி வைக்கையிலே விளக்கை அணைத்திடுங்கள்
ஏழை விருந்தாளி இருட்டில் உணவுண்பார்"
மேலாய் நபித்தோழர் மேவி மனைவியிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார் அப்படியே செய்தார் மனைவியவர்
அன்னார் குடும்பமது பசியோ டவ்விரவில்
கண்ணே துஞ்சியது கருணை நபியவர்கள்
அன்னார் செய்கையினை அறிந்து மகிழ்வடைந்து
"அன்னார் செயல்கண்டு அல்லாஹ் மகிழ்ந்தானே"
என்று புகழ்ந்தார்கள் இனிதே மகிழ்ந்தார்கள்.

209.
ஒரு சிறுவர் நபியுடனே உட்கார்ந்து உணவுண்டார்.
சிறுவரவர் பாத்திரத்தில் அவர்பக்கம் உளஉணவை
அருந்தாமல் மற்றவரின் பக்கமுள்ள உணவுதனை
அருந்தியதை நபிகண்டு அச்செயலைத் தடுத்தார்கள்.
விருந்துகளிற் பலர்சேர்ந்து அருந்துகிற வேளையிலே
அருந்துபவர் தன்பக்க உணவுதனை உண்டிடுக!
அருமையுறும் சிறுமகனே, வலக்கரத்தால் உண்டிடுக!
அருகினிலே உன்பக்க உணவெடுத்துப் புசித்திடுக!
அருளாளன் திருநாமம் இனிதோதிப் புசித்திடுக!
அருள்நாதர் சிறுவருக்கு அறிவுரையே செய்தார்கள்.

210.
சிறியவரே பெரியவர்க்கு முதலில் ஸலாமுரைக்க!
இருப்பவர்க்கு நிற்பவரே முதலில் ஸலாமுரைக்க!
சிறுகூட்டத் தினருக்குப் பெருங்கூட்டம் ஸலாமுரைக்க!
பிரயாணித் திருப்பவரே நடப்பவர்க்கு ஸலாமுரைக்க!

211.
முத்தினத்துக் கதிகம்நாள் மூண்டபகை யோடொருவர்
இத்தரையில் கோபமுடன் இருப்பதுவோ கூடாது
பகைத்திருக்கும் இருவரிலே பகைநீக்கி முதன்முதலில்
நகைத்தன்பாய்ப் பேசுபவர் நானிலத்திற் சிறந்தவராம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

212.
பிறர்மனையில் நுழையுமுன்னர் பேணுதலாய் மூன்றுமுறை
உறுமந்த வீட்டார்தம் உத்தரவைக் கோரிடுக!
முறையாக மூன்றுமுறை அனுமதியே கேட்டபின்னும்
நிறைவான உத்தரவைத் தராவிட்டால் நுழையாதீர்!

213.
நபிமணியின் வீட்டுக்கு நாடியொரு ஸஹாபிவந்தார்
நபிமணியின் இல்லத்துக் கதவுதனைத் தட்டிநின்றார்.
நபியவர்கள் "யார்" என்று நயமாகக் கேட்டார்கள்.
"நான்நானே" என்றந்த நபித்தோழர் நவின்றாரே
"நான், நான், நான்" நபிகூறி வெறுப்பதனைக் காட்டினரே.
நானென்று கூறாமல் பெயர்கூறச் சொன்னார்கள்.

214.
இருப்பவரின் இடத்திருந்து இருப்பவரை எழுப்பிவிட்டு
இருந்தவரின் இடத்தினிலே இருக்காதீர்! குற்றமென்றார்.

215.
"மூன்றுபேர் இருக்கையிலே முனைந்தங்கு இருநபர்கள்
வீணாக ரகசியமே பேசாதீர்" நபிசொன்னார்.

216.
வல்லபொருள் குவிந்திருத்தல் வையத்திற் செல்வமல்ல
செல்வத்திற் பெருஞ்செல்வம் போதுமென்ற பொன்மனமே.

217.
மெய்யான விசுவாசம் மேவுபவர் மேதினியில்
மெய்வார்த்தை நல்லவற்றைப் பேசட்டும்; இல்லையெனில்
பொய்வார்த்தை பேசாது புகல்வாயை மூடட்டும்.
துய்தாக அயலாரைத் துன்புறுத்தா திருக்கட்டும்.
உய்வடைய விருந்தினர்க்கு உணவளித்து உதவட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

218.
கரத்தாலும் நாவாலும் கஷ்டங்கள் அணுகாது
சிறப்புடனே மற்றவரைச் செழிப்பிக்கும் புண்ணியர்தான்
அறந்தாங்கு முஸ்லிமென அருளினரே அண்ணல்நபி.

219.
உலகத்துப் பொருட்பண்டம் உம்மைவிடப் பெருகியவர்
நிலைநோக்க வேண்டாமே! நிலவுலகிற் செல்வத்தில்
குலைந்திங்கு குறைந்தவரைக் கூர்ந்துநீர் பார்த்துனது
நிலைக்காக இறைவனுக்கு நெஞ்சார நன்றிசொல்க!

220.
இறுதி ஹஜ் வேளையிலே திரண்டநபித்தோழருக்கு
இறுதிநபி பெருமானார் உறுதிபட உரைசெய்தார்;
"இந்நாளும் இவ்வூரும் இணையுமிந்த மாதமதும்
கண்ணியமா யிருப்பதுபோல் கண்ணியமேயும்முதிரம்
கண்ணியமா யுள்ளனவே உம்பொருளும் உடைமைகளும்
நன்னயமா யுரைத்திட்டேன் நான்மறைந்த பின்னர்நீர்
கண்ணியமே தவறாதீர் கடுங்குபிரில் வீழாதீர்
மண்ணகத்திற் பிளவுண்டு கொல்லாதீர்! குதறாதீர்!

221.
எவரேனும் பிறர்வீட்டில் எட்டிப்பார்த் திடுவாரேல்
அவர்கண்ணிற் குத்தியவர் பார்வையது நீங்கிடினும்
பவமில்லை யென்றார்கள் பண்புநபி நாயகமும்.

222.
என்சமூகத் தெப்போதும் இருப்பார்கள் நல்லவர்கள்
பொன்னான பணிகளினால் பூவுலகை வெல்வார்கள்.

223.
மனிதருக்கு இரங்காத மாந்தரினை மன்னனிறை
கனிவுடனே இரங்கானே; கனியநபி மொழிந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

224.
தாடியினை வளர்த்துமீசை முடிகளைக எனநபிகள்
நாடியருள் செய்தார்கள் நாமதனை ஏற்போமே.

225.
நித்தமுமே எல்லோரும் நிறைதருமம் செய்திடுக!
உத்தமமாய் உழைத்துழைத்து உயர்வாக உண்டிடுக!
சக்தியில்லா மனிதருக்கு சாந்தியுடன் உதவிடுக!
பக்தியுறு நற்கருமம் செய்தற்குப் பணித்திடுக!
எக்காலும் தீச்செயலைச் செய்யாது வாழ்ந்திடுக!

226.
கனிகுணத்திற் சிறந்தவரே மனிதர்களிற் புனிதரென
இனிகுணத்து நபிமணியார் இதமாகச் சொன்னார்கள்.

227.
அளவுக்கு மேலாக ஒருநபரை முகத்தினிலே
பலவாறு புகழ்ந்துரைத்த மனிதரினைப் பார்த்து நபி
"அழித்து விட்டீர் நீரவரை அவருக்குத் தீங்குசெய்தீர்
அளவிறந்து ஒருவரினைப் புகழாதீர்" எனச்சொன்னார்.

228.
தப்பெண்ணம் எவர்மீதும் கொள்ளாதீர் தப்பெண்ணம்
ஒப்பில்லாக் குற்றமென உரைத்தார்கள் உண்மைநபி.

229.
இருநபர்கள் கோபித்துப் பகைத்திருக்க முதன்முதலாய்
வெறுப்பகற்றி ஸலாம்கூறி விருப்பமுடன் நட்போம்பும்
ஒருமனிதர் மேலவராம் உரைத்தார்கள் நபிமணியார்.

230.
உண்மையதை உரைப்பதுவே ஊக்குவிக்கும் நற்செயலை
நன்மையுறு காரியங்கள் நற்சுவனம் சேர்த்திடுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையினை உரைப்பவரோ உண்மையினர் எனும்பெயரைக்
கண்ணியமாய்ப் பெற்றிடுவார்; கதியிழக்கும் பவச்செயலோ
புன்மையுறு நரகத்திற் புகுத்திவிடும்; பொய்யுரைப்போர்
புண்ணியங்கள் இல்லாத பொய்யெரெனப் பெயர்பெறுவார்.

231.
போர்க்களத்திற் போராடும் தீரனவன் வீரனல்லன்
ஆர்க்கின்ற கோபத்தை அடக்குனனே அதிவீரன்.

232.
"அறிவுரைகள் சொல்லுங்கள் அண்ணலரே"எனவொருவர்
அருளான நபியிடத்தில் அன்புடனே வேண்டியதும்
"ஒருபோதும் கோபிக்க வேண்டா" மென்றுரைத்தார்கள்.
மறுமுறையும் மறுமுறையும் மனிதரவர் வேண்டியதும்
திரும்பவுமே, " கோபிக்க வேண்டா" மென்றுரைத்தார்கள்.

233.
இறைத்தூதின் இன்னுரையில் எழுந்தமுதல் வார்த்தையது
"இறைபக்கல் வெட்கமின்றேல் எண்ணியதைச் செய்திடுக!"
எனுஞ்சொல்லே என்றார்கள் இறுதிநபி பெருமானார்.

234.
கனிவாக நடவுங்கள் கடிதான குணம்வேண்டாம்!
இனிதாகப் பேசுங்கள் வன்செயலோ வேண்டாமே!

235.
தேவைகள் உள்ளோர்கள் தேவைகள் நிறைவேற்ற
சேவைகள் செய்கின்ற சீர்நபியை நாடிவந்தால்
தேவைகள் தீர்த்திடுவார் தித்திக்கும் திருநபியார்
தேவைகள் உள்ளோரின் தேவைகள் தீர்த்திட்டால்
தேவையுறும் மறுமையிலே துணைசெய்வான் தூயஇறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**236.**
சாந்தி நபிமணியை சந்திக்க வந்திருந்த
சேர்ந்தவொரு கூட்டத்தார் சினத்தோடு நபியவரை
சார்ந்து சபிப்பதுபோல் "அஸ்ஸாமு அலைக்கு"மென
"சாரட்டும் மரணமதும் சாபமதும்" என்றார்கள்
"சாரட்டும் அவ்வாறே" என்றங்கு ஆயிஷாவும்
சபித்தோரைச் சபித்தாரே சாந்திநபி இதுகேட்டு
"சீறிச் சினக்காதீர் ! சபிக்காதீர் !" எனச் சொன்னார்.

**237.**
இருமுகத்தார் மறுமையிலே இறையிடத்தில் மிகத்தீயர்
ஒருமுகத்தோ டொருவரிடம் ஒருவாறு கதையளப்பார்
மறுமுகத்தோ டொருவரிடம் மறுபேச்சுப் பேசிடுவார்.

**238.**
மதீனத்து நண்பரது மனைக்கொருநாள் நபிசென்றார்
இதமான உணவுதனை இல்லத்தார் நபிக்களித்தார்
மதிநிகர்த்த மாநபிகள் மதீனத்தார் மனையதிலே
நிதமருளும் அல்லாஹ்வை நிம்மதியாய்த் தொழுதங்கு
இதமான உணவளித்த இனியவர்க்கு துஆச்செய்தார்.

**239.**
இறைவிரும்பும் இன்மொழியை எப்போதும் பேசுபவர்
நிறைவான பாக்கியங்கள் நிச்சயமாய்ப் பெறுவாரே
இறைவெறுக்கும் கொடும்பேச்சை ஈனமுடன் பேசுபவர்
வரையறையே இல்லாத கொடுநரகில் வீழ்வாரே.

**240.**
இறந்தவரை ஒருபோதும் ஏசாதீர் தூற்றாதீர்
இறந்தவரோ இவ்வுலகில் செய்தவற்றின் பலாபலனை
அறிந்துவிடப் போய்விட்டார்; அறிவித்தார் அண்ணலவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

241.
நபிமணியின் நற்பேரர் நயக்கும் ஹஸனவர்கள்
நபியை வந்தடைந்த தருமப் பழமெடுத்து
வாயிற் போடுகையில் வள்ளல் நபிதடுத்து
வாய்க்கும் ஸகாத்தெமக்குப் பெறுதல் கூடாது
வாய்க்குட் போடாதீர்! வேண்டாம்! என்றார்கள்.

242.
ஹலால்ஹறாத்தைப் பேணாது கண்மூடிப் பொருளீட்டும்
காலமொன்று வருமென்று கனியநபி எச்சரித்தார்.

243.
நிறைவான நல்லுணவும் நெஞ்சினிக்கும் வளவாழ்வும்
பெறுதற்கு விரும்புபவர் பேணிடுக இனசனத்தை.

244.
கூலிவேலை செய்பவர்க்குக் குறைக்காதீர் கூலியினை.

245.
வீதியிலே ஒருமனிதர் விரைவாக நடந்து சென்றார்
பாதையிலே அவருக்குக் கடுந்தாகம் தோன்றியது
வீதியதன் அருகிருந்த கிணற்றிருந்து நீரெடுத்து
பாதிக்கும் தாகத்தைத் தணித்தவரும் பயணித்தார்.
நாயனுக்கு நன்றிசொல்லி நடந்தவரும் செல்கையிலே
நாயொன்று தாகத்தால் நக்கியது மண்புழுதி
நாய்மிக்க தாகத்தால் நலிந்திருத்தல் கண்டஅவர்
தோய்த்தெடுத்துக் காலுறையைத் தண்ணீரில் நாயுடைய
வாய்க்குள்ளே பிழிந்திட்டார் வாட்டமது நீங்கியந்த
நாய்தாகம் தீர்ந்ததுவே நல்லூக்கம் சேர்ந்ததுவே
நாய்தாகம் தீர்த்தஅந்த நல்லவரை நன்னபிகள்
நாயகமும் பாராட்டி நனிசுவனம் கிட்டுமென
வாயார வாழ்த்தினர்காண்! வகுத்துணர்ந்து பாருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

246.
"அநீதியினைச் செய்பவர்க்கும் அதுசெய்யப் பட்டவர்க்கும்
இணக்கமுடன் உதவிடுவீர்" எனநபிகள் இயம்பியதும்
"அநீதிசெய்யப் பட்டவர்க்கு உதவிடலாம்; அவனியிலே
அநீதியினைச் செய்பவர்க்குத் துணையாதல் எவ்வாறு?"
எனத்தோழர் வினவியதும் "அநீதியினைச் செயமுனையும்
மனிதரினைத் தடுத்துவிடல்" எனநபிகள் மொழிந்தார்கள்.

247.
யுகமுடிவு எப்போது எனவொருவர் கேட்டுநிற்க
இகத்தினிலே நம்பிக்கை பழுதாகிப் போய்விட்டால்
யுகமுடிவு உண்டாகும்; "நம்பிக்கை பழுதடைதல்
எவ்வாறு நாயகமே?" என்றொருவர் கேட்டவுடன்
"ஒவ்வாத ஒருவரிடம் ஒருபொறுப்பு உறுவதுவாம்"
இவ்வாறு இறுதிநபி ஏற்றமுடன் மொழிந்தார்கள்.

248.
தூயநபி யொருநாளில் தோழர்கள் தமைநோக்கி
"நேயர்களே" இற்றைநாள் எந்நாளோ? இம்மாதம்
ஆய்ந்துரைப்பீர் எம்மாதம்?" எனவங்கு கேட்டார்கள்
தூயநபித் தோழர்கள் பதில்கூறா திருந்தார்கள்
"நேயமிகு நாளிதுவோ நிகழ்ஹஜ்ஜுப் பெருநாளாம்
தூயதிரு மாதமிது துல்ஹஜ்ஜு மாதமதாம்
ஆயபுகழ் மக்கத்து அணிநகரின் அருமைபோல்
நேயமிகு ஹஜ்திருநாள் நிறைபெருமை மிக்கதுபோல்
தூய்மையுறு துல்ஹஜ்ஜு மாதத்தின் மாண்பினைப்போல்
நேயர்களே உங்களது உதிரமதும் உயிர்பொருளும்
தூய்மையதாம்" என்றுநபி துலக்கியாங்கு சொன்னார்கள்.

249.
கண்ணியமார் விசுவாசி கனிவுடனே மற்றவர்க்கு
அன்புதனைக் காட்டுவதில் அடுத்திருக்கும் கட்டிடம்போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிப் பிணைந்தவராம் பெருமானார் கைவிரல்கள்
பின்னிப் பிணைத்தார்கள் பிளவை வெறுத்தார்கள்.

250.
இனியநபி நாயகத்தின் இணைபிரியா நண்பரவர்
அணிமேவு அபூபக்கர் தம்முடைய மகள்அஸ்மா
தனையீன்ற தாயொருவர் தகையிஸ்லாம் சாராதார்;
கனிமகளார் அஸ்மாவைக் காணுதற்கு வந்தக்கால்
வனிதையவர் நபியிடத்தில், "வருமந்தத் தாயவரை
அனுமதியா பார்ப்பதற்கு? அல்லாது தடையுண்டா ?"
எனப்பணிவாய் அஸ்மாவும் இறைத்தூதர் தமைக்கேட்க,
"அனுமதித்தேன் தடையில்லை" எனநபிகள் அனுமதித்தார்.

251.
நிலமீதில் இழுபடவே உடையணியும் மாந்தரவர்
நிலத்துக்குட் புதையுண்டு நீள்துன்பம் துய்ப்பரென
நலமோம்பும் நபிநாதர் நல்வாக்குச் சொன்னார்கள்.

252.
உணவளிப்பீர் பசித்தோர்க்கு; உறும்பிணியால் உழல்வோரை
மனங்கனிந்து தரிசித்துக் குணமடையப் பிரார்த்திப்பீர்
இணக்கமுடன் கைதிகளை விடுவித்துத் துணைசெய்வீர்!

253.
மூவருக்குப் போதியதாம் இருவரது உணவதுவே
மூவரது உணவதுவோ நால்வருக்குப் போதியதாம்.

254.
படுக்கைக்குச் செல்லுகையில் படுக்கை விரிப்பதையும்
உடுத்திருக்கும் உடையினையும் உதறிக் கொள்ளுங்கள்
படுக்கை தனிலேதும் பாதகங்கள் இருந்திடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

255.
என்சமூகத் தாரிடையே ஏழுபத்து ஆயிரம்பேர்
புண்ணியமார் சுவனத்திற் புகுவார்கள் மகிழ்வுடனே
கண்ணியவான் அன்னார்க்கு விசாரணைகள் ஏதுமில்லை
மன்னுபுகழ் அன்னாரோ மந்திரமும் சாத்திரமும்
பண்ணாதார் பார்க்காதார் பக்தியுள்ள பேராவர்.

256.
இருதாடை மத்தியிலும் இருகால்கள் மத்தியிலும்
இருக்கின்ற உறுப்புக்கள் ஏற்றமுறப் பேணுதற்கு
உறுதிமொழி தருவோரை உயர்சுவனம் புகுத்துதற்கு
உறுதிமொழி நான்தருவேன்; உரைத்தார்கள் உண்மைநபி.

257.
உள்ளன்பு கொள்ளுதற்கு மிகச்சிறந்தோர் யாரென்று
நல்லன்பு நபியிடத்தில் நபித்தோழர் கேட்டபோது
உள்ளன்பு மிகக்கொள்ள நல்லவரோ தாயென்று
நல்லருளார் நபிநாதர் மூன்றுமுறை சொன்னார்கள்
நல்லன்பர் நாலாவதாய் நபியிடத்தில் கேட்டபோதே
வள்ளல்நபி 'தந்தை'யென வண்ணமுறச் சொன்னார்கள்.

258.
"இறையணியிற் சேர்ந்துற்று ஏற்றமுடன் போராட
நிறைவாக விரும்புகிறேன்" எனவொருவர் இயம்பியதும்
"அருளார்ந்த தாய்தந்தை உமக்குண்டா?" எனநபிகள்
திருத்தோழர் தம்மிடத்தில் கேட்டார்கள் ஆமென்றார்
"பெருமையுறும் பெற்றாரைப் பேணுவது உந்தனுக்குப்
பெரியதொரு ஜிஹாதென்று" பெருமானார் சொன்னார்கள்.

259.
"சங்கையுறு பெற்றாரைச் சபித்திடுதல் பெரும்பாவம்"
சங்கைமிகு நபியவர்கள் கூறியதும் ஸஹாபாக்கள்
"எங்கேனும் பெற்றாரை எவரேனும் சபிப்பாரா ?"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கையுடன் கேட்டார்கள்; "சபித்திடுவார் மற்றவரின்
சங்கையுறு பெற்றாரை; சபித்திடுவார் மற்றவரோ
சங்கையின்றி சபித்தவரின் பெற்றாரை" என்றார்கள்.

*260.*
"என்தாயார் இஸ்லாத்தில் இணையாத முஷ்ரிகவர்
என்றாலும் எனைக்காண வருகின்றார் வரும்போது
என்தாயை வரவேற்று இதமன்பு கொள்ளலாமா?"
என்றொருவர் நபியிடத்தில் இதமாகக் கேட்டபோது
"நன்றாக வரவேற்று நல்லன்பு கொள்க" வென்றார்.

*261.*
அனாதைக்கு அன்புசெயும் அன்பாளர் என்னுடனே
கனிவான சுவனத்திற் சேர்ந்திருப்பார் என்றுநபி
கனிவாகச் சொல்லி அவர் கைவிரலில் நடுவிரலும்
இணைந்துள்ள சுட்டுவிரல் இணைத்துக் காண்பித்தார்.

*262.*
அயலாரை நேசித்து அன்புசெய்யா மாந்தர்கள்
உயர்வான விசுவாசி அல்லரென்றார் நபிமணியார்.

*263.*
இறையவனை மறுநாளை ஏற்றுறுதி கொண்டவர்கள்
உறைகின்ற அயலாரைத் துன்புறுத்த வேண்டாமே!
நிறைவான நேசமுடன் நல்லுணவு நல்கிடுக!
குறைவில்லாக் கனிமொழியே பேசிடுக! ஒருபோதும்
குறைவான வன்மொழிகள் பேசாமல் இருங்களென்றார்.

*264.*
ஈத்தம் பழக்கீற்றின் பாதியினை ஈந்தேனும்
சீற்றம் சினமில்லாக் கனிவான பேச்சாலும்
தீய்க்கும் நரகத்திற் தீயாது தப்பிடுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

265.
ஒருமனிதர் நபியிடத்தில் ஒருபொழுது வந்துநின்றார்
பெருமானார் அவருடைய பெயரதனைக் கேட்டார்கள்
வெறுப்பான துக்கமெனும் 'ஹஸ்ன்'என்றார் அம்மனிதர்
விருப்பான பெயரல்ல; இனிப்பான 'ஸஹ்ல்'என்னும்
திருப்பெயரைச் சூட்டுமென்று திருநபிகள் சொன்னார்கள்
"விருப்புடனே என்தந்தை இட்டபெயர் மாற்றமாட்டேன்"
பெருமையுடன் அம்மனிதன் பிடிவாதம் செய்திட்டான்
சிரிப்பில்லாத் துயர்வாழ்க்கை அவனுக்கு நேர்ந்ததனால்
இறுதிவரை துக்கத்தோ டிருந்தவனும் இறந்திட்டான்.

266.
பெற்றாரைப் பிள்ளைகளை விடமேலாய் என்மீது
நற்றவத்துப் பிரியமிலார் நம்சமூகம் சாராதார்.

267.
பொறுப்பாளர் எல்லோரும்; பொறுப்புக்கள் பற்றியெல்லாம்
இறைகேட்பான் சமூகத்தின் தலைமைப் பொறுப்பாளர்,
குறையின்றிக் குடும்பத்தைக் கொண்டு நடத்துபவர்,
உறையுட் தலைவியென விளங்கும் மனைவியவர்,
உற்ற தலைவனுக்குப் பணிசெய் தொண்டாளர்
நிறைவாய் எல்லார்க்கும் நேர்ந்த பொறுப்பனைத்தும்
இறைவன் மறுமையிலே எழுப்பி விசாரிப்பான்.

268.
பொருளொன்றைப் பொறுக்கியவர் பொருள்பற்றி ஒருவருடம்
அறிவித்தற் செய்கவென அமுதநபி அருளினரே.

269.
அநியாயம் செய்யாதீர்! அநீதிக்குத் துணையாகீர்!
மனிதரது தேவைகளை மதித்தவர்க்குத் துணைசெய்வீர்!
அணுகுமொரு துன்பத்தைத் தோழருக்குத் துடைப்பவர்க்கு
அணுகுமொரு மறுமையிலே அல்லாஹ்வும் துயர்துடைப்பான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணங்குமொரு நண்பரது இழிசெய்கை மறைப்பவர்க்கு
வணங்குதலுக் குரித்தான வல்லவனும் மறைத்திடுவான்.

270.
"வெட்கமது இல்லையென்றால் வேண்டியதைச் செய்திடுக"
திட்டமுடன் இவ்வுரையைத் திருநபிமார் முழுப்பேரும்
இட்டமுடன் சொன்னார்கள் இட்டமுடன் ஏற்றிடுக!

271.
மணவிருந்துக் கழைத்திட்டால் மனமுவந்து ஏற்றிடுக!
இணக்கமுடன் அப்துல்லாஹ் என்கின்ற தோழரவர்
மணவிருந்து மட்டுமல்ல மறுவிருந்துக் கழைத்தாலும்
இணக்கமுடன் செல்வார்கள்; நோன்பிருந்தால் விட்டதனை
மனமொப்பி விருந்தேற்று மகிழ்ச்சிப் படுத்திடுவார்.

272.
அருட்கொடைகள் இரண்டுண்டு; அவ்விரண்டை மனிதர்கள்
சிறப்பாகப் பயன்படுத்தா திருப்பதனால் நஷ்டத்தில்
உறுவார்கள்; அவ்விரண்டும் ஓய்வும் உடல்நலமும்;
பெருமான் நபிநாதர் பேணிச் சொன்னார்கள்.

273.
தலைமைப் பதவியினைத் தானாகக் கேட்காதீர்
தலைமை தனைக்கேட்டால் தாவிவரும் துன்பங்கள்
தலைமையதைக் கேட்காமல் தானாக வருமாகில்
தலைமை சிறப்படையும் தாமும் சிறப்படைவீர்.

274.
பொறுப்பான பதவியினைப் பொறுப்பேற்ற பொறுப்பாளர்
பொறுப்பதனைச் சீராகப் புரியாது மக்களினை
வெறுப்பாக நடத்துவரேல், மோசடிகள் செய்வாரேல்,
ஒருபோதும் சுவனத்தின் வாசத்தை நுகராராம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

275.
நானிலத்து மக்களிலே நபிமணியே நற்குணத்தில்
மேன்மகனாய் மிளிர்ந்தார்கள்; மிக்ககுணக் குன்றானார்

276.
சிரிப்பார்கள் நபிநாதர் சிந்துவரே புன்முறுவல்
பெருமானார் ஒருபொழுதும் பல்முழுதும் வெளிக்காட்டிச்
சிரிக்கவில்லை; அன்னாரின் சீர்குணத்தை ஏற்றிடுக!

277.
அதிகாரப் பதவிகளை ஆசைவைக்க வேண்டாமே
கதியில்லா மறுமையிலே கடுந்துக்கம் சேர்க்குமது.

278.
வாங்குவதில் விற்பனையில் வாய்மையுடன் நேர்மையினைத்
தாங்குபவர் இறையருளைத் தாங்கிடுவார் என்றார்கள்.

279.
பள்ளியிலே சத்தமிட்டுப் பேசிக்கொண் டிருந்தோரை
நல்லறத்து நபித்தோழர் உமறவர்கள் கண்டித்தார்
வெல்லுபுகழ் மதீனாவின் வெளியிருந்து வந்தமையால்
பள்ளிதனிற் சத்தமிட்ட பாதகத்தை மன்னித்தேன்
இல்லையெனில் இருவரையும் தண்டிப்பேன் என்றார்கள்.

280.
சிறுவர்கள் கூட்டத்தைக் கண்டவுடன் அனஸ்தோழர்
விருப்புடனே சிறுவர்க்கு ஸலாமுரைத்தார் காரணத்தை
இருந்தோர்கள் கேட்டவுடன் இவ்வாறே நபிநாதர்
சிறுவர்க்கு ஸலாமுரைத்தார் என்றார்கள் அனஸவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்யக்கூடாத செயல்கள்

*281.*
*"இருமுஸ்லிம் மாந்தர்கள் ஏந்தியவாள் கரமேந்தி*
*ஒருவரினை மற்றொருவர் உறுத்திக் கொலைசெய்தால்*
*இருவருமே நரகத்தில் எரிவார்கள்" எனநபிகள்*
*அருளியதும் அங்கிருந்தோர், "அடாதுகொலை செய்தவரோ*
*நரகில் எரிவதுவோ நியாயம்தான் ஆனாலும்*
*நரகில், கொலையுண்ட மனிதன்ஏன் வீழ்ந்திடுவான்?"*
*விரித்துக் கேட்டவுடன், விரிபுகழார் நபியவர்கள்*
*"ஒருவர் கொலைசெய்தார் மற்றவரும் கொலைசெய்யக்*
*கருதிச் சினந்தெழுந்த காரணத்தால் நரகடைவார்"*
*விரிவாய் நபியவர்கள் விளக்கிச் சொன்னார்கள்.*

*282.*
*நயவஞ்ச கத்தார்க்கு அடையாளம் மூன்றாகும்*
*இயம்பும் அவர்பேச்சு எப்போதும் பொய்யாகும்*
*முயன்றே வாக்களித்து மோசமாய் மீறிடுவார்*
*நயந்தே நம்பினர்க்குத் துரோகம் செய்திடுவார்.*

*283.*
*முஸ்லிமைத் தூற்றுவது முற்றாகத் தீயதுவாம்*
*முஸ்லிமைக் கொல்லுவது மோசமிகு குப்றாகும்.*

*284.*
*ஹலாலும் மிகத்தெளிவு ஹறாமும் மிகத்தெளிவு*
*ஹலால்ஹறாத்துக் கிடையுள்ள காரியங்கள் தெளிவில்லை*
*தெளிவில்லாக் காரியத்தைத் தெரிந்தறியார் மானுடர்கள்;*
*ஹலாலென்றோ ஹறாமென்றோ கணித்தறிய முடியாத*
*தெளிவற்ற காரியத்தைச் செய்யாத திருவுளத்தார்*
*நலமாகக் காப்பார்கள் மார்க்கத்தை மானத்தை;*
*வரம்பினிலே மேய்கின்ற கால்நடையோ வயலுக்குள்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கிடுதல் போலிங்கு தெளிவில்லாச் செயல்புரிவோர்
தரமில்லா ஹறாத்தினிலே தடம்பதித்து விடுவார்கள்;
இருக்குதிங்கே யெல்லார்க்கும் ஏற்றமிகு காவலரண்
வரையறுத்து மாந்தர்க்கு இறையளித்த காவலரண்
முறையற்ற ஹறாமாகும் முக்கியமா யுணர்வீரே
நானுரைக்காக் கருமத்தை யானுரைத்த தாய்ப்பொய்யைத்
தானுரைக்கும் மாந்தர் தானுறைவர் நரகத்தில்

285.
மரணித்தோர் அடக்கஞ்செய் 'மக்பறா'வைத் தாண்டிநபி
ஒருநாளிற் செல்லுகையில் இருகப்றைக் கண்டங்கு
தரித்துடனே நின்றார்கள் தஸ்பீஹூ செய்தார்கள்
இருகப்றின் உள்ளிருக்கும் இருவருமே வேதனையால்
வருந்துகிறார் வாழ்க்கையிலே சிறுபாவம் எனக்கருதி
இருவருமே செய்துற்ற இருகுற்றங் காரணமாய்
உருகுகிறார் வேதனையால் ஒருவர்கோள் சொல்லியவர்
சிறுநீரைக் கழித்துப்பின் சீராகக் கழுவாமல்
இருந்தவரே மற்றவரென் றியம்பியநன் னபிநாதர்
இருதுண்டாய் ஈச்சமர மட்டையினைப் பிளந்தெடுத்து
இருகப்றின் மேல்நட்டி இருதுண்டும் காயாமல்
இருக்குங்கால் இருவருக்கும் வேதனையே குறையுமென்றார்.

286.
வட்டியினைத் தடைசெய்யும் வசனமது இறங்கியதும்
சட்டென்று நபிநாதர் சங்கையுறு பள்ளிசென்று
வட்டியினைத் தடுத்தார்கள் மதுபான விற்பனையும்
கட்டாயத் தடையென்று கன்டிப்பாய்ச் சொன்னார்கள்

287.
போதைதரும் பொருட்களையும், பொருந்தாத பன்றியையும்,
தீதான சிலைகளையும், பிணங்களையும் விற்காதீர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

288.
பொருட்களினை விற்கையிலே ஏமாற்றும் புல்லர்களை,
பொருட்போன்று மனிதர்களை விற்றுணவு புசிப்பவரை,
வருந்தியுடல் நோவெடுக்க வேலைசெய்யும் ஒருவருக்கு
பொருந்துமொரு கூலியினைக் கொடுக்காத மனிதரையும்
அருளிறையோன் சண்டைக்கு அழைக்கின்றான் எனநபிகள்
திருவாக்குச் சொன்னார்கள்! தெரிந்துணர்ந்து கொள்ளுங்கள்!

289.
பயணிக்கும் மக்களது தாகத்தைத் தணிப்பதற்குப்
பயனளிக்கும் தண்ணீரைப் பருகுதற்குத் தடுப்பவரை
மயக்குமொரு மறுமையிலே மாமன்னன் கருணையுடன்
நயக்கா திருந்திடுவான் நல்லன்பைச் சொரிந்தருளான்
துயரும் வேதனையும் தொடருமென்றார் நபிநாதர்.

290.
பூனைக்குப் பெண்ணொருத்தி பொல்லாங்கு செய்திருந்தாள்
பூனையதைக் கட்டிவைத்துப் புகட்டவில்லை உணவதற்கு
தானாகத் திரிந்ததுவும் தனக்குணவு தேடுதற்கும்
ஈனக் குணத்தவளோ ஏற்பாடு செய்யவில்லை
பூனை பசியாலே துடித்திறந்து போனதுகாண்
தேனின் மொழிசிந்தும் திருநபிகள் நாயகமும்
பூனை தனைக்கொன்ற பொல்லாத பெண்ணவளோ
வீணாய் நரகத்தில் வீழ்ந்தழிவாள் என்றார்கள்.

291.
பழங்கள் நன்றாகப் பழுக்கா திருக்கையிலே
அளந்து விற்றிடுதல் ஆகாச் செயலாகும்.

292.
பெற்றாரைத் தூற்றிடுதல் பெற்றெடுத்த பிள்ளைகளைக்
குற்றமுடன் உயிரோடு குழிதோண்டிப் புதைத்திடுதல்
சற்றேனும் நலவில்லாப் பேச்சுக்கள் பேசிடுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றில்லாப் பான்மையிலே பலவாறு வினாத்தொடுத்தல்
உற்றபொருள் வீணாகச் செலவிடுதல் அத்தனையும்
குற்றமுள்ள செயலென்று கூறினரே நபிநாதர்

293.
பிறருடைய கால்நடையில் பேணுமவர் விருப்பின்றிக்
கறக்காதீர் பால், என்று கருணைநபி சொன்னார்கள்.

294.
ஒருவர்க்கு அநீதிசெய்தால் உறுத்துகிற மறுமையிலே
இருளாகத் தோன்றி, அது இன்னல் இழைத்திடுமே.

295.
அநீதிக்குட் பட்டவரின் அழிசாபம் அஞ்சிடுக!
முனிவுக்கும் இறைக்குமிடை தடையேதும் இல்லையுணர்!

296.
நிலத்தினிலே ஒருதுண்டை நேர்மையின்றிப் பறித்தெடுத்தால்
கலக்கமுறும் மறுமையிலே எழுநிலத்தின் அளவுக்குக்
கழுத்தினிலே கட்டிவிடப் படுமென்றார் நபிமணியார்.

297.
பொய்யினையே பேசிடுதல் புகல்வாக்கு மாறிடுதல்
செய்யுமொரு ஒப்பந்தம் சீரழித்து முறித்திடுதல்
பொய்க்குற்றஞ் சுமத்திடுதல் புனையுமிந்த நாற்செயலும்
மெய்யாக முனாபிக்கின் குணமென்றார் நபிமணியார்.

298.
அமுதமென மதுபானம் அருந்தியவர் மத்தியிலே
“அமுதமல்ல அதுபோதை அல்லாஹு தடைசெய்தான்”
அமுதமொழி நபிநாதர் அறிவித்த போதினிலே
அமுதமெனப் பருகிவந்த அணிமதீனா மக்களெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருமீதில் மதுக்கலசம் வீசியெறிந் துடைத்தனரே
தெருவெல்லாம் மதுபானம் வெள்ளமென ஓடியதே.

299.
இறைவனுக்கு நிகராக இணையாக்கல் இன்னொன்றை
நிறையன்புப் பெற்றோரை நிந்தித்துப் பேசிடுதல்
குறைசெய்து உயிரொன்றைக் கொன்று வதைத்திடுதல்
முறையின்றிப் பொய்ச்சாட்சி முயன்று கூறிடுதல்
வரையறை யில்லாத பெரும்பாவ மாகுமென
இறையின் திருத்தூதர் இயம்பிச் சென்றார்கள்.

300.
ஒருமனிதர் மற்றவரை உயர்த்திப் புகழ்வதனை
திருநபிகள் செவியேற்று, "தீங்கவர்க்குச் செய்தீர்கள்
பெரிதாகப் புகழ்ந்(து)அவரின் பிடரியினை முறித்தீர்கள்"
அருளிக் கடிந்தார்கள் ஆகா தென்றார்கள்.

301.
தீய்த்தழிக்கும் தீச்செயல்கள் ஏழை(7)நீர் தீண்டாதீர்
வாய்மையுள இறைவனுக்கு வகுக்காதீர் இணையேதும்
தீயபெருஞ் சூனியமும், தீங்கான படுகொலையும்
காய்த்தொதுக்கும் வட்டியதும், கவருவதும் அனாதைப்பொருள்,
போய்ப்போர்க்குப் புறங்காட்டல், புண்ணியராம் கன்னியரைத்
தீயரென்று விபச்சாரக் கடுங்குற்றஞ் சாற்றிடுதல்.

302.
உருவங்கள் உறைகின்ற வீட்டினிலும், நாயிருக்கும்
திருவில்லா வீட்டினிலும் மலக்குகளோ நுழையார்கள்.

303.
கொலைக்குற்றம் முதல்செய்தான் நபிஆதம் முதல்மகனே
கொலைப்பாவம் குவலயத்திற் கொடுமையதன் குற்றமது
நிலையாக அவனுக்கு நிச்சயமாய்க் கிட்டிடுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

304.
மூன்றுசெயல் ஜாஹிலிய்யா மூடப் பழக்கமதாம்
தோன்றும் குலப்பெயரைத் தூக்கித் தூற்றிடுதல்,
மாண்டார் தமக்காக ஒப்பாரி வைத்தழுதல்,
தோன்றும் உடுக்களுக்காய் மாரி பெய்ததென
ஊன்றி உறுதிகொளல் ஒவ்வாப் பழக்கமதாம்.

305.
மக்கத்தில் வாழ்ந்துற்ற மடமனிதன் ஒருதினத்தில்
மிக்கபுகழ் மதீனத்து மனிதருக்கு அடித்துவிட்டான்
மக்கத்தார் ஒருபுறமும் மதீனத்தார் ஒருபுறமும்
கொக்கரித்துக் கூச்சலிட்டுக் கோஷ்டிமோதல் மூண்டதுவே
இக்கோரச் சம்பவத்தை இறுதிநபி கேள்வியுற்று
அக்கணமே அங்குற்றார் "அழிமூடப் பழக்கமிது;
அக்கால அறியாமைப் பழக்கத்தில் ஆழ்ந்தீரோ?
எக்காலும் என்னிடத்தில் இப்பழக்கம் ஆகாது
இக்கணமே வீசிடுக இப்பேதம் பிளவுகளை!"
அக்களத்தில் அண்ணலவர் அழுத்திச் சொன்னார்கள்.

306.
அண்ணலார் அன்பாளர் அப்துல்லாஹ் பின்ஸலாம்
நன்னெறிசூழ் நல்லவரை நாட்டமுடன் ஒருமனிதர்
அன்புடனே விருந்துக்கு அழைத்தார்கள் அப்துல்லாஹ்,
"உன்னுடைய பகுதியிலே உறைவோர்கள் வட்டியுடன்
பின்னிப் பிணைந்துள்ளார் பிழையாகச் சேர்த்தபொருள்
உந்தனுக்கு வந்திருக்கும் உனக்கவர்கள் தந்துள்ள
பொன்னில் பொருட்களிலே பொல்லாத வட்டியதன்
தன்மை கலந்திருக்கும் தகாதெனக்கு அவ்வுணவு
உந்தன் தேட்டத்தில் உதவாத வட்டியது
எந்தப் படியேனும் இணையாது தவிர்ப்பீரே!"
இந்தக் கருத்தோதி ஏகவில்லை விருந்துக்கு!.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

307.
பிழையாக எவர்மீதும் தப்பெண்ணங் கொள்ளாதீர்
பிழையான தப்பெண்ணம் பெரிதான பொய்யாகும்
உளவேதும் பாராதீர்! ஒற்றுக் கேளாதீர்!
குலைக்கும் கோபத்தால் கிளர்ந்து பேசாதீர்!
நிலையான சோதரராய் நேசராய்த் திகழ்ந்திடுவீர்!
நலமான நண்பரது பெண்ணுக்கு மணஞ்செய்யப்
பலமாகப் பேசியபின் வேறுமணம் பேசாதீர்!

308.
செல்வமுளோர் தமைமட்டும் குறிப்பாகக் கூப்பிட்டு
செல்வமிலா வறியோரைப் புறக்கணிக்கும் விருந்ததுவோ
பொல்லாத விருந்தெனவே போதித்தார் புனிதநபி.

309.
பெரும்பாவம் யாதென்று பெயர்த்துமக்குச் சொல்கின்றேன்:
இறையொருவன் இருக்கையிலே இணைவைத்தல், அத்துடனே
பெற்றாரை நிந்தித்துப் பேசிடுதல் என்றார்கள்.

310.
மலையடியில் இருப்பதுபோல் மலைசரிந்து விழுவதுபோல்
பிழையான பாவத்தைப் பயப்படுவான் விசுவாசி;
இலையானோ மூக்கின்மேல் இருப்பதுபோல் பாவத்தைப்
பிழையான கெட்டவனோ எளிதாகக் கருதிடுவான்.

311.
எவர்க்கேனும் அநியாயம் இவ்வுலகில் இழைத்தவர்கள்
அவரிடத்தில் மன்னிக்கக் கேட்டிடுக! இல்லையெனில்
எவருடைய துணையதுவும், பணங்காசின் உதவியதும்
எவருக்கும் உதவாத மறுமைநாள் வேளையிலே
எவருக்கு அநியாயம் இழைத்தாரோ இவ்வுலகில்
தவறிழைத்த மனிதனது நலவெல்லாம் எடுத்தெடுத்து
இவருக்குத் தரப்படுமே ஏதேனும் நன்மையது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடத்தில் இல்லையெனில், அவரிழைத்த பாவத்தின்
தவறெடுத்து இவருக்குத் தரப்படுமே என்றார்கள்.

312.
இடர்சூழும் மறுமையிலே இலகுமுறை வேதனையோ
இடர்செய்த மனிதரது பாதத்தில், எரிகின்ற
சுடர்நெருப்பால் சுடப்படுமே சூட்டாலே மூளையது
சுடரெழுந்து கொதிக்குமெனச் சொன்னார்கள் நபிமணியார்.

313.
மதுபானங் குடித்தவரை மாண்புநபி வெறுத்தார்கள்
அதிகோபங் கொண்டுநபி ஈத்தமர மட்டையினால்
உதவாத செருப்புகளால் உரமாக அடித்தார்கள்
இதுபோன்று அபூபக்கர் நாற்பதடி கொடுத்தார்கள்.

314.
பெரும்பாவம் யாதெனவே பெருமானார் தம்மிடத்தில்
ஒருமனிதர் வினவுகையில், "உனைப்படைத்தோ னிருக்கையிலே
ஒருவனுக்கு இணையாக மறுபொருளைச் சேர்த்திடுதல்"
பெருமானார் சொன்னார்கள் பின்னுமந்த மனிதரவர்
பெரும்பாவம் யாதென்றார் "பெற்றெடுத்த பிள்ளைக்கு
அருந்துகிற உணவளிக்க அஞ்சியதைக் கொன்றிடுதல்,"
திருநபிகள் சொன்னார்கள் திரும்பவுமே அம்மனிதர்
பெரும்பாவம் யாதென்றார் "பிறர்மனையாள் தனைப்புணர்தல்
பெரும்பாவம்" எனவெங்கள் பெருமானார் சொன்னார்கள்.

315.
"நெருக்கமுறும் காலமது நற்செயல்கள் குன்றிவிடும்
உருவாகும் கஞ்சத்தனம் உலகெங்கும் குழப்பமுறும்
பெருகிவிடும் கொலையெங்கும்" பெருமானார் சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*316.*

*அல்லாஹ் ஒருவனுள்ளான் அவனனைத்தும் படைத்தவனே*
*அல்லாஹ் தனையார்தான் படைத்தார்? எனச்சிலபேர்*
*சொல்லிக் கேட்பார்கள் பொல்லாக் கேள்வியிதை*
*பொல்லா ஷைத்தானே போடுகிறான் உள்ளத்தில்.*

*317.*

*தங்கத்தால் மோதிரத்தை தவிர்த்திட்டேன் அணியாமல்*
*சங்கையுறும் என்தோழர் சார்ந்தெனது வழிபேணி*
*தங்கத்தால் மோதிரத்தைத் தவிர்த்திட்டார் தகைபெற்றார்.*

*318.*

*சத்தியங்கள் செய்யாதீர் சார்ந்தபிதா பெயர்கூறி*
*சத்தியங்கள் செய்வதெனில் இறைமீதே செய்திடுக.!*

*319.*

*மதுபானம் பூவுலகில் மதிகெட்டுப் பருகியவர்*
*எதுவிதமும் பேறடையார் இணைகின்ற மறுமையிலே.*

*320.*

*மதிமயக்கும் தன்மையுள பானங்கள் எல்லாமும்*
*சதாகாலம் ஹறாமாகும் சற்றேனும் பருகாதீர்!*

*321.*

*இறைதடுத்த பானத்தில் உணவுகளில் நோய்பிணிக்கு*
*இறைமருந்தை வைக்கவில்லை என்றார்கள் இறைத்தூதர்.*

*322.*

*வெள்ளிதங்கப் பாத்திரத்தில் உணவுண்ண வேண்டாமே!*

*323.*

*இணைவைத்து வணங்குவதும் ஈனமுறு சூனியமும்*
*இணையில்லாப் பெரும்பாவம் என்றார்கள் இறைத்தூதர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

324.
அடுத்தவரை அச்சுறுத்தி அநீதிசெயும் மானிடரோ
கொடியவராம் மாந்தரிலே கூறினரே நபிநாதர்.

325.
கோபித்துக் கொள்ளாதீர்! கொடும்பொறாமைப் படவேண்டாம்!
கூடாத புறம்பேசும் குற்றத்தைச் செய்யாதீர்!
நேயமுடன் நெஞ்சினிக்கும் நேசரெனத் திகழுங்கள்
கோபமுடன் மூன்றுதினம் பகைத்திருத்தல் வேண்டாமே!

326.
கன்னத்தில் அடித்தழுதல் கதறியுடை கிழித்தெறிதல்
புண்ணான ஜாஹிலியக் காலத்துப் பழக்கமென
நன்னயமாய் நபிநாதர் நமக்கெடுத்துச் சொன்னார்கள்.

327.
பொய்ப்பேச்சும் பொய்யான சத்தியமே செய்வதுவும்
உய்வில்லாப் பெரும்பாவம் என்றார்கள் உண்மைநபி.

328.
எதிர்நோக்கும் மறுமையிலே எனக்கெதிரி மூவருள்ளார்:
சதிசெய்து விற்பனையில் மோசடிகள் செய்கிறவர்
மதியோங்கு மனிதர்களை மதிப்பின்றி விற்கிறவர்
அதிசுமையாய்ப் பணிசெய்த அன்பருக்குக் கூலியினை
அதிசிறப்பாய்க் கொடுக்காது விட்டவரே, என்றிறைவன்
மிதமான சினத்தோடு சொல்லுகிறான் என்றெங்கள்
அதிசிறந்த குணவாளர் அண்ணலவர் அருளினரே.

329.
அநியாயம் செய்வதுவோ அக்கிரமப் பெரும்பாவம்
அநியாயக் காரர்களை அல்லாஹூ விட்டுவைத்து
அநியாயச் செயல்தவிர்க்க அவகாசம் அளித்திடுவான்
அநியாயம் தொடருமெனில் கடிதாகத் தண்டிப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

330.
நல்லவர்கள் நம்மிடையே நயந்ததிகம் இருக்கையிலே
பொல்லாத அழிவெமக்குச் சூழ்ந்திடுமா எனச்சிலபேர்
அல்லாஹ்வின் தூதரிடம் அமைதியுடன் வினவுகையில்
பொல்லாங்கு மிகைத்திடுமேல் பூவுலகில் நிச்சயமாய்ப்
பொல்லாத அழிவுவரும் என்றுநபி சொன்னார்கள்.

331.
போதைதரு பானமெல்லாம் பொல்லாத மதுபானம்
தீதான மதுவருந்தல் திடமான ஹறாமாகும்
போதை தருபவற்றைப் பூவுலகில் பாவித்தோர்
ஏதமிலா மறுமையிலே இனிப்பான பானங்கள்
மாதவமாய்ப் பருகாரே மாநபிகள் சொன்னார்கள்.

332.
குற்றமிலா மனிதரினை கொலைசெய்த பாவியவர்
சற்றேனும் சுவனத்தின் வாசத்தை நுகராராம்
வெற்றிதரு சுவனத்தின் விருப்பான வாசமது
முற்றாக நாற்பதாண்டுத் தொலைதூரம் சென்றிடுமே!

## குடும்ப வாழ்வு

333.
ஒருநாள் நரகத்தின் உக்கிரத்தைக் கண்ணுற்றேன்
எரியும் நரகத்தில் ஏராளப் பெண்களுளர்
மருவும் கணவருக்கு மாறுசெயும் மனைவியராம்
அருமைக் கணவனவர் அனுதினமும் உதவிடினும்
ஒருநாள் இல்லையென்றால் ஒறுத்துச் சினந்திடுவார்.

334.
என்னுடைமை யத்தனையும் இறந்தபின்னர் தருமமதாய்ப்
பண்ணிவிட விரும்புகிறேன் எனவொருவர் பகருகையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அன்னவிதம் செய்யாதீர்” எனஅண்ணல் அறிவித்தார்.
“பொன்பொருளிற் பாதியினைப் பொதுவுடைமைச் சொத்தாக்க
எண்ணுகிறேன்” என்றவரும் இயம்புகையில் எங்கோமான்,
“அன்னவிதம் செய்யாதீர்” என்றேதான் அறிவித்தார்.
“என்பொருளில் மூன்றிலொரு பங்கதனை யளித்திடவா ?”
என்றவரும் வினவுகையில், “இல்லையதும் அதிகம்தான்
உன்னருமை வாரிசுகள் வறுமையிலே உழலாது
கண்ணியமா யவர்வாழக் காசுபணம் விட்டேகல்
திண்ணமுடன் நற்செயலாம் தித்திக்கும் மொழிபேசும்
உன்னருமை மனைவிக்கு ஊட்டுகின்ற உணவதுவும்
பன்னரிய தருமமெனப் பண்புநபி சொன்னார்கள்.

335.
“நெருக்கமுள்ள உறவினர்க்கு நெறியூட்டும் நல்லுரைகள்
உருக்கமுடன் சொல்க”வென உயரிறைவன் வஹீயருள
நெருக்கமுறு குறைஷ்குழுவை நேசமுடன் நபியழைத்து
“மறுமையிலே நீங்களெலாம் மகத்துவமே காண்பதற்கு
பெறுமதியாய் நற்கிரிகை பெரிதாகச் செய்திடுங்கள்
திருநபியாம் நானுங்கள் திருக்குடும்பம் சார்ந்தவனாய்
இருப்பதனால் எத்துணையும் மறுமையிலே நலன்செய்யேன்
அப்துல்மனாப் குடும்பத்து அன்பான உறுப்பினரே,
அப்துல்முத்த லிப்குடும்பம் தனைச்சார்ந்த நண்பர்களே,
என்னுறவு மாமியாரே - இனிதான ஸபிய்யாவே,
என்னருமைத் திருப்புதல்வி இன்குணத்து பாத்திமாவே,
என்னாலே மறுமையிலே எவ்வகையா யுதவிகளும்
பண்ணிவிட இயலாது பாவங்கள் செய்யாது
நன்மையுற நற்கிரியை பண்ணிடுக” என்றார்கள்.

336.
முத்தார் இஸ்லாத்தில் முதன்மைக் குழந்தையது
மெத்தச் சிறப்புடைய அப்துல் லாஹ்இப்னு
சுபைரென்னும் சுதனாவார் சுந்தர நபியிடத்தில்
அவரைத் தாயாரும் அன்பாய்க் கொடுத்திடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈத்தம் பழச்சுளையை இனிதாய் நபிமென்று
தேய்த்தார் பிள்ளையது தேனார் நாவினிலே
வாய்த்த பெருமைசால் வரிசைக் குழந்தையதன்
வாய்க்குள் முதலுணவு வரிசை நபியினது
வாயின் உமிழ்நீராய் வாய்த்துச் சிறந்ததுவே.

*337.*
வாலிபர்காள், மணஞ்செய்யும் வசதியது பெற்றிருந்தால்
சீலமுறுந் திருமணத்தைச் சிறப்பாகச் செய்யுங்கள்
ஏலாது போய்விட்டால் இல்வாழ்வு மேற்கொள்ள
மேலான நோன்பிருங்கள்! மிகச்சிறந்த காப்பிதுவே!

*338.*
நான்குவகைக் காரணிக்காய் நானிலத்திற் பெண்களினை
ஆண்மக்கள் மணஞ்செய்ய அவாவுகிறார்; பொருளுக்காய்
மாண்பான குடும்பத்தின் மதிப்புக்காய் அழகுக்காய்
'தீனு'க்காய் என்றெல்லாம் மணமகளைத் தேடுகிறார்.
'தீன்'குணத்துப் பெண்ணைத்தான் திருமணமே செய்திடுக!
வான்புகழும் வெற்றியதும் வாழ்க்கையிலே வாய்த்திடுமே!

*339.*
கணவனுடன் கோபித்துக் கணவனது வெறுப்புடனே
தனியாகப் படுத்திருக்கும் மனைவியை மலக்குகளோ
முனிவார்கள் காலைவரை என்றார்கள் முத்துநபி.

*340.*
அன்பான கணவரவர் அகத்தில் இருக்கையிலே
அன்பாளர் விருப்பின்றி மனையாளோ சுன்னத்து
நோன்புகளை நோற்றிடுதல் ஆகாது; இல்லத்தில்
அன்னியரைக் கணவரது அனுமதியே இல்லாமல்
அனுமதித்தல் ஒருபோதும் கூடாது கூடாது
பொன்பொருளைப் புருஷனது உத்தரவே யில்லாது
தன்னிச்சைப் படிசெலவு செய்வதுவும் ஆகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

341.
அடிமையினை அடிப்பதுபோல் அன்பான மனைவியரை
அடிக்காதீர்! அதன்பின்னர் அணைத்தவரைப் புணருமொரு
நிலைவருமே நீங்களிதை நெஞ்சத்திற் கொள்வீரே!

342.
குடும்பத்தின் மேன்மைக்காய்க் குறைவின்றிச் செலவிடுதல்
அடுக்கின்ற நன்மைதருந் தருமத்தைப் போன்றதுவாம்.

343.
உற்றாரை உறவினரை உவக்காது வெறுப்பவரோ
வெற்றியுறு சுவனத்தில் புகமாட்டார் என்றார்கள்.

344.
நிறைவான நல்லுணவும் நேசமிகு சந்ததியும்
நிறைவாகக் கிடைப்பதற்கு நேசிக்கும் மனிதரவர்
உறவினரை உற்றாரை உவப்புடனே நேசித்து
நிறையன்பு கொள்கவென நேசநபி சொன்னார்கள்.

345.
அருள் நபியின் திருத்தோழர் அபூமூஸா என்பவர்க்கு
அருளாகக் கிடைத்ததுவே ஆண் குழந்தை அதைக்கொண்டு
திருநபியின் சமூகத்திற் சென்றவுடன் நபியவர்கள்
பெரிதுவந்து இபுறாஹீம் எனுமாறு பெயரிட்டார்.
சிறப்பாக பேரீத்தங் கனியதனைச் சுவைத்தெடுத்து
இரக்கமுடன் குழந்தையதன் வாயில் தேய்த்தார்கள்
அருட்பேறும் பாக்கியமும் அப்பிள்ளை அடைதற்கு
அருளிறையைப் பிராத்தித்துத் தந்தையிடம் அளித்தாகள்.

346.
பெண்குழந்தை இரண்டுடனே பெண்ணொருவர் வறுமையுடன்
அன்னையராம் ஆயிஷாவின் வீட்டுக்கு வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் குழந்தை பசி தீர்க்கத் தருகவெனக் கேட்ட போது
ஒன்று மட்டும் ஈத்தம் பழம் உள்ளதெனக் கொடுத்தார்கள்
ஒன்றையந்தப் பெண்ணெடுத்து உடைத்திரண்டு துண்டாக்கி
அன்புடனே அவ்விரண்டு பிள்ளைக்கும் அளித்தாரே
அன்னையவர் உண்ணாமல் அளித்ததனை அறிந்த நபி
அன்னையவர் சுவர்க்கத்தில் சுகமடைவார் என்றார்கள்.

347.
திருப்பேரர்ஹஸனாரைத் திருநபிகள் அரவணைத்து
அருளாக முத்தமிட்ட அன்பான காட்சிகண்டு
"திருநபியே பத்துப்பேர் தேன்மக்கள் எனக்குள்ளார்
ஒருவரையும் ஒருநாளும் உங்களைப்போல் முத்தவில்லை"
திருத்தோழர் ஒருவர்நபி திருமுகத்திற் சொன்னபோது,
"அருள்செய்யார் ஒருபோதும் அருள்செய்யப் படா"ரென்றார்.

348.
கைதிகளிற் சிலபேர்கள் நபிசமுகம் வந்தார்கள்
கைதிகளிற் பெண்ணொருத்தி தன்குழந்தை மார்பணைத்து
கைதிகளின் கண்முன்னே கனிந்தமுது ஊட்டிநின்றார்
கைதியவர் கருணையினை கனியநபி கண்டார்கள்
கைதியவர் பிள்ளையினைக் கரிநெருப்பில் இடுவாரா?"
மெய்நபிகள் வினவியதும் "இல்லை"யென்றார் தோழர்கள்
கைதியவர் கருணையினைக் காட்டிலுமே அல்லாஹு
மெய்யன்பால் மாந்தரினை மேலாக நேசித்து
உய்வளிப்பான் எனநபிகள் உபதேசம் செய்தார்கள்.

349.
சிறப்பான நன்னபிகள் சிறுகுழந்தை தோள்சுமந்து
சிறப்பாகத் தொழுதார்கள் றுகூஉக்குக் குனிகையிலே
சிறுவரினைத் தரைமீது இருத்திவிட்டுத் தொழுதார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

350.
பிஞ்சுக் குழந்தைகளைப் பிரியமுடன் பெருமானார்
கொஞ்சுவதைக் கண்டொருவர், “கொஞ்சுகிறீர் குழந்தைகளை
கொஞ்சுமிந்தப் பழக்கம்யான் கொண்டிருக்க வில்லை”யென்று
நெஞ்சொடிந்து கேட்டபோது “நெஞ்சிருந்து இரக்கத்தை
எஞ்ஞான்று இழந்தீரோ?” என்றுநபி கேட்டார்கள்.

351.
சிறப்போங்கும் நபிநாதர் சிறுகுழந்தை மடியமர்த்தி
சிறப்பான கரத்தாலே பேரீத்தங் கனிதேய்த்தார்
சிறுகுழந்தை நபிமடியில் சிறுநீரைக் கழித்தவுடன்
சிறிதளவு நீரெடுத்துக் கருணைநபி கழுவினரே.

352.
சிறுகுழந்தை உஸாமாவை மறுகுழந்தை ஹஸனவரை
திருநபிகள் இருதொடையில் திருப்தியுடன் இருத்திவைத்து
“இருவருக்கும் அல்லாஹ்வின் அருட்பேறு வாய்க்கட்டும்!
இருவருக்கும் எனதன்பைச் சொரிகின்றேன்” என்றார்கள்.

353.
ஏற்றமுறு இளைஞர்காள், இல்வாழ்க்கை வசதியினை
ஏற்றிருப்பின் இல்வாழ்வில் இணையுங்கள்! இன்மணமோ
பார்வையதைத் தாழ்த்திவிடும்; பாதுகாக்கும் மர்மத்தலம்.

354.
குழந்தை பிறக்கையிலே கொடியோன் ஷைத்தானும்
குழந்தை தனைத்தீண்ட குழந்தை அழுதிடுமாம்
குழந்தை அழும்போது குர்ஆன் வசனங்கள்
நலமாய் ஓதுங்கள்! நலிந்தோன் ஷைத்தானின்
கலக்கும் தீங்கிருந்து காப்புத் தேடுங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

355.
குடும்பத்தைக் காப்பாற்றக் கோனிறையின் திருப்தியுடன்
கொடுத்துணவும் செலவுகளும் குன்றாமல் காப்பவரோ
திடமாகத் தருமத்தைச் செய்தவராம் என்றார்கள்.

356.
அயலாரும் வாரிசென அமைந்தவர்க்கும் சொத்தளிக்க
உயரிறையின் கட்டளையே வந்திடுமோ எனநானும்
பயந்தெண்ணும் பான்மையிலே ஜிப்ரீலும் வந்துவந்து
அயலாரைக் குறித்தெனக்கு அறிவுறுத்திச் சென்றார்கள்.

357.
வாழ்நாளும் நல்லுணவும் வளமாகப் பெருகுதற்கு
மேலாக விரும்புபவர்மிகச்சிறப்பாய் உறவினரை
மேலாகப் பேணுமென்று மேன்மைமிகு நபிசொன்னார்.

358.
இல்லத்தின் வேலைகளில் இறுதிநபி பங்கெடுத்து
இல்லத்தில் மனைவியர்க்கு இணைந்துதவி செய்தார்கள்
வெல்லுமொரு வணக்கமதாம் தொழுகையதன் வேளைவந்தால்
இல்லத்தை விட்டெழுந்து இறையில்லம் செல்வார்கள்.

359.
“சேர்த்தென்னை வாழ்வோரைச் சேர்த்திடுவான் அல்லாஹ்வும்
சேர்க்காமல் இருப்போரைச் சேர்க்காது விட்டிடுவான்”
பார்மீதில் உறவுமுறைப் பந்தமது பகருமென
சீர்நபிகள் சொன்னார்கள் சீர்தூக்கிப் பாருங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றுமை

*360.*

*மக்காவில் இருந்தவர்கள் ஹிஜ்ரத்து மேற்கொண்டு*
*தக்கபடி மதீனாவைச் சென்றடைந்த போதினிலே*
*மக்கத்து மாந்தரையும் மதீனத்து மக்களையும்*
*பக்குவமாய்ப் பிணைத்தார்கள் பண்புநபி நாயகமும்*
*மக்காவில் இருந்துவந்த அப்துர்ரஹ் மான்அவ்பை*
*தக்கபடி மதீனத்தார் ஸஃதிப்னு றபீஃஎன்பார்*
*பக்குவமாய் வரவேற்றுப் பாசமுடன் அணைத்தார்கள்*
*"மிக்கநிதி பொருளுடையேன் மேலவரே உங்களுக்கு*
*இக்கணமே சரிபாதி இதமாகத் தருகின்றேன்*
*புக்கிடமாம் வீடுகளில் ஒன்றுமக்குத் தருகின்றேன்*
*பக்குவமார் மனைவியரில் ஒருபெண்ணைத் 'தலாக்'செய்து*
*தக்கதுணை யாயிருக்க மணமுடித்துத் தருகின்றேன்"*
*ஸஃதவர்கள் இவ்வாறு சங்கையுடன் சொன்னபோது*
*ஸஹாபிகளில் மக்கத்தார் அப்துர்ரஹ் மானவர்கள்*
*"இதற்காக நானிங்கு ஹிஜ்ரத்து வரவில்லை*
*விதவிதமாய்ப் பொன்வேண்டாம்! வியக்கின்ற பெண்வேண்டாம்!*
*இதமாகக் குடியிருக்கும் இல்லமதும் வேண்டாமே!*
*நிதமோம்பும் தொழிலொன்றை நிகழ்த்துதற்கு விரும்புகின்றேன்*
*அதற்காகச் சந்தைக்குச் செல்கின்ற வழிசொல்வீர்"*
*என்றங்கு கேட்டார்கள்; ஏகுவழி சந்தைக்கு*
*ஏற்றமுறு நபித்தோழர் ஸஃதவர்கள் காட்டியதும்*
*நல்விதமாய்த் தொழிற்செய்ய அப்துர்ரஹ் மானவர்கள்*
*உள்ளசிறு பொருளெடுத்து உவப்புடனே சென்றார்கள்*
*நெய்யுடனே தேனதுவும் நேர்மையுடன் விற்(று)அவர்கள்*
*செய்தொழிலிற் சிறப்போங்கி செல்வத்தைச் சேர்த்தார்கள்.*
*மணமகனின் கோலத்தில் மாநபியின் முன்வந்தார்*
*"மணமுடித்துக் கொண்டீரோ?" என நபிகள் வினவியதும்*
*"இணக்கமுடன் மதீனத்துப் பெண்ணை நான் மணந்துள்ளேன்"*
*மனமகிழ்ந்து அப்துர்ரஹ் மானவர்கள் கூறியதும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனமுவந்து பெண்ணுக்கு மஹரெதனைக் கொடுத்தீரோ?"
எனநபிகள் வினவியதும் "இயன்றளவு பொன்கொடுத்தேன்"
எனவன்னார் இயம்பினரே "இனிதாக வாழ்ந்திடுக!
மனமகிழ்ந்து ஆடறுத்து மணவிருந்து கொடுத்திடுக!"
எனநபிகள் சொன்னார்கள் ஏற்றார்கள் நபித்தோழர்.

361.
பிணக்குற் றிருப்போரைப் பேசிப்பொய் யுரைத்தேனும்
இணக்கப் படுத்துவதில் எப்பிழையும் இல்லையென்றார்.

362.
மனிதனது எலும்புகளின் இணைப்புள்ள மூட்டுக்கள்
அனைத்திற்கும் தருமத்தின் அவசியமே தானுண்டு
தினந்தோறும் மனிதரிடை சமாதானம் செய்வதுவும்
கனமான தருமமெனக் கருணைநபி சொன்னார்கள்.

363.
என்வாழ்வைப் பின்தொடர்ந்தோர் இறையவனை வழிபட்டார்
என்வாழ்வைப் புறக்கணித்தோர் இறையவனைப் புறக்கணித்தார்
என் சமூகத் தலைமையினை ஏற்றுப் பணிந்திடுவோர்
என்வாழ்வை ஏற்றார்கள் ஏனையவர் வீழ்ந்தார்கள்.

364.
பிணக்குற்ற மக்கத்துக் குறைஷிகளும் நபிமணியும்
இணக்கத்தைச் செய்வதற்கு ஹுதைபிய்யா எனுமிடத்தில்
இணக்கப்பா டெழுதியபின் இறுதிநபி தம்பெயரை
வணங்குமொரு அல்லாஹ்வின் தூதரெனப் பதித்தார்கள்
இணங்கவில்லை யிதற்கந்த எதிரணியார்; "எங்களுக்கு
இணக்கமில்லை நீங்களிறை தூதரென்ற நிலைப்பாட்டில்;
இணங்கோம் இதற்"கென்று எதிரணியார் மறுத்தார்கள்.
குணத்திற் சிறந்தோங்கும் கோமான் நபிநாதர்
இணங்கி, "இறைதூதர்" எனும்சொல்லை அழித்துவிட;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணக்கும் நபித்தோழர் அலியாரைப் பணித்தார்கள்.
இணங்கி அழிப்பதற்கு இன்தோழர் மறுத்திட்டார்
குணஞ்சேர் நபிநாதர் குறைவற்ற தம்கரத்தால்
இணங்கி யதையழித்து "இறையோனின் அடிமை"யென
மணியாய் வரையுமென மனமொப்பிச் சொன்னார்கள்.

*365.*
கறுப்புநிற மனிதரவர் காரியஸ்த னாயிடினும்
தரமான அவர்தலைமை தகுதியுடன் ஏற்றிடுவீர்!

*366.*
தலைவரது செயற்பாட்டில் திருப்தியின்மை கண்டூரேல்
நிலைபெயராத் தன்மையிலே பொறுமையுடன் நடவுங்கள்
குலையாமல் கூட்டமுடன் நிலையாக நில்லுங்கள்
கலைந்தொருசாண் விலகிடினும் கடைகெட்ட ஜாஹிலென
நிலவுலகை விட்டவரும் நீங்கிச் செத்திடுவார்.

*367.*
உறுப்புக்கள் பிணைந்ததுபோல் உறவாகப் பிணைந்திருத்தல்
பெருமையுறு முஃமீனது பேறான பண்பாகும்
ஒருவுறுப்புப் பிணியுறுமேல் மறுவுறுப்புக் காய்ச்சலுடன்
வருந்துகிற விழிப்பதனால் வருந்துவது போல்முஃமின்
வருந்துவது பண்பாகும் எனவுரைத்தார் நபிநாதர்.

*368.*
"குபா"வென்னுங் கிராமத்தார் குழப்பமுற்றார் எனுஞ்சேதி
நபியவர்கள் செவியுற்று, "நாடியங்கு செல்லுங்கள்!
குபாவாழும் மக்களிடை இணக்கத்தை ஏற்படுத்தி
உபகாரம் செய்யுங்கள்" என்றினிதே சொன்னார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*369.*

"புனிதமிகு இஸ்லாத்தின் போராட்டப் பணிக்கேகும்
அணியினரின் பட்டியலில் அடியேனின் பெயரதையும்
கணித்தெழுதிப் பதித்துள்ளேன், கண்மணியே நாயகமே
மணியான என்மனைவி மகத்தான ஹஜ்கடமை
புனிதமுடன் செய்தற்குப் போகவுள்ளார் நானந்தப்
புனிதமிகு போரதற்குப் புறப்படவா? அல்லதெந்தன்
கனிவான மனைவியுடன் ஹஜ்ஜுக்குத் துணையாக
இனிதாகச் சென்றிடவா?" என்றொருவர் நபியிடத்தில்
வினவியதும் நபியவர்கள் "விரும்புமுந்தன் மனைவியரைத்
தனியாக ஹஜ்ஜுக்கு அனுப்பாதீர்! துணையாக
கனிவான மனைவியுடன் ஹஜ்ஜுக்கு சென்றிடுக!
அணிசேர்ந்து ஜிஹாதுக்குப் போகாதீர்!" என்றார்கள்.

*370.*

நெருங்கியஆண் உறவினரின் துணையின்றிப் பெண்ணொருவர்
பிரயாணம் செயல்ஆகா தெனநபிகள் சொன்னார்கள்.

*371.*

திரிகை தனையரைத்துத் தேய்ந்துவிட்ட தென்கரங்கள்
கருமம் தனக்குதவி கணித்தே செய்கின்ற
அடிமை தனிலொருவர் அளிப்பீர் எமக்கென்று
கடினப் பணிசெய்யும் கனிவார் பாத்திமாவும்
முடியாப் பெருமைசேர் முத்தார் ஆயிஷாவும்
திடமாய் நபியிடத்தில் தேர்ந்து வேண்டுகையில்
"அடிமை தனைக்காண அதிகச் சிறப்புற்ற
விடயம் சொல்கின்றேன் விரும்பிக் கேளுங்கள்:
கடமை யெலாமுடித்துக் கண்துஞ்சச் செல்கையிலே
படுக்கை தனிலிருந்து அல்லாஹு அக்பரென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்துச் சிறப்பாக அல்ஹம்து லில்லாஹென்றும்
தொடுத்து சுப்ஹானல் லாஹ்என்றும் முப்பத்து
மூன்று விடுத்தங்கள் மூன்று ஓதலையும்
ஈண்டு மொழியுங்கள் எல்லாச் சிறப்புகளும்
தீண்டும் உங்களைத்தான் தேர்வீர்!" எனச்சொன்னார்.

*372.*

சுவனத்தைக் கண்ணுற்றேன் சொத்தில்லா வறியோர்கள்
சுவனத்திற் சுகங்காணும் சுபக்காட்சி தனைக்கண்டேன்
அவமான நரகத்தில் அதிகம்பேர் பெண்கள்தான்
துவழுவதைத் துன்பத்தில் தொடராகக் கண்ணுற்றேன்.

*373.*

அண்ணல் நபித்தோழர் அருமை அபூபக்ரின்
அன்பார் திருப்புதல்வி அஸ்மா நாயகியார்
அண்ணல் நபிமணியும் அருமை அபூபக்ரும்
மண்ணில் மதிப்புள்ள மதீனா செல்லுகையில்
உண்ணும் உணவந்த உத்தமரா மிருவர்க்கும்
நன்றாய்ச் சமைத்தெடுத்துத் தோற்பை யிரண்டினிலே
உன்னிப் போட்டெடுத்தார் உணவுப் பைகளினை
பின்னிக் கட்டுதற்குக் கயிற்றை காணவில்லை
மின்னல் இடைதனிலே சுற்றிக் கட்டுகிற
வண்ணப் பட்டியினைக் கிழித்தார் இரண்டாக
உண்ணும் உணவுள்ள பைகள் இரண்டையுமே
வண்ணப் பட்டிகளால் வடிவாய்க் கட்டியவர்
அண்ணல் நபிமணிக்கும் அருமைத் தந்தைக்கும்
உண்ணும் உணவுதனை உவந்தே கொடுத்தாரே
அன்னை அஸ்மாவும் இடுப்புப் பட்டியினை
உன்னி யிரண்டாகக் கிழித்துக் கட்டியதால்
பன்னும் "பட்டியிரண் டுடையார்" எனும்பெயரை
பண்பாய்ப் பெற்றாரே பாரிற் சிறந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

374.
நிதானத் தன்மையுடன் நெறிப்படுத்து மாதர்களை
வதுவை படைப்புற்றாள் விலாவின் எலும்பிருந்து
விலாவின் எலும்பதுவோ வளையும் தன்மையது
எலும்பை நிமிர்த்திட்டால் ஒடியும் விட்டாலோ
எலும்பு வளைந்துவிடும் என்றார் இறைதூதர்.

375.
கறுத்தநிறப் பெண்ணொருவர் கண்ணியமாய்ப் பள்ளியினை
விருப்பமுடன் துப்பரவு செய்துவந்தார் அப்பெண்ணோ
ஒருநாளில் அப்பணியைச் செய்தற்கு வரவில்லை
பெருமானார் அதுபற்றி பிரியமுறுந் தோழரிடம்
கருத்துடனே விசாரித்தார்; கறுத்தநிறப் பெண்ணவரோ
மரணித்தார் எனவங்கு மக்கள்சிலர் செப்பிடவும்
"தெரியாதே எனக்கதுவும் தெரிவிக்க வில்லைஏன்?"
பெருமானார் கோபித்துப் பெண்ணவரின் கபுறடியில்
அருகிருந்து தொழுதார்கள் அவருக்கு துஆச்செய்தார்.

## கல்வி

376.
அறிவுரைகள் நபிமணியும் ஆய்ந்துரைக்கும் சபைக்கொருநாள்
திருநபியின் தோழர்கள் மூவரங்கு வந்தார்கள்
ஒருமனிதர் சபைமுன்னே உள்ளிடத் தமர்ந்திட்டார்
மறுமனிதர் அச்சபையின் பின்வரிசை சென்றமர்ந்தார்
ஒருமனிதர் அங்கிருந்து ஓடோடிச் சென்றுவிட்டார்
பெருமானார் பேருரைகள் பேசியங்கு முடித்தபின்னர்
கருதியந்த மூவரதும் காரியத்தைச் சொன்னார்கள்:
அருகினிலே அமர்ந்தவரோ அல்லாஹ்வின் அருள்சுமந்தார்
மறுமனிதர் வெட்கித்தார் மன்னவனும் வெட்கித்தான்
புறக்கணித்துப் போனவரை புறக்கணித்தான் அல்லாஹ்வும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

377.
நலவெவர்க்கு நாயனவன் நாடுவனோ நயந்தவர்க்கு
விளக்கத்தை மார்க்கத்தில் விரிவாகக் கொடுத்திடுவான்
அளந்தெடுத்துக் கொடுப்பவன்யான் அல்லாஹ்வே அளித்திடுவான்
உளமோம்பும் மார்க்கத்தில் உறுதியுடன் இருப்பவர்க்கு
உலகத்தோர் எவராலும் உறுதீங்கு ஒட்டாது
இழவுநாள் எய்தும்வரை எத்தீங்கும் இணையாது.

378.
இருவர்மேல் மாத்திரமே பொறாமையுறத் தகுமாகும்
பொருள்பெற்றுப் புண்ணியத்திற் பொருளதனைச் செலவிடுவார்
அருளார்ந்த கல்வியினை அடுத்தவர்க்குக் கற்பித்து
பெரும்பயனைத் தானடையும் பேறுடைய பெருமகனார்.

379.
அறிவகன்று போயிடுதல், அறியாமை நிலைத்திடுதல்,
வெறியூட்டும் மதுவருந்தல், விபச்சாரம் பெருகிடுதல்
இறுதிநாள் ஏற்படவே இவையெல்லாம் அடையாளம்.

380.
உலமாப் பெரியீரின் உயிர்கவர்வ தன்மூலம்
வளமார் நல்லறிவை வல்லஇறை கவர்ந்திடுவான்
உலமாப் பெருந்தகையர் உலகில்லா வேளையிலே
உலகில் அறிவில்லார் தலைமை தாங்கிடுவார்
விளங்கும் அறிவின்றி விளக்கஞ் சொல்வார்கள்
வழிகெட்டுப் பிறரையுமே வழிகெடுத்து விடுவார்கள்.

381.
நலமோங்கும் நபித்தோழர் இப்னுஅப்பாஸ், நபியவர்கள்
மலகூடம் செல்லுகையில் சலமெடுத்துக் கொடுத்ததற்காய்
உளமகிழ்ந்து தோழருக்கு, உயர்கல்விப் பேறளிக்க
நலமாக இறைவனிடம் நயந்தங்கு துஆச்செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*382.*
*மரணமது வேண்டுமென மனமுடைந்து பிரார்த்தித்தல்*
*முரணான செயலென்று முத்து நபி மொழிந்தார்கள்.*

*383.*
*மரணித்த ஒருவரது சடலமது சுமந்தெடுத்து*
*வரும்போது நபியவர்கள் வாய்திறந்து சொன்னார்கள்*
*"சுகம்பெற்றார் இவர்அன்றி இவராலே மற்றவர்கள்*
*சுகம்பெற்றார்" என்றுநபி சொல்லுகையில் தோழர்கள்*
*"இகமோங்க வந்துதித்த எழிலான நபிமணியே,*
*மிகச்சுருக்க மாய்நீங்கள் மொழிந்ததுவோ யா"தென்று*
*மிகப்பணிவாய்க் கேட்டார்கள்; மேலான முஃமினென*
*இகமீதில் இருந்தவரோ இறந்திட்டால் இவ்வுலகின்*
*மிகத்தொல்லை துன்பத்தி லிருந்துசுகம் பெற்றிடுவார்;*
*மிகக்கெட்ட மனிதரவர் மரணித்தால் மண்ணுலகின்*
*புகலரிய மனிதர்கள், மரம், மற்றும் மிருகங்கள்,*
*திகழ்கின்ற நாடுகளும் சுகம்பெற்று விளங்கிடுமே*
*மிகச்சுருக்க மாயிதையே நானுரைத்தேன்" என்றார்கள்.*

*384.*
*"மரணித்த ஜனாஸாவை மண்ணறைக்குக் கொண்டுசெல்லும்*
*தருணத்தில் மூன்றவரைத் தொடர்ந்தேகும்; அம்மூன்றில்*
*இரண்டுடனே திரும்பிவிடும் இருக்குமங்கு ஒன்றுமட்டும்*
*இரக்கமுள்ள குடும்பத்தார், ஈட்டிவைத்த பணங்காசு,*
*விருப்பமுடன் அவர்செய்த விதமான "நல்லமல்கள்;*
*நெருக்கமுறும் குடும்பமதும், நிறைவான பணங்காசும்*
*இருக்காது அவருடனே ஏற்றமுறு 'அமல்'மட்டும்*
*இருக்குமந்த மனிதருடன்" என்றார்கள் இறைதூதர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

385.
இறந்தபின்னர் ஒருவரது இருப்பிடமோ மறுமையிலே
அறிவிக்கப் படுமவர்க்கு; அமைவிடமும் காட்டப்படும்
உறையுமிடம் சுவனமெனில் உறுமிடமோ நரகமெனில்
பெரிதாகக் காண்பிக்கப் படும்; இதுதான் நீயிங்கு
உறையுமிடம் எனஅவர்க்கு உணர்த்தப் படுமாமே.

386.
காலுக்குச் செருப்பின்றி கட்டுமுடை ஏதுமின்றிக்
கால்நடையாய் எல்லோரும் மறுநாளில் வருவார்கள்
"நிர்வாண மாயங்கு நிற்கையிலே எல்லோரும்
நிர்வாணக் கோலத்தைப் பார்ப்பாரே" என்றருமைத்
துணைவியராம் ஆயிஷாவும் தூதரிடம் கேட்டார்கள்
"அனைவருமே அப்படித்தான் ஆளையாள் பார்ப்பதற்கு
முனையார்கள் அந்நாளில் மூளுகின்ற அமளியினால்"
துணைவிக்கு நபியவர்கள் தொடர்ந்துபதில் சொன்னார்கள்.

387.
மரணித்த ஜனாஸாவின் தொழுகையிலே பங்கேற்று
மரணித்த ஜனாஸாவை அடக்குதற்கும் செல்பவரோ
இரண்டுபெரு மலையளவு கூலிக்கு உரித்துடையார்
மரணித்தார் தொழுகையிலே மட்டுமவர் பங்கேற்றால்
ஒருமலையின் அளவுடைய கூலியதைப் பெறுவாரே.

388.
ஒருவரது சிறுபிள்ளை ஒன்றிரண்டு மூன்றென்று
மரணித்தால், அவர்களது பெற்றார்கள் மறுமையிலே
அருளான சுவனத்தில் நுழைவதற்குக் காரணமாம்.

389.
இறந்த மனிதருக்காய் இரங்கித் துக்கித்தல்
மூன்றே நாட்கள்தான்; கணவன் மரணித்தால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்பின் மனைவிமட்டும் மாதம் நான்குடனே
மீண்டும் தினம்பத்தில் மனதாற் துக்கிப்பார்.

**390.**

பெண்ணொருவர் பிரியமுடன் வளர்த்துவந்த பிள்ளையொன்று
கண்மூடி மரணித்த கவலையினால் கபுறடியில்
பெண்ணவரோ பெருந்துயராற் கதறி யழுததனை
புண்ணியநம் நபிகண்டு "பொறுத்திடுக" எனச்சொன்னார்
"எந்தனுக்கு வந்ததுயர் எப்படிநீர் அறிவீரா?
உந்தனது வேலையினை உன்பாட்டில் பாரு"மென்று
வெந்தொடிந்த பெண்ணங்கு வேதனையைக் கொட்டிநின்றார்.
வந்தங்கு நிற்குமவர் வள்ளல்நபி முஹம்மதென்று
அந்தப் பெண்ணுக்கு அறவே தெரியவில்லை
வந்தங்கு பேசியவர் வாஞ்சைநபி நாதரென்று
வந்தோர் சொல்லியதும் வருத்தம் அடைந்தபெண்ணோ
வரிசை நபியிடத்தில் வருத்தம் தெரிவித்தார்.
வருத்தும் துயர்வந்த முதல்வேளை வருந்துவதே
பொருந்தும்; நாளெல்லாம் வருந்தல் வேண்டாமே!
பெருமான் நபிநாதர் பெண்ணுக்குச் சொன்னார்கள்.

**391.**

அபூதல்ஹா தொழிலுக்காய் அயலூர்க்குச் சென்றிருந்தார்
அபூதல்ஹா திருப்புதல்வர் அற்றைநாள் மரணித்தார்
நபித்தோழர் அன்னாரின் நற்றுணைவி பொறுமையுடன்
மரணித்த பிள்ளையினைக் குளிப்பாட்டி கபனிட்டு
மறைத்தங்கு துணியாலே இல்லத்தில் வைத்திட்டார்
அபூதல்ஹா வீட்டுக்கு இராவேளை வரலானார்
அன்னாரை வரவேற்று இன்முகத்தால் உபசரித்தார்
"அன்பினிய புதல்வரெங்கே?" எனக்கேட்ட கணவனுக்கு
"கண்மூடித் தூங்குகிறார்" என்றுரைத்தார் இன்மனைவி
அன்றிரவு படுக்கையிலே ஒன்றித்துக் களித்தார்கள்.
மறுநாட் காலையிலே அபூதல்ஹா குளித்துவிட்டு
வர்த்தகத்தின் நோக்கோடு வெளியேறும் வேளையிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புமகன் மரணித்த செய்தியினைச்சொல்லி நின்றார்
"கொடுத்தவனே எடுத்திட்டான் கொடுத்தவனே எடுத்தபோது
கொடுப்பதுதான் முறையாகும்" என்றவர்கள் பொறுத்தார்கள்.
இச்செய்தி நபிமணிக்கு எட்டியதும் அப்புனிதர்
மெச்சியந்த இருவரையும் மகப்பேறு பெருகிடவே
இச்சையுடன் துஆக்கேட்டார்; அதன்பின்னர் இருவருமே
உச்சமகிழ் வுற்றவராய் ஒன்றித்து வாழ்ந்தார்கள்
இச்சையுறும் பிள்ளைகள் ஒன்பதுபேர் பெற்றார்கள்.
மெச்சுமவர் எல்லோரும் ஹாபிழ்களாய்க் கனிந்தார்கள்.

392.
இறந்தவருக் காயெவரும் ஏங்கியேங்கிக் கதறுவரேல்
இறந்தவருக் கேற்படுமாம் கப்றினிலே கடுந்துன்பம்.

393.
கன்னத்தில் அடித்தடித்துக் கழற்றிவிட்டு ஆடைகளைக்
கண்கலங்கிக் கதறுபவர், ஜாஹிலியாக் காலத்துப்
புன்மையரைப் போலழுது புலம்புபவர் என்னுடைய
உம்மத்தைச் சேராரென் றுரைத்தார்கள் நபிநாதர்.

394.
புனிதநபி நாயகத்தின் புத்திரராம் இபுறாஹீம்
துனியாவை விட்டகன்று மரணித்த வேளையிலே
கனியநபி கண்கலங்கிக் கண்ணீர் உகுத்தார்கள்
கண்ணியரே நீங்களுமா கண்கலக்க முறுகின்றீர்?
என்றங்கு தோழர்கள் வினாவெழுப்பும் போதினிலே
"கண்ணழுது நிற்கிறது கல்பிரங்கிக் கனிகிறது"
அண்ணல்நபி அப்போது அகமுருகிச் சொன்னார்கள்.

395.
இறந்தவரின் ஜனாஸாவை எடுத்தேகக் கண்டீரேல்
எழுந்திருங்கள்! இயலுமெனில் ஜனாஸாவைத் தொடருங்கள்!
யூதரது சடலமது சுமந்தேகக் கண்டநபி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தங்கு நின்றார்கள்; இறந்தவரோ யூதரென
அழுத்தமுடன் அங்கொருவர் அறிவிக்கக் கேட்டபோது
"பழுதில்லா உயிரன்றோ?" என்று நபி கேட்டார்கள்.

396.
தோள்சுமந்து மையித்தைத் தூக்கிச் செல்லுகையில்
மேலான நல்லவராய் மேவி யவரிருந்தால்
"விரைந்தே சென்றிடுங்கள்" எனமையித் இயம்பிவிடும்
கீழான பாவியெனில் "கேடெனெக்கே கெட்டொழிந்தேன்
தோளிற் சுமந்தென்னைத் தொடர்ந்தெங்கே போகின்றீர்?"
கேட்டுப் புலம்புமது; கேட்குமதைப் பிராணிகளும்;
கேட்கான் மனிதனவன்; கேட்பானேல் மயங்கிடுவான்.

397.
செம்மல்நபி நாயகத்தின் சேவகராய் யூதமதச்
சிறுவரவர் பணிசெய்து சிறப்படைந்தார்; ஒருபோது
சிறுவரவர் பிணியுற்றுப் படுத்திருந்தார் நபிவந்து
சிறுவரது தலைமாட்டில் சீராய் அமர்ந்திருந்து
"சிறப்போங்கும் இஸ்லாத்திற் சேர்ந்திடுக" எனச்சொல்ல
சிறுவரவர் தன்தந்தை முகம்பார்த்தார்; தந்தையவர்
"மறுக்காது நபிமணியின் மார்க்கத்திற் சேர்க"என
அறிவுறுத்த அச்சிறுவர் அருங்கலிமா மொழிந்துற்றார்
"எரிநரகில் இருந்திந்த இளையவரைக் காத்திட்ட
கருணைப் பேரிறைக்கே கரைகடந்த புகழெல்லாம்
உரித்தாக" எனநபிகள் உளமாரப் புகழ்ந்தார்கள்.

398.
பெருமான் நபிநாதர் பிரசங்கம் நிகழ்த்துகையில்
நெருக்கும் மண்ணறையின் நெருக்கடிகள் பற்றியன்னார்
உருக்க முறைக்க உபதேசம் செய்தார்கள்
இருந்த ஸஹாபாக்கள் இதைக்கேட்டுப் பயமுற்று
இரைந்து அழுதார்கள் இறையைப் பணிந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

399.
மையித்தை கப்றுக்குள் வைத்துமண் மூடியபின்
மையித்தை அடக்கியவர் மறுகிச் செலத்தொடங்க
மையித்தை விசாரிக்க மலக்கிருவர் வருவார்கள்
மையித்தை விழித்தன்னார் "முஹம்மதென்னும் மனிதரவர்
வையத்தில் வந்தாரே அவர்குறித்தும் கருத்தென்ன?"
என்றவர்கள் கேட்பார்கள்; ஏற்றமுறு முஃமினெனில்
"அன்னாரோ அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாம்"
என்றங்கு இனிதாக இயம்பிடுவார் அப்போது
"உன்னுடைய உறைவிடமோ உயர்சுவனம்" என்றவர்கள்
கண்ணியமாய்ச் சொல்வார்கள் களிப்புறுவார் அம்மனிதர்;
புன்மையறும் காபிரெனில் பொருந்தாத முனாபிக்கெனில்
"அன்னவரை அறியேனே" என்றவரும் அலறிடுவார்
வன்மையுடன் மலக்குகளோ வருத்திடுவர் அன்னவரை;
துன்பத்தால் அம்மனிதர் துவண்டு கதறிடுவார்
துன்புற்றுத் துடிக்கும்அந்த தோசியமும் சத்தத்தை
மண்ணகத்து உயிரெல்லாம் கேட்டறியும்; மனுஜின்கள்
அன்றதனை கேட்டறியார்; அண்ணலவர் அறிவித்தார்.

400.
மரணித்த வர்மையம் சுமந்தேகப் படும்போது
மரணித்தார் தமைமக்கள் மகிழ்ந்து புகழ்ந்தார்கள்
கருணைநபி இதைக்கண்டு 'கடமை யாகியது'
எனக்கூறிக் கொண்டார்கள்; இன்னொருநாள் ஒருமையம்
சனங்கள் சுமந்தேகும் போதினிலே பொதுமக்கள்
சினந்து கடிந்தார்கள் இகழ்ந்து கதைத்தார்கள்
கண்ட நபியிதனைக் கடமை யாகியது
என்றே சென்னார்கள்; இதைக்கேட்ட தோழர்கள்
கன்னல் நபியிடத்தில் காரணத்தைக் கேட்டார்கள்
"முன்னர் ஜனாஸாவை மகிழ்ந்து புகழ்ந்தீர்கள்
மின்னும் சுவனத்துக் குரித்தானார் அம்மனிதர்;
பின்னர் ஜனாஸாவைக் கடிந்து இகழ்ந்தீர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னல் நிறைநரகுக் குரித்தானார் அம்மனிதர்"
என்றே நபிநாதர் இனிதாய் மொழிந்தார்கள்.

401.
இறந்த மனிதர்களை ஏசித் தூற்றாதீர்!
இறந்தார் நிலைமையினை அல்லாஹ் தானறிவான்
இறந்தார் நமைமுந்திச் சென்றார் சென்றாரே!

402.
அடியாரில் ஒருவருக்கு அல்லாஹு அறிவித்தான்
முடிவுள்ள இகவாழ்வை அல்லதிறை வசமுள்ள
முடிவில்லாப் பாக்கியத்தை எடுத்திடுக எனச்சொன்னான்
அடியாரோ அல்லாஹ்வின் வசமுள்ள வாய்ப்பதனை
எடுத்திடற்குச் சம்மதித்தார் எனநபிகள் இயம்புகையில்
உடனிருக்கும் நபித்தோழர் உத்தமராம் அபூபக்கர்
கடுமையாய் அழுதார்கள்; கருணைநபி மறைகாலம்
அடுத்ததென்று அவரறிந்தார்; அண்ணல்நபி பெருமானார்
அடுத்தெனக்குத் துணையான அபூபக்ரே அழவேண்டாம்
உடனிருந்து உதவுவதில் உறுபொருளைப் பேணுவதில்
திடமான நம்பிக்கை திகழுமொரு தோழர்நீர்
உடனெனக்குத் துணையான ஒருநண்பர் உம்மத்தில்
திடமாக அபூபக்கர்தான் திருநபிகள் சொன்னார்கள்.

403.
மறைவான விடயங்கள் மனிதன் அறியானாம்
இறைவன் மட்டும்தான் எல்லாமும் நன்கறிவான்
நாளைக்கு நடப்பதெது? பெண்வயிற்றுப் பிள்ளையெது ?
நாளையெதைப் பெற்றிடுவார் ? எவ்விடத்தில் இறப்புவரும் ?
வேளையெதில் மழைபெய்யும் ? அல்லாஹ்வே நன்கறிவான்.

404.
பரதேசிபோல் மற்றும் பிரயாணி போன்றிந்தப்
பரந்த உலகத்திற் பற்றன்றி வாழ்ந்திடுக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருட்டும் மாலையில்நீர் இருக்கும் போதினிலே
மருவும் காலையினை எதிர்பார்க்க வேண்டாமே!
இருக்கும் காலையிலே இருக்கும் வேளையிலே
இருப்போம் மாலையிலென் றெண்ணக்கூடாதாம்
பிணியில் வாடுகின்ற நேரம் வரும்முன்னே
பிணியில் லாதிருக்கும் சுகத்தைப் பேணிடுக!
திணறும் மரணத்தின் தினம்வந் துறுமுன்னர்
இணங்கும் வாழ்வதனை இனிதாய்ப் பேணிடுக!
உணர்த்தும் உரையிதனை உமர்மகனார் ஓதினரே.

## மறுமை

405.
மண்ணறையில் வேதனைகள் மனிதருக்கு உண்டென்று
அண்ணலவர் சொல்லியபின் அனுதினமும் தொழுதபின்னர்
மண்ணறையின் வேதனையோ அணுகாது காக்குமென
கண்கலங்கிப் பிராத்தித்தார்; கவனத்திற் கொள்வீரே!

406.
உடற்பருத்த மனிதரவர் மறுமையிலே வந்திடுவார்
உடற்சிறிய ஈயளவும் மதிப்பவர்க்கு இருக்காது.

407.
"தீரமுடன் போராடி தீனுக்காய்க் கொலையுண்டு
வீரமுடன் ஷஹீதானால் விளங்கும்யான் எங்கிருப்பேன்?"
வீரமிகு தோழரவர் வினவியதும் நபியிடத்தில்
"சீரோங்கும் சுவனத்திற் செழித்திடுவாய்" எனநபிகள்
கூறினரே; சுவையான பழமதனைச் சுவைத்தஅவர்
தூரத்திற் பழமதனை தூக்கியுடன் வீசிவிட்டு
போர்க்களத்திற் புகுந்தாரே போராடி ஷஹீதானார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

408.
சுவனத்துக் குரியவர்கள் சுவனத்தைச் சென்றடைவர்
சுடர்நரகுக் குரியவர்கள் சூழ்ந்திடுவர் நரகத்தில்
சுவனத்துக் குரியோரே மரணமில்லை உங்களுக்கு
இடர்சேரும் மறுமையிலே இவ்வாறு இறைசொல்வான்.

409.
வானத்தைப் பூமியினை வசப்படுத்திக் கொண்டஅல்லாஹ்
“மாண்பான மன்னன்யான் மண்ணகத்தில் அரசாண்ட
மன்னரெல்லாம் எங்கேயோ?” எனக்கேட்பான் மறுமையிலே.

410.
ஒருமனிதர் இறந்தபின்னர் மறுமையிலே அம்மனிதர்
இருக்குமிடம் அவருக்குக் காண்பிக்கப் படுமவரோ
இருக்குமிடம் சுவனமெனில் இன்பமுடன் கண்டிடுவார்
இருக்குமிடம் நரகமெனில் அதைக்காண்பார் அம்மனிதர்.

411.
இறுதிநாள் எப்போது ஏற்படுமென் றொருமனிதர்
இறுதிநபி மணியிடத்தில் கேட்டவுடன், அங்கிருந்த
சிறுவரினை நபியவர்கள் விரல்நீட்டிக் காட்டியிந்த
சிறுவருமே முதுமையினைச் சேர்வதற்கு முன்னாலே
இறுதிநாள் வந்துவிடும்; எச்சரித்தேன் என்றார்கள்.

412.
ஒருமனிதர் துணிவிற்க மறுமனிதர் வாங்குமுனர்
ஒருமனிதர் கால்நடையில் பால்கறந்து பருகுமுனர்
ஒருமனிதர் நீரெடுத்து உவப்புடனே குடிக்குமுனர்
ஒருமனிதர் உணவெடுத்து வாயினிலே போடுமுனர்
மறுமைநாள் வந்துவிடும் மறக்காதீர் என்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**413.**
நம்பிக்கைத் தன்மையது நலிவடைதல் கண்டீரேல்
நம்பிடுக யுகமுடிவு நெருங்கிவிட்ட தெனத்தானே
"நம்பிக்கை நலிவடைதல் என்றாலென் நாயகமே ?"
நம்மிறசூல் நபியிடத்தில் வினவப் படுகையிலே
"இம்மண்ணில் தகுதியற்ற மனிதரிடம் பொறுப்புக்கள்
தம்மைக் கொடுப்ப"தெனத் தகைநபிகள் சொன்னார்கள்.

**414.**
விரண்டோடிச் செல்கிறது விந்தைமிகு இவ்வுலகம்
விரைந்தே வருகிறது விளையுமொரு மறுவுலகம்
இரண்டுக்கும் ஏற்றாற்போல் இருக்கின்றார் மாந்தர்கள்
நிரந்தரமாம் மறுமைக்கு நேர்த்தியுடன் பயனளிக்கும்
தரமான அமல்செய்யும் தகையோராய் வாழுங்கள் !
தரமில்லா இவ்வுலகை இலக்காகக் கொள்ளாதீர் !
சிறப்பாக அமல்செய்யும் இடமிந்த உலகம்தான்
உரமான விசாரணைகள் ஒருபோதும் இங்கில்லை
மறுவுலகில் விசாரணைகள் மலைபோன்ற தாயிருக்கும்
மறுவுலகில் அமலெதுவும் செய்திடவே ஒண்ணாது.

**415.**
நல்லவர்கள் உலகிருந்து நாளடைவிற் சென்றிடுவர்
அல்லாதார் தங்கிடுவர் அதிசிறிய கோதுமையின்
சில்லறைபோல் பேரீத்தம் பழச்சுளையின் கோதைப்போல்
சில்லறைகள் மிஞ்சிடுவர்; சீர்தூக்க மாட்டானே
அல்லாஹ்வும் அன்னாரை; அண்ணலார் அருளினரே.

**416.**
உலகிருந்து கல்வியது உயர்த்தப் பட்டுவிடல்
அழிவுதரும் அறியாமை அதிகரித்துக் காட்சிதரல்
இழிவான விபச்சாரம் எவ்விடத்தும் பெருகிடுதல்
நலமில்லா மதுவருந்தல் நானிலத்திற் பரவிடுதல்
பலமான ஆண்குலத்தார் பாரகத்திற் குறைவடைதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழிலான பெண்குலத்தார் ஓராணுக் கிவ்வுலகில்
அளவிலொரு ஐம்பதென அதிகரித்துப் போயிடுதல்
இலங்குமொரு அறிகுறியாம் இறுதிநா ளதற்காமே.

417.
இறுதிநபி யாகஎன்னை ஏகனிறை அனுப்பியதும்,
இறுதிநாள் தோன்றுவதும் இணைந்ததிவ்வா றென்றுரைத்து
இறுக்கமுடன் பெருவிரலை இணைந்துள்ள மறுவிரலை
இணைத்துக் காட்டினரே இறசூல் நபிநாதர்.

418.
மறுமை நிலைபற்றி, மருட்டும் நரகத்தின்
கரிக்கும் முறைபற்றி கணித்தே நான்நன்கு
அறிந்தே யிருப்பதுபோல் நீவீர் அறிவீரேல்
சிறிதாய்ச் சிரிப்பீர்கள்; பெரிதாய் அழுவீர்கள்.

419.
அப்துர்ரஹ் மானிப்னு அவ்பிடத்தில் அன்றொருநாள்
செப்பமுடன் சீருணவு வந்துற்ற போதினிலே
அவ்வுணவை உண்ணாமல் அகங்கசிந்து அழுதார்கள்
செவ்வையுறு நபித்தோழர் முஸ்அப் இப்னுஉமைர்
இவ்வுலகைப் பிரிகையிலே இணையுடலை மூடுதற்கு
எவ்வகைத் துணியுமிலா ஏழ்மை நிலையடைந்தார்
செவ்வை உணவுகளும் செல்வங்கள் பலநமக்கு
நன்றாய்க் கிடைக்கிறது நலமெல்லாம் இவ்வுலகில்
நன்றாய்க் கிடைப்பதனால் நாளை மறுமையிலே
ஒன்றும் கிடைக்காது உழலல் ஏற்படுமோ?
என்றே நினைந்து அழுதேன் என்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருநாள்

420.
ஆயிஷா நாயகியாம் அண்ணலார் துணைவியிடம்
நேயமிகு பெண்ணிருவர் இருந்தனரே, அப்பெண்கள்
ஆயவொரு பெருநாளில் அழகினிய குரலாலே
தூயமுறைப் பாடல்கள் பாடுகையில், ஆயிஷாவின்
நேயமிகு தந்தையராம் நேர்மையுறு ஆபூபக்கர்
"வாய்மையுறு நபிவீட்டில் பாடுவதா?" எனக்கேட்க
தூயநபி வாய்திறந்து "தொடர்ந்தவர்கள் பாடட்டும்
தீமையிலை, தடுக்காதீர்!" எனவங்கு இயம்பினரே.

421.
திருநாளாம் பெருநாளில் திருநபியின் தேன்மனைவி
திருமணியார் ஆயிஷாவோ விருப்பமுடன் விளையாட்டை
இரசித்தற்கு விருப்பமுற இணைந்துநபி, மனைவியுடன்
இரசித்தார்கள் பெருநாளில் இதயத்தால் மகிழ்ந்தார்கள்.

422.
மகிழ்ச்சியுறு ஹஜ்பெருநாள் மாண்பான தினத்தன்று
"மகிழ்வான இந்நாளில் முதல்வேலை தொழுகையது;
அகங்கனிந்து பிராணிகளை அறுப்பதுவும் அடுத்ததுவே
முகமலர்ந்து செய்யுங்கள்" எனநபிகள் மொழிந்தார்கள்.

423.
ஈத்பித்ர் தினத்தன்று இறைதூதர் உணவின்முன்
ஈத்தம் பழமதனை இனிதாகச் சுவைப்பார்கள்.

424.
இருபெருநாட் தினங்களிலும் இறுதிநபி தொழுதபின்னர்
உருக்கமுடன் மக்களுக்கு உபதேசம் புரிவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

425.
பெருநாளில் தக்பீரும் பிரார்த்தனையும் செய்கவென
பெருமானார் தோழருக்குப் பிரியமுடன் சொன்னார்கள்.

426.
ஒருபெருநாட் தினத்தன்று உத்தமநன் னபிமணியார்
பிரியமுடன் தொழுதபின்னர் பிரசங்கம் செய்தார்கள்
அருளுரைகள் பெண்களுக்கும் வழங்கியநன் னபிநாதர்
சிறப்புடனே தருமங்கள் செய்கவெனப் பணித்தார்கள்.

427.
பெருநாளிற் தொழுகைக்குச் செல்கின்ற பெருமானார்
ஒருவழியாற் பள்ளிக்குச் செல்வார்கள் வரும்போது
மறுவழியால் வருவார்கள்; மணியான சுன்னத்தாம்.

428.
இருபெருநாட் தினங்களிலும் நோன்பிருக்க வேண்டாமே!
ஒருநாளோ நோன்பின்பின் உறுகின்ற பெருநாளாம்
மறுநாளோ ஹஜ்பெருநாள் மகிழ்ந்தளிப்பீர் உழ்ஹிய்யா.

## நோய்

429.
காய்ச்சலெனும் பிணியதுவோ காய்ச்சுகின்ற நரகத்தின்
தீச்சுடராம்; நீர்கொண்டு குளிராக்கிக் கொள்ளுங்கள்.

430.
பிணியுறுதல் பாவங்கள் நீங்குதற்கு வழியாகும்.

431.
நோய்பிணியும் துக்கமதும் நோவினையும் சிரமமதும்
போய்ப்பாவம் நீங்குதற்குப் பொருந்துமொரு நிலையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

432.
எவர்மீது நன்மையினை இறைவிரும்பி விடுவானோ
அவருக்குப் பூவுலகில் அவலங்கள் அளித்திடுவான்.

433.
பசித்தோர்க்கு உணவிடுங்கள் பிணியாள ரிடம்சென்று
கசிந்திரங்கிப் பிரார்த்தியுங்கள் கருணைநபி சொன்னார்கள்.

434.
பிணிநோயை மாந்தருக்குப் பிணைத்தளித்த இறையோனே
பிணிபோக்கும் மருந்தினையும் பிந்தாமல் தந்துள்ளான்.

435.
வயிற்றுவலி நோயாளி வந்தொருநாள் நபியிடத்தில்
வயிற்றுவலி நீங்குதற்கு வகைமருந்து வேண்டிநின்றார்
நயமாகக் குணமளிக்கும் தேனதற்கு மருந்தெனவே
நயமாகச் சொன்னார்கள் நன்னபிகள் நாயகமும்.

436.
ஓரிடத்தில் பேதிநோய் உற்றிருந்தால் அவ்விடத்தைச்
சேராதீர்; சென்றிருந்தால் அங்கிருந்து சென்றிடாதீர்!

437.
இருகண்ணும் நோயுற்று இணைகின்ற வலியதனைப்
பொறுக்கின்ற மனிதருக்குப் பரிசாக மறுவுலகில்
பெறுமதியாம் சுவனமது கிட்டுமென்றார் பெருமானார்.

## உடை

438.
பெருமையுடன் நிலம்படவே உடையணியும் பேர்களினை
அருளிறைவன் நோக்கானே அருட்பார்வை கொண்டிங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

439.
காலுக்குக் கீழாடை யணிகின்றோர் காற்பாதம்
கீழான நரகில்தான் கிடந்தெரியும் என்றார்கள்.

440.
பட்டாடை அணிபவர்கள் பயங்கரமாம் மறுநாளில்
இட்டமுடன் எப்பேறும் பெறாரென்றார் பெருமானார்.

441.
வெள்ளிதங்கப் பாத்திரத்தில் பருகுவதைப் புசிப்பதனை
வள்ளல்நபி தடுத்தார்கள்; பட்டாடை புனைவதையும்
அல்லா தெனத்தடுத்து அதிலமரல் வெறுத்தார்கள்.

442.
அங்கசுத்தி, உடையணிதல், பாதணிகள் புனைவதிலே
சங்கையுற வலப்பக்கம் முற்படுத்தச் சொன்னார்கள்.

443.
ஆண்வேடம் பெண்ணணிதல் பெண்வேடம் ஆணணிதல்
வேண்டத் தகாததென நபியவர்கள் நவின்றார்கள்.

444.
பட்டாடை யணிவதுவும், மதுபானம் பருகுவதும்
கெட்டசெயல்; ஆகாது; கேட்காமல் இவ்விரண்டும்
ஆகுமெனச் சொல்லி, அவை ஆகுமெனச் செய்பவரோ
ஆகிடுவார் பன்றியைப்போல் குரங்கைப்போல் என்றார்கள்.

445.
“பட்டாடை யணியாதீர்! வெள்ளிதங்கப் பாத்திரத்தில்
இட்டமுடன் உணவுகளை உண்ணாதீர்! பருகாதீர்!”
கட்டளையே இட்டநபி கனதியுள மறுமையிலே
கருமமிவை ஆகுமெனக் கனியமொழி சொன்னார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது

446.
ஒருகாலம் உருவாகும் ஓரிடையன் அக்காலை
பெருகுபொருள் மந்தையெலாம் பேணிச் சேர்த்தெடுத்து
அருகிருக்கும் மலைச்சாரல் பகுதிக்குப் போயிருப்பான்
உறுத்துகிற குழப்பத்தைப் பயந்தங்கு வசித்திடுவான்.

447.
ஆடுகளின் உரித்தாளன் அவற்றையெலாம் சேர்த்தெடுத்து
காடுகளில் மலைகளிலே கடுகதியாய்ப் பதுங்கிநிற்க
நாடுகளில் குழப்பங்கள் நடக்குமொரு காலம்வரும்.

448.
அல்லாஹ்வை அவன்தூதை அகத்தினிலே மிகநம்பி
உள்ளத்தில் உரங்கொண்டு உயர்புனிதப் போருக்குச்
செல்லுபவர் வெல்வாரேல் சேர்நன்மை பொருள்பெறுவார்
அல்லாது ஷஹீதானால் அணிசொர்க்கம் அடைவாரே.

449.
பெண்களிலே ஐம்பதுபேர்க் கொருவர்ஆண் எனுமளவு
பெண்தொகையோ பெருகிடுதல், ஆண்தொகையோ குறைந்திடுதல்,
கொன்றுவிடுங் கொலைபெருகல் யுகமுடிவின் அடையாளம்.

450.
எழுபதுபேர் நான்கண்டேன்; ஏழை, திண்ணைத் தோழர்கள்
முழுமையாய் உடல்மூட முழுப்போர்வை யவர்க்கில்லை
ஒழுக்கமுடன் மறையுறுப்பைக் கைகளால் மறைத்திருந்தார்.

451.
இறையில்லம் பள்ளியினை இவ்வுலகில் கட்டுனர்க்கு
இறைவனவன் சுவனத்தில் இல்லத்தைக் கட்டுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

452.
உஹதுப் போரினிலே வீரர் முஸ்அப்உமைர்
ஷஹீதாய்ப் போனார்கள் சரிந்த அவருடலை
மிகவும் ஒழுங்காக மூட முடியவில்லை
சிரசை மூடுகையில் காலோ தெரிகிறது
சிரசு தெரிகிறது காலை மூடுகையில்.

453.
பயணம் செய்வதுவோ பழுவாம் சிரமமதாம்
பயணம் செய்பவரோ பானம், ஊணைதையும்,
பயக்கும் உறக்கமதும் இழந்தே விடுகின்றார்
பயணம் முடிந்தவுடன் விரைக வீட்டுக்கு!

454.
உலகாசை, பேராசை இரண்டிலுமே மனிதமனம்
இளமையுடன் இருக்குமென இறைதூதர் இயம்பினரே.

455.
இரண்டுபெருங் கால்வாய்போல் எண்ணில்லாப் பொருளிருந்தும்
திரண்டதுபோல் மூன்றிருக்க விரும்பிடுவான் மடமனிதன்
அறிவில்லா அவன்வயிற்றை மண்ணால்தான் நிரப்பிடலாம்
முறையாக இறைவனிடம் முறையிட்டுப் பிரார்த்தித்தால்
இறையந்த முறையீட்டை ஏற்றருளைப் பெய்திடுவான்.

456.
இறுதிநாள் எப்போது ஏற்படுமென் றொருமனிதர்
இறுதிநபி தம்மிடத்தில் இணக்கமுடன் கேட்டுநின்றார்
"உறுதியுடன் அதற்காக உரியதெவை செய்துள்ளாய்?"
திருநபிகள் அவரிடத்தில் தீர்க்கமுடன் கேட்டார்கள்;
"பெரிதாகத் தொழவில்லை அதிகநோன் பிருக்கவில்லை
புரியவில்லை கூடுதலாய்ப் புண்ணியமாம் கருமங்கள்
பெருமானே, உங்களையும் பேரருளோன் இறைவனையும்
பெரிதாக நேசிக்கும் பேறுற்றேன்" எனச்சொன்னார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விருப்பமுடன் நீர்யாரை நேசித்துக் கொண்டீரோ
இருப்பாய்நீ அவருடனே ஏற்றமுடன் எப்போதும்"
திருநபிகள் இவ்வாறு திருப்தியுடன் சொன்னார்கள்.

457.
இனிக்கின்ற உணவினையும் இன்சுவைசேர் தேனதையும்
மணிநபிகள் மனமொப்பி மகிழ்வுடனே குடித்தார்கள்.

458.
துன்பதுயர் தொடருவதும் துக்கமது தோன்றுவதும்
துன்புறுத்தும் பாவங்கள் துடைக்குமொரு நிலையாகும்
துன்புற்றால் முட்குத்தித் துயர்பாவம் நீங்கிடுமே.

459.
சமர்க்களத்திற் சமரிடுவோன் சார்ந்தபெரு வீரனல்லன்
குமுறியெழுங் கோபத்தை அடக்குனனே பெருவீரன்.

460.
முன்னிரவில் பாலகரை முனைந்தமர்த்தும் வீட்டினுள்ளே!
இன்னல்தரும் ஷைத்தானின் பார்வையது உறுத்திடுமே!
நன்னயமாய் இறைநாமம் நாவாலே நீர்ஓதி
உன்னகத்துக் கதவுகளை உறுதியாய் மூடிடுக!
இன்னல்தரு ஷைத்தானோ மூடியுள்ள இல்லத்தில்
உன்னியங்கு புகமாட்டான்; உயரிறையின் பெயர்கூறி
உன்னகத்துப் பாத்திரங்கள் உறுதியாய் மூடிடுக!
கண்ணயரும் போதினிலே விளக்குகளை அணையுங்கள்!

461.
எம்வீட்டில் ஒருமாதம் எரியவில்லை அடுப்பதுவே
எம்முணவு பேரீத்தம் பழத்துடனே நீர்மட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

462.
குறைவாக இருந்தாலும் தொடராகச் செய்யும்அமலே
இறைவிரும்பும் அமலென்று இறுதிநபி சொன்னார்கள்.

463.
ஒருமனிதர் நபியிடத்தில் உபதேசம் கேட்டுவந்தார்
"ஒருபோதும் சினக்காதீர்!" என்றார்கள் உத்தமரே.
பிறகுமவர் பலதடவை பிரியமுடன் உபதேசம்
புரிதற்கு வேண்டியதும் பலதடவை நபிநாதர்
"ஒருபோதும் சினக்காதீர்!" என்றேதான் உரைத்தார்கள்.

464.
அஞ்சுகிறேன் உங்களுக்கு அளவில்லாச் செல்வமதும்
விஞ்சுகிற செழிப்பெல்லாம் விதவிதமாய்ப் பெருகுவதும்.

465.
உயிரதையும் பொருளதையும் உயரிஸ்லாம் ஓங்குதற்கு
அயர்வின்றி அர்ப்பணிப்போர் அகிலத்தில் மேலவராம்;
முயற்சியுடன் தனித்திருந்து முன்னோனை வணங்குபவர்
நயம்பெற்ற நல்லவராம் நபிநாதர் நவின்றார்கள்.

466.
அன்னியராம் பெண்ணுடனே ஆணொருவர் தனித்திருத்தல்
கண்டிப்பாய் ஹராமென்று கனிநபிகள் கருத்துரைத்தார்.

467.
அன்பாளர் அபூஹுறைறா அழகில்லாக் கனமான
ஆடைகளை அணிவார்கள்; அருந்துதற்கு உணவின்றி
அன்னாரோ பசியாலே வீழ்ந்தாரே வீதியிலே
கண்டவர்கள் பைத்தியமோ எனக்கருதிக் கொண்டார்கள்
புண்படவே மேனியது கழுத்தேறி மிதித்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*468.*

உடைந்துள்ள பாத்திரத்திற் பானங்கள் பருகுவது
தடையென்றார் நபிநாதர்; தவறாது கவனிப்பீர்!

*469.*

கடன்பெற்ற கடனாளி கடனிறுக்கக் கஷ்டமுற்றால்
கடனதனைக் கழித்திடுக! கருணையிறை பிழைபொறுப்பான்.

*470.*

இரந்து திரியாது ஏகிக் காட்டுக்கு
விறகைத் தோள்சுமந்து விற்றுப் பிழைப்பதுவோ
இரந்து கேட்பதிலும், இருப்போர் ஈந்துதவி
இரங்கல், அல்லாது ஏசித் துரத்தலிலும்
சிறந்த தாகுமென நபிகள் நவின்றார்கள்.

*471.*

இகத்தில் இரப்பவர்கள் இணையும் மறுமையிலே
முகத்திற் தசையின்றி முனங்கித் திரிவார்கள்.

*472.*

மூன்றை அல்லாஹ்வும் முற்றாய் வெறுக்கின்றான்:
வீணாய்ப் பேசுவது, பொருளைச் செல்வத்தை
வீணாய்ச் செலவிடுதல், வெறுக்கும் யாசகமாம்.

*473.*

ஆண்மக்கள் இருவரது ஆதரவாய்க் கைப்பிடித்துக்
கூன்விழுந்த முதுமனிதர் நீண்டதொலை நடந்துவந்தார்
கண்டநபி, இக்கிழவர் கால்நடையாய் வருவதுமேன்?
என்றங்கு இருந்தோரைக் கேட்கையிலே, அங்கிருந்தோர்
நீண்டதொலை நடப்பதற்கு நேர்ச்சையிவர் வைத்துள்ளார்
என்றவர்கள் சொன்னார்கள்; இதைக்கேட்ட நபிமணியோ
வன்முறையாய்த் தனையொருவர் வருத்துவதை வல்லயிறை
இன்செயலாய் ஏற்கவில்லை இறைவனுக்குத் தேவையில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்முறையாய் வாகனத்தில் ஏறியவர் செல்லட்டும்
என்றுநபி முதியவர்க்கு ஏற்றமுடன் சொன்னார்கள்.

474.
உடலுழைப்பால் பெறுமுணவே உணவுகளிற் சிறந்ததுவாம்
உடல்வருத்தி உழைத்தார்கள் உயர்வான நபிதாவூத்.

475.
பொருள்வாங்கிப் பொருள்விற்றுப் பொருத்தமுடன் வாழுகின்ற
பொன்னான மனிதருக்குப் பொழிந்திடுக இறையருளும்!

476.
மரமொன்றை யொருமுஸ்லிம் மனமொப்பி நட்டிவிட
உரமிட்டு விவசாயப் பயிரொன்றை விதைத்துவிட
மிருகமதும் பறவையதும் மேலான மானிடரும்
விருப்புடனே அதையுண்டால் விதைத்திட்ட மனிதனுக்கு
தருமத்தின் கூலியது கிட்டுமென்றார் நபிநாதர்.

477.
குவலயத்திற் குழப்பங்கள் கூடுவது பெண்களது
அவலத்தால் எனநபிகள் அறிவுறுத்தி நின்றார்கள்.

478.
காடேகி விறகொடித்துக் கனமாகத் தோள்சுமந்து
நாடேகித் தொழிற்செய்தல், நலிவாகக் கையேந்தி
வீடுவீடாய்த் திரிவதினும் விசேடமென நபிசொன்னார்.

479.
கடன்பெற்ற மனிதரவர் கடனிறுக்கத் தவறியதும்
கடனளித்த மனிதரவர் கடன்கேட்டுச் சண்டையிட்டார்;
உடனறிந்த நபியவர்கள் ஒருதோழர் தமையழைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடனளிக்க வசதியற்ற கடனாளிக் குதவிடுக!
கடனளித்த மனிதருக்குக் கடன்தொகையைக் கொடுங்களென்றார்.

480.
கடனுடனே மரணித்த மனிதரினைத் தொழுவிக்கும்
கடமையினைச் செய்வதற்குக் கருணைநபி மறுத்தார்கள்.

481.
"கடன்பெறலும், தீச்செயலும் கணமேனும் அணுகாது
திடமாகக் காத்தருள்க தேனிறையே!" எனநபிகள்
எப்போதும் தொழுகையிலே இறைஞ்சிடுவார்; இன்தோழர்
அப்படியே இறைஞ்சுவதன் அகமியத்தைக் கேட்டார்கள்
"பிறரிடத்தில் கடன்பெற்றோன் பேசிடுவான் பொய்யதிகம்
பிறருக்கு வாக்களித்துப் பின்னரதை மீறிடுவான்"
பெருமானார் இதைக்கூறிப் பிழைகடனைத் தூற்றினர்காண்.

482.
கனிவான நபிமணிக்குக் கடன்கொடுத்த ஒருமனிதர்
துணிவாகக் கடனிறுக்கக் கேட்டங்கு வந்துற்றார்
கனிவாகப் பேசாமல் கடுஞ்சொல்லைப் பாவித்து
தனக்குரிய கடன்பொருளைத் தருமாறு சத்தமிட்டார்
திருநபியின் தோழர்கள் திரண்டார்கள் கொதித்தார்கள்
"பெறவந்தோன் கடன்தந்தோன் பேசுவதிற் பிழையில்லை
உரத்தவனும் பேசுவதைத் தடுக்காதீர் பேசட்டும்!
சிறப்பாகக் கடன்திருப்பிக் கொடுப்பதுவே சிறப்பென்று"
அருட்தூதர் தோழர்களை அமைதிப் படுத்தினரே.

483.
கடனீந்து பிறருக்குக் கனிவீந்த பணக்காரர்,
"கடனாளி கடன்தீர்க்க வழியேது மில்லாது
முடையாகிப் போவாரேல், முனைந்தந்தக் கடனாளி
கடன்தொகையைக் கழித்திடுக! கடன்திருப்பிக் கேட்காதீர்!"
திடமாகத் தன்னுடைய திருமகனைப் பணித்தாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடனீந்து துணைநல்கிக் கடன்தள்ளு படிசெய்த
அன்பான மனிதரது பாவங்கள் அத்தனையும்
அன்பாளன் அல்லாஹு மன்னித்துக் கழித்திடுவான்"
என்றேதான் நபிநாதர் இன்மொழிகள் சொன்னார்கள்.

484.
நிகரில் கஃபாவின் நிழலில் நபியவர்கள்
சுகமாய்ச் சாய்ந்திருக்கும் போதில் ஒருமனிதர்
அகமே ஒடிந்தவராய் அங்கே வந்துற்று
"இகமே போற்றுகிற ஏந்தல் நபிமணியே,
சுகமே எமக்கில்லை சூழ்ந்த முஷ்ரிக்குகள்
பகைமைத் தனத்தாலே படுத்தும் பாடுபல
மிகவும் துன்பங்கள் மேலும் செய்கின்றார்"
முகமே சோர்ந்தவராய் முறையிட் டழுகின்றார்.
"முன்னர் வாழ்ந்தோர்க்கு மூண்ட துன்பங்கள்
எண்ணில் அடங்காது இரும்புச் சீப்பாலே
அன்னார் தசையெல்லாம் சீவப் பட்டனவே
ஒன்னார் வாளெடுத்து உண்மை மக்களது
மின்னும் சிரமறுத்துப் பிளந்தார் இரண்டாக
அன்னார் ஒருபோதும் அருளார் இஸ்லாத்தின்
மின்னும் நெறியிருந்து மீண்டு போகவில்லை
இன்னும் உங்களுக்கு இதுபோல் துன்பமில்லை
பின்னர் காலமுறும் பேணும் பிரயாணி
ஸன்ஆ தலமிருந்து ஹழ்ற மௌத்துவரை
துன்பம் துயரின்றித் தொடர்ந்து பயணிப்பான்
இன்பக் காலமது இனிதாய்த் தோன்றுமென்றார்.

485.
முத்தாம் நபித்தோழர் முஸ்அப் இப்னுஉமைர்
சொத்தும் சூழ்பொருளும் மெத்தப் பெற்றவராம்
நித்தம் சிறக்கின்ற நேர்மை இஸ்லாத்தில்
சித்தம் மகிழ்ந்தவரும் சேர்ந்து செழித்தபின்பு
சொத்தும் பொருள்பலவும் தூக்கி வீசிவிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தச் சிறந்தநெறி இஸ்லாம் மேலோங்க
முத்தாம் நபியுடனே மதீனா நகர்சேர்ந்தார்
யுத்தம் உஹ்தினிலே மெத்தப் போராடி
முத்தாம் உயிர்துறந்தார் மேலாய் ஷஹீதானார்
உத்தமர் அவருடலை உவந்தே மூடுதற்கு
மெத்தப் போதியதாய் போர்வை இருக்கவில்லை
தலையை மூடுகையில் காலோ தெரிகிறது
தலையோ தெரிகிறது காலை மூடுகையில்
சீலத் திருநபியார் செய்தி யிதுவறிந்து
தலையைத் துணியாலும் காலைக் குழையாலும்
நிலையாய் மூடுமென நிகழ்த்தி நின்றார்கள்.

486.
தினமும் காலையிலே திறனார் இருமலக்கு
நனிதாய்ப் புவிவந்து "நன்றே தருமஞ்செய்
மனிதப் புனிதருக்குச் செல்வம் பெருக்கியருள்!
கனிந்தே ஈயாத கஞ்சர் தமக்கிங்கு
முனிந்தே செல்வத்தை முடக்கிச் சுருக்கிடுவாய் !"
பணிந்தே இறையவனைப் பணிவாய்ப் பிரார்த்திப்பர்.

487.
"சிறுசாட்டை வைக்குமிட மளவுக்கு சுவனத்தில்
சிறியஇடம் கிடைப்பதுவோ செகத்தினையும் அதைச்சேர்ந்த
பொருட்களையும் விடமேலாம்" என்றார்கள் நபிநாதர்.

488.
மரமுண்டு சுவனத்தில் பயணிக்கும் ஒருமனிதர்
ஒருநூறு வருடங்கள் வாகனத்தில் ஓடினாலும்
மரமதனின் நிழல்முடியும் இடங்காண மாட்டானே.

489.
கொட்டாவி இடுதல் கொடும்ஷைத்தான் செயலாகும்
கொட்டாவி வரும்போது முடிந்தளவு தடுத்திடுக !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டாவி விடுமொருவர் 'ஹா'வென்னும் போதினிலே
கெட்டவனாம் ஷைத்தான் கிளர்ந்து சிரிக்கின்றான்.

*490.*
கடன்பெற்ற ஒருமனிதர் கடனிறுக்கும் போதினிலே
கடன்பெற்ற பொருளைவிடச் சிறந்தபொருள் கொடுத்திடுதல்
கண்ணியத்துப் பண்பெனவே கனிந்துரைத்தார் நபிநாதர்.

*491.*
காலையிலும் மாலையிலும் கண்ணியமாய்த் தொழுவதற்குச்
சீலமுடன் செல்கின்ற சிறப்பான மனிதருக்கு
மேலான பாக்கியங்கள் மிகக்கிடைக்கும் என்றார்கள்.

*492.*
ஒருகாலம் உருவாகும் ஒருமனிதன் அப்போது
பெறும்பொருளோ எவ்வாறு பேறாகக் கிடைத்ததென்று
கருதானே; ஹலாலாக அல்லதது ஹறாமாகப்
பெருகியதா என்றவனும் பெரிதுவந்து பார்க்கானே.

*493.*
பள்ளியிலே நுழையுமவர் பக்குவமாய் இருறக்அத்
நல்லமுறை தொழுகாது நாடியிருந் திடவேண்டாம் !

*494.*
வெறுப்பான கனவொன்றைக் காண்கின்ற மனிதரவர்
வெறுப்புடனே இடதுபுறம் துப்பிடுக! விரட்டுண்ட
வெறுப்பான ஷைத்தானை விட்டவரும் காப்புதனை
இறைவனிடம் வேண்டியபின் மறுபக்கம் படுத்திடுக!

*495.*
ஏற்றமுறு ஈமானின் எழிலான பிரிவுகளோ
சாற்றுமொரு அறுபதுவாம் அல்லதது எழுபதுவாம்
ஏற்றமுள்ள பிரிவதுவோ லாஇலாஹ இல்லல்லாஹ்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுமொரு சிறுபிரிவோ தோன்றுகிற தடைகளினை
ஏற்றமுடன் பாதையிலே இருந்தகற்றி விடுவதுவாம்;
தோற்றுமொரு வெட்கமது துலங்குமொரு பிரிவாகும்.

**496.**
பொருந்தாத வழிகளிலே பொருளீட்டும் பேர்களெல்லாம்
பொருந்தாத நரகத்திற் பொசுங்கிடுவார் என்றார்கள்.

**497.**
இஷாவுக்கு முன்னாலே தூங்குவதைப் பின்னாலே
இரவெல்லாம் விழித்திருந்து வீண்பேச்சுப் பேசுவதை
இசையாது நபியவர்கள் எப்போதும் வெறுத்தார்கள்.

**498.**
அருட்கொடைகள் இரண்டுண்டு அருளான அவ்விரண்டை
பொருத்தமுடன் பேணாதோர் போய்வீழ்வார் நஷ்டத்தில்
பெறுமதியாம் உடல்நலமும் பேணுமொரு ஓய்வதுமாம்.

**499.**
இறையோனை, இறுதிநாள் வேளையினை நம்புபவர்
உரைத்திடுக நல்வார்த்தை! இல்லையெனில் வீண்வார்த்தை
உரையாது வாய்மூடி இருந்திடுக! என்றார்கள்.

**500.**
இருவார்த்தை எமக்குண்டு; இறைவனுக்குப் பிரியமவை;
அருமையுற மொழிவதற்கு அவையிலகு நாவினுக்கு;
மறுமையிலே மீஸானைக் கனப்படுத்தி வைக்குமவை.
திருநாவால் ஓதிடுக "சுப்ஹானல்லாஹ் வபிஹம்திஹீ
சுப்ஹானல்லாஹில் அழீம்".


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் பிற நூல்கள்

1. **புனித றமழான் புகழ் பாடல்கள் :** தென் இந்தியா அதிராம்பட்டினம் அல்லாமா அப்துல் காதிர் ஆலிம் (மர்ஹூம் 'ஷெய்குல் பலாஹ்' அவர்களின் பாட்டனார்) அவர்களால் அறபியில் எழுதப்பட்ட அறபுப் பாடல்களின் தமிழ்க் கவிதைகள்.
   வெளியீடு: காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி மாணவர் மன்றம், 1972

2. **நபிமொழி நாற்பது :** 40 ஹதீஸ்களும் பொருளும் தமிழ்ப் பாடல்களும்.
   வெளியீடு: காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி

3. **நாயகப் புகழாரம்:** 300 ஸலவாத் பாடல்கள்.
   வெளியீடு: காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக் கல்லூரி

4. **முத்தாரம்:** கவிதைத் தொகுதி
   வெளியீடு: அல்ஹாஜ் எஸ்.எம். ஹனீபா, தமிழ் மன்றம், கல்ஹின்னை

5. **முழுமதி:** கவிதைத் தொகுப்பு.
   வெளியீடு: நவ இலக்கிய மன்றம், காத்தான்குடி, 1985

6. **வரலாற்றில் ஓர் ஏடு (1 ஆம் பாகம்)**
   வெளியீடு: முதலியார் சின்ன லெப்பை கல்வி நிறுவனம், மட்டக்களப்பு, 1993

7. **வரலாற்றில் ஓர் ஏடு (2ஆம் பாகம்)**
   வெளியீடு: ஸலாமத் பதிப்பகம், சென்னை, 1995

8. **வல்ல அல்லாஹ்வை வணங்கி வாழ்க (உரை நூல்)**
   வெளியீடு: காத்தான்குடி ஜாமி உழ்ழாபிரீன் இஸ்லாமிய நூல் நிலையம், 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. **கனீமதுல் இஸ்லாம் பீ நிழாமில் அஹ்காம் :** அக்கரைப்பற்று முகம்மது யூசுப் ஆலிம் புலவர் இயற்றிய இஸ்லாமிய சட்டக் களஞ்சியம் கவிதை நூலின் பழைய ஏட்டுப் பிரதியை மீள எழுதியது)வெளியீடு: உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, இலங்கை, 2002

10. **காத்தான்குடி வரலாறு ஓர் அறிமுகம்** (எழுத்தாளர் குழுவில் இடம்பெற்று எழுதியது)
வெளியீடு: காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம், 2004

11. **அதிரை அப்துர்ரஹ்மான் ஹாஜியார் அந்தாதி** (சங்கைக்குரிய ஷெய்குல் பலாஹ் அவர்களின் சகோதரர் எழுத்தாளர் அப்துர் ரஹ்மான் ஹாஜியார் அவர்கள் பற்றியது)
வெளியீடு: காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி, 1998

12. **இலக்கிய வானில் இலங்கிடும் தாரகை** (காத்தான்குடி நவ இலக்கிய மன்றப் பொன்விழா புகழாரம்)
வெளியீடு: நவ இலக்கிய மன்றம், காத்தான்குடி, 2010

13. **செழிக்குஞ் செல்வம் (சிறுவர் பாடல்கள்)**
வெளியீடு: டொட் பிரிண்ட்ஸ், கொழும்பு, 1995

14. **தேன் துளிகள்** (இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பான 'வரலாற்றில் ஓர் ஏடு ' நிகழ்ச்சித் தொகுதி. வெளியீடு: காத்தான்குடி 5ஆம் குறிச்சி மர்ஹூம் O.E.M முஸ்தபா அவர்களது நினைவு வெளியீடு, 2010

15. **நன்னெறி கூறும் நபிமொழி நூறு (ஸலவாத் பாடல்கள்)** 2015

16. **அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஹாஜியார் வாழ்வும் பணியும்**
வெளியீடு: பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், காத்தான்குடி, 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. **பலாஹீகள் பாமாலை** - கவிதை (காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹில் பயின்று வெளியான பலாஹீ மௌலவிகளின் விபரம் - கையெழுத்தில்)

18. **அறிவுச் சுரங்கம்** (அறபுப் பழமொழிகளும், அறிவுரைகளும் -தமிழாக்கம் (கையெழுத்தில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இமாம் புஹாரீ (றஹ்) அவர்களது "ஸஹீஹுல் புஹாரீ" எனும் சரியான ஹதீஸ்களைக் கொண்ட நூல் குர்ஆனுக்கு அடுத்ததாக உள்ள இஸ்லாமிய சமய நூல்களில் ஒன்றாகவும், உலகம், மனித வாழ்க்கை, இறைவன் பற்றிக் கூறுகின்ற முக்கிய நூல்களில் ஒன்றாகவும் அமைந்தது. இந்நூலில் உள்ள 500 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து அதுவும் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபட்ட அம்சங்களை உள்ளடக்கி கவிஞர் இந்நூலை ஆக்கியிருப்பது கவனிக்கத்தக்கது. ஒட்டு மொத்தமாக இந்நூலை பார்க்கும் போது இஸ்லாம் வாழ்க்கையோடு மிக நெருக்கமாக தொடர்புபட்டுள்ளதனைக் கண்டுகொள்ள முடிகிறது. அத்தகைய ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து மொழி பெயர்த்துக் கவியாக்கிய கவிஞர் பாராட்டுக்குரியவரே.

சாதாரண வாசகனொருவன் மிக இலகுவாக புஹாரீ கிரந்தத்தை எடுத்து வாசிப்பதற்கு இருக்கும் சாத்தியத்தை விட இந்நூலை வாசிக்கும் சாத்தியம் அதிகமுண்டு. எடுத்தவுடன் வாசித்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை இந்நூல் தருவது குறிப்பிடத்தக்கது."

பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ்

பைத்துல் பறகத் பதிப்பகம்,
ஊர் வீதி, காத்தான்குடி

ISBN 978-955-8633-01-4

விலை ரூபா.400.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org